24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 17 கார்த்திகை 27ஆம் நாள் வியாழக்கிழமை 13 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# ரணில் ஏமாற்றிய போதிலும் கூட்டமைப்பு நேற்று ஆதரவு


யாழ்ப்பாணம், டிசெ. 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அதனைச் செயற்படுத்துவேன் என்று எழுத்துமூல உறுதிப்பாட்டு ஆவணத்தை வழங்குவேன் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தபோதும், அவர் அதனைச் செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர் ஏமாற்றினார். ஆனாலும், ரணில் மீதான நம்பிக்கை வாக்கெடுப் >> 25

## காலியில் பலம்காட்ட தயாராகிறது ஐ.தே.க

கொழும்பு, டிசெ. 13
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் காலிமுகத் திடலில் மிகப்பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா இது தொடர்பான அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.
"ஜனநாயகத்தை நிலைநாட்டுவதன் மூலமே பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமானால் கட்சி பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எனவே ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் நீதிக்கான போராட்டத்தில் கைகோர்க்குமாறும் அரச தலைவர் >> 25

# ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு
## புதிய அரசமைப்பு வந்தே தீரும்

### நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றதன் பின்னர் நாடாளுமன்றத்தில் ரணில் நேற்றுத் திட்டவட்டம்



கொழும்பு, டிசெம்பர் 13
சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை நாம் ஒற்றையாட்சிக்குள் பெற்றுக் கொடுப்போம். அதற்காக உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு நிச்சயம் வந்தே தீரும். இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் மாறவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். >> 25

## அரசின் பங்காளியாக மாற வாய்ப்பில்லை!

*மாவையும் திட்டவட்டம்*

கொழும்பு, டிசெ. 13
ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவதற்கான தீர்மான வரைவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்துள்ள போதிலும் நாம் அரசின் பங்காளியாக ஒரு போதும் செயற்படப் போவ >> 25

## அரசின் பங்காளியாக அன்றி எதிர்த் தரப்பிலிருந்து ஆதரவு

*ரணிலுக்கு வாக்களித்தது குறித்து சுமந்திரன் இவ்வாறு விளக்கம்*

கொழும்பு, டிசெ. 13
அரசின் பங்காளியாக இணையாது எதிர்க்கட்சியாக இருந்து ஆதரவு வழங்குவது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கைத் தீர்மான >> 25

## மகிந்த, ரணில் இருவருக்கும் தலைமைக்குத் தகுதி இல்லை

### திசாநாயக்க 'பளார்' கருத்து



கொழும்பு, டிசெ. 13
மகிந்த ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்க இருவரும் தலைமை அமைச்சர் பதவிக்குப் பொருத்தமற்றவர்கள். இதனால் அவர்கள் இருவரும் மாறிமாறி ஆட்சிக்கு வருவதால் இந்த நாட்டில் எவ்வித அபிவிருத்திகளும் ஏற்படப் >> 25

### கூட்டமைப்பின் நிபந்தனைகளில்

## புதிய அரசமைப்பைப் பற்றி மாத்திரமே வாய் திறந்தார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, டிசெ. 13
நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் மாத்திரம் குறிப்பிட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த ஏனைய நிபந்தனைகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் மூச்சும் காட்டவில்லை.
நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். அவரது உரையில், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு சில நிபந்தனை >> 25

## நாம் தவறு செய்தோம் ஏற்றுக்கொள்கிறார் ரவி

கொழும்பு, டிசெ. 13
கடந்த காலங்களில் நாம் தவறுகள் செய்தோம். அவற்றைத் திருத்திக் கொண்டு புதிய அரசை அமைத்து அதை முன்னுக்குக் கொண்டு செல்வோம். அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியின் குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொள்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க >> 22

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

## பாடசாலைகளின் அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகின!

யாழ்ப்பாணம், டிசெ. 13
2018ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையிலான பாடசாலை அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் நேற்றைய தினம் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன. >> 25

## ரணில் விக்கிரமசிங்க மீது நாடாளுமன்றம் நம்பிக்கை

### மைத்திரிக்கு கரு கடிதம்

கொழும்பு, டிசெ. 13
ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நம்பிக்கைத் தீர்மானம் நாடாளுமன்றில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது என்று தெரிவித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசே >> 25

## தீர்ப்பு சாதகமாக அமையாவிடின் பொதுவாக்கெடுப்புக்கு செல்வோம்

*மைத்திரியின் திட்டத்தை வெளிப்படுத்துகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன*

கொழும்பு, டிசெ. 13
நாடாளுமன்றத்தைக் கலைத்து அரசிதழ் அறிவிப்பு வெளியிட்ட அரச தலைவரின் முடிவு தவறு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், பொது வாக்கெடுப்புக்குச் செல்வோம் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார். >> 25



# மகிந்தவின் ஆட்சிக்கு ஜனவரி வரை தடை!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ. 13

**தலைமை அமைச்சர் பதவியில் மகிந்தவும் அவரின் அமைச்சரவையும் ஜனவரி 16ஆம்திகதிவரையில்செயற்படமுடியாது என்று மேன்முறையீட்டுநீதிமன்றம் நேற்றுக்குறிப்பிட்டது. மகிந்தவுக்கும்அவரின்அமைச்சரவைக்கும்எதிராகத்தாக்கல் செய்யப்பட்ட யாதுரிமை எழுத்தாணை மனு மீதான விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தடை நீடிக்கப்பட்டது.**

தலைமைஅமைச்சராகமகிந்தராஜபக்ச செயற்படுவதையும், அவர்தலைமையிலானஅமைச்சரவையின்செயற்பாட்டுக்கும் தடை விதிக்க வேண்டும் என்று கோரி அவர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, மக்கள்விடுதலைமுன்னணி ஆகியஅரசியல்தரப்புக்களின்122நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாகத் தாக்கல் செய்த மனு மீது கடந்த 3ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. அத்துடன் மனு மீதான மீள் பரிசீலனையை 12ஆம் திகதி வரை (நேற்று) ஒத்திவைத்திருந்தது.

இந்த நிலையில் குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி பீ.பத்மன் சூரசேன மற்றும் அர்ஜுன ஒபேசேகரஆகியநீதிபதிகள்குழாம்முன்னிலையில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, மனுதாரர்கள் சார்பில் உரிய ஆவணங்களுடன் கூடிய அறிவித்தல் பிரதிவாதிகளுக்கு உரிய தருணத்தில் அனுப்பிவைக்கப்படவில்லை. ஆகவே மேற்படி மனுக்களை உடனடியாக நிராகரிக்க வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட பிரதிவாதிகள் 49 பேர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

எனினும்இந்தக்கோரிக்கையைமேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பீ.பத்மன் சூரசேன நிராகரித்ததோடு, "பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனைகள்இருப்பின்ஜனவரிமாதம்4ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ மன்றில் மனுக்கள் ஊடாக தாக்கல்செய்யமுடியும்" என்றுகுறிப்பிட்டார். அத்துடன்பதில்மனுக்கள்ஜனவரிமாதம் 11ஆம் திகதி தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று மனுதாரர்களுக்கும் உத்தரவிட்டார். இந்தமனுக்கள்மீதானமீள்பரிசீலனை ஜனவரி 16, 17, 18ஆம் திகதிகளில் இடம்பெறும் என்றும் அதுவரையில்அமைச்சரவையின்செயற்பாடுகளுக்கு எதிரான இடைக்கால உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ம71)

# தீர்ப்பு மட்டும் வந்திருந்தால் தீர்வு தந்திருப்பார் மைத்திரி

## கம்மன்பில கண்டுபிடிப்பு



கொழும்பு, டிசெ. 13

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றம் காலம் தாழ்த்தாமல் தீர்ப்பை வழங்கியிருந்தால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனதான் குறிப்பிட்டதைப் போன்று தீர்வைத் தந்திருப்பார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

கொழும்பில் நேற்று நடைபெற்றசெய்தியாளர்சந்திப்பிலேயேஅவர்இவ்வாறுதெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளுக்குபல்வேறு தீர்வுகளை அரச தலைவர் முன்வைத்தும் அதற்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சியினர்செயற்பட்டனர். அரசியல் நெருக்கடிக்கு மக்களே தீர்வை வழங்க வேண்டும்என்றுகருதிஅரச தலைவர் கடந்த மாதம் 9ஆம் திகதிநாடாளுமன்றத்தைக்கலைத்துபொதுத்தேர்தலுக்கானதிகதிநிச்சயிக்கப்பட்டு வர்த்தமானியையும் வெளியிட்டார். மக்கள் மத்தியில் சென்று வாக்குகளைக் கோரத் தைரியம் இல்லாத ஐக்கிய தேசிய கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய தரப்பினர் கூட்டாக இணைந்து நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடினார்கள். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்பை குறித்த தினத்தில் பிறப்பித்திருந்தால் அரச தலைவர் கடந்த செவ்வாய் கிழமை நடைபெற்ற சிறீலங்கா சுதந்திர கட்சியின் மாநாட்டில் ஒரு வாரத்துக்குள் அரசியல் நெருக்கடிகள் அனைத்துக்கும் தீர்வு தருவேன் என்று குறிப்பிட்டதைப் போல சிறந்த தீர்ப்பைத் தந்திருப்பார்.

மகிந்த தலைமையிலான அமைச்சரவைக்குமேன்முறையீட்டு நீதிமன்றம் ஜனவரி16ஆம்திகதிவரைதடை பிறப்பித்துள்ளது. இதனால் நாடு பெரும் அரசியல் மற்றும்பொருளாதாரநெருக்கடிகளை எதிர்கொள்ளும். இவை அனைத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினரும், சபாநாயகரும், தமிழ்த் தேசியகூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினருமே பொறுப்பேற்கவேண்டும்- என்றார். (ம61)

# ரணிலுக்குத்தான் ஆதரவு நம்பிக்கையும் அவர்மீதே

## நம்பிக்கைத் தீர்மான வரைபை முன்வைத்து சஜித் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 13

ரணில்விக்கிரமசிங்கவுக்குத்தான்நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆதரவும், நம்பிக்கையும் உள்ளது. இதுதான் உண்மைஎன்பதைஅனைவரும்புரிந்துகொண்டு அரசமைப்புக்கும், சட்டவாட்சிக்கும், சனநாயகத்துக்கும்மதிப்பளித்து அவரையே தலைமை அமைச்சராக நியமிக்கவேண்டும்என்றுஐக்கியதேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமானசஜித்பிரேமதாசதெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்குமாறு வலியுறுத்திய நம்பிக்கைத் தீர்மான வரைபை சபையில் நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

இலங்கையின் சனநாயகம் இருள் சூழ்ந்த யுகத்தில் பயணித்துக் கொண்டிருகிறது. அதிலிருந்து மீள்வதற்கே தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட வேண்டுமென்ற தீர்மான வரைபை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றேன். கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி முதல் அடுத்தடுத்து பலசந்தர்ப்பங்களில்அரசமைப்புபாரதூரமாக மீறப்பட்டுள்ளதால் மக்களின் இறையாண்மைக்குப் பாதிப்பும் பெரிய அளவில் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. தனியொருவரின் நிலைப்பாட்டில் அரசமைப்புக்கு முரணாக அரசொன்று அமைக்கப்பட்டது.

113 என்ற பெரும்பான்மை இருந்த தலைமை அமைச்சரை நீக்கிவிட்டு 85 பேர்கூட ஆதரவில்லாத ஒருவர் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதன் காரணமாக நாட்டில் அரசியல், பொருளாதார, சமூகமட்டத்தில்இவ்வாறு பாரதூரமானநெருக்கடிகளும், பாதிப்புகளும், இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. தலைமை அமைச்சர் ஒருவரை பதவியில்இருந்துநீக்குவதற்குநான்குமுறைமைகள் எமது அரசமைப்பில் உள்ளன. ஆனால், குறித்த முறைமைகளில் ஒன்றையேனும் கையாளாது தம்மையும், தனது தனிப்பட்ட நிலைப்பாட்டையும் மாத்திரம் எண்ணி நாட்டையும், ஆணையை வழங்கிய மக்களையும் புறக்கணித்து அரசமைப்புக்கும், நாட்டின் சட்டத்துக்கும், சனநாயகத்துக்கும் விரோதமான அரசொன்றை அமைத்தனர்.

சட்டத்துக்கு முரணான அரசொன்றை அமைத்தது மாத்திரமின்றி அவர்களின் பெரும்பான்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகஎமதுதரப்புஉறுப்பினர்களை பணம், பதவிகளைக் கொடுத்து வாங்கப்பார்த்தனர். ஆனால், அவர்கள் தமது மனசாட்சியைக் கட்டிக்காத்து நடந்து கொண்டுள்ளனர். நாடாளுமன்றில் பல சந்தர்ப்பங்களில் எமது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டியுள்ளோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் முதலில் பெரும்பான்மையை நிரூபித்தோம். பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பதில் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டினோம். குரல்பதிவில்பெரும்பான்மையை நிரூபித்தால் போதாது என்று கூறியதால் இலத்திரனியல் முறையில் மாத்திரமல்ல காட்ட வேண்டிய அனைத்து முறைகளிலும் எமது பெரும்பான்மையைக் காட்டியுள்ளோம்.

ஆனால், அரசமைப்பையும், சட்டத்தையும் மீறி சதித்திட்டங்கள் மூலம் எமது பெரும்பான்மையைஉடைக்கப்பார்த்தனர். ஒடுக்குமுறைகள், அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள், அரச பயங்கரவாதம் என்பவற்றைக் கொண்டு எம்மை உடைக்கப் பார்த்தனர். பொலிசார் மீது தாக்குதல் நடத்தினர். அடிதடியில் ஈடுபட்டு நாடாளுமன்ற மதிப்புக்கு பங்கத்தை ஏற்படுத்தினர். சபையினுள் இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொண்டுநாடாளுமன்ற கட்டத் தொகுதியில் ஊடகச்சந்திப்புகளை நடத்தி தாம் சுத்தமானவர்களென உலகத்துக்கு எடுத்துக்காட்டினர். அத்துடன், பௌத்த தர்மத்தை பாதுகாக்கும் புனிதர்களாகவும் தம்மைக் காட்டிக்கொண்டனர். தமக்கு பெரும்பான்மை இல்லை என்பதைஉணர்ந்துஅவர்கள்விலகிச்சென்றிருக்க வேண்டும். ஆனால், அதனை அவர்கள் செய்யவில்லை.

அரசமைப்புதான் எமது நாட்டின் அதியுச்ச சட்டமாகும்.

அதனைப் பாதுகாக்க வேண்டியது அனைத்துப் பிரசைகளினதும் தலையாய கடமையாகும். வேண்டுமென்றே பல சந்தர்ப்பங்களில் அரசமைப்பைமீறிஇந்தச்சதித்திட்டத்தைக் கொண்டுசென்றனர். அரசமைப்பை மதித்து உரிய முறைமையை பின்பற்றி எதனையும்செய்ய வேண்டும். அவைதான் சனநாயகத்தின் கூறுகள். அதன்காரணமாகஇன்றுரணில் விக்கிரமசிங்கவுக்குநாடாளுமன்றில் பெரும்பான்மை உள்ளதாக நிரூபிக்கின்றோம். இதுதான் உண்மை. அதற்கு மதிப்பளித்து அரசமைப்புக்கு உட்பட்டு அனைவரும் செயற்பட வேண்டும்.

எனவே, அரச தலைவரிடம் பகிரங்கமாகநாம்கோருவதாவது, இன்னமும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம். கடந்தஒக்டோபர்மாதம்26ஆம்திகதி இடம்பெற்றது சதித்திட்டம் என்பதை முழு நாடும் உணர்ந்து கொண்டுள்ளது. அதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ரணில்விக்கிரமசிங்கவைதலைமை அமைச்சராக நியமிக்குமாறு சபையின் பெரும்பான்மை ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என்றார். (ம)

## மீண்டும் பலம் காட்டினார் ரணில் நம்பிக்கைத் தீர்மானம் வெற்றி!

### மைத்திரி மகிந்த கூட்டணிக்கு 6ஆவது தடவையும் படுதோல்வி

ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்குமாறு கோரி அவர் மீதான நம்பிக்கையைஉறுதிப்படுத்தும் தீர்மானவரைபுநாடாளுமன்றத்தில் நேற்று 117 வாக்குகளால்நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றம்நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர்கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது தலைமை அமைச்சராகரணில்விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்து அவர் மீது நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மான வரைபை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச அவையில் முன்வைத்தார்.

சஜித் பிரேமதாஸ, ரவி கருண நாயக்க, மங்கள சமரவீர, மாவைசேனாதிராசா, அநுரகுமாரதிசாநாயக்க, ஜயந்த கருணாதிலக ஆகிய உறுப்பினர்களின் உரைகள் முடிவடைந்த பின்னர் வாக்கெடுப்புக்குரிய அழைப்பை சபாநாயகர் விடுத்தார். இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 117 வாக்குகளால் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. எதிராகஒருவாக்கு கூட அளிக்கப்படவில்லை. மகிந்த மைத்திரி கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைஅமர்வைநேற்றும் புறக்கணித்தனர். அண்மைக்கால அரசியல் மோதல்களில் அவர்களுக்குக் கிடைத்த ஆறாவதுதோல்விஇதுவாகும். தலைமை அமைச்சர் பதவியில் இருந்த மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம், மகிந்தவின் உரை மீதான வாக்கெடுப்பு, மகிந்தவுக்கு எதிராக இரண்டாவது முறையும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், தலைமை அமைச்சர் செயலகத்துக்கான நிதியை முடக்கும் தீர்மானம், அமைச்சுகளுக்கான நிதியை முடக்கும் தீர்மானம்என்பனமைத்திரி - மகிந்த கூட்டணிக்கு எதிராகஏற்கனவேநிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நிர்வாணக்கோலத்தில்மகிந்த தலைகுனியட்டும்மைத்திரி!

## கூறுகிறார் சம்பிக்க



கொழும்பு, டிசெ.13

மீண்டும் அரச தலைவராகும் ஆசையால் மைத்திரிபால, தலைமை அமைச்சராக மகிந்தவுக்கு முடிசூட்டி அழகுபார்த்தார். இப்போது மகிந்த தலைமை அமைச்சர்பதவியை இழந்துநிர்வாணக் கோலத்தில் நிற்கின்றார். அதைப்பார்த்துமைத்திரி வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்றஉறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயேமேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் மீண்டும் போட்டியிட மாட்டேன் என்றுதிரும்பத்திரும்பக்கூறிவந்தமைத்திரிபால சிறிசேனவுக்கு இப்போது பதவி ஆசை வந்துள்ளது. அரச தலைவர் தேர்தலில் மக்கள் முன்னால் வைத்த வாக்குறுதிகள் எல்லாம் இன்று காற்றில் பறந்துபோயுள்ளன.

குடும்ப ஆட்சிக்குத் தூபமிட்ட மைத்திரி அந்தத் திட்டம் நிறைவேறாததால் சர்வாதிகார ஆட்சியை நடத்துகின்றார். தினமும் அவரது வாயில்இருந்துவரும்சொற்கள் தோல்வியின் உச்சத்தைத் தொட்டுநிற்கின்றன. மீண்டும் வெற்றி பெற முடியாதவன், மக்களால் வெறுக்கப்படுபவனேஇறுதியில் சர்வாதிகார ஆட்சியைக் கையில் எடுப்பான். அந்த நிலைமைக்குள் அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனசென்றுவிட்டார். அவர் தானாகவே அரச தலைவர் பதவியில் இருந்து விலகிச் சென்றால்ஓரளவாவதுநன்மதிப்பைப் பெறுவார். இல்லையென்றால் படுமோசமானநிலையைஎதிர்கொள்வார்.

ஐக்கிய தேசிய முன்னணியாகியநாம்நாடாளுமன்றத்தில் பல தடவைகள் பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டியுள்ளோம். பெரும்பான்மைப் பலத்துக்கு மதிப்பளித்தே சபாநாயகர் செயற்படுகின்றார். ஆனால் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனசபாநாயகரை மதிக்காது, மகிந்தவை விடவும் மோசமாகச் சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுகின்றார். அதற்கு விரைவில் முடிவு கட்டுவோம். ஐக்கியதேசியமுன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குவோம் - என்றார்.

(ற.5)

# மன்னார் மனிதப் புதைகுழியை ஐ.நா. பொறுப்பேற்கவேண்டும்

## வலியுறுத்தி நேற்று மக்கள் போராட்டம்

மன்னார், டிசெ.13

**மன்னார் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் எலும்புக் கூடுகளை ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பேற்று, அவர்கள் தலைமையில் உரிய ஆய்வுகள், விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது.**




வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களைச் சேர்ந்தசட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், அரசியல்கைதிகளின்உறவினர்கள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவினர்கள்உள்ளிட்டபலநூற்றுக் கணக்கானோர் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது போராட்டத்தில் பங்கேற்றனர்.

மன்னார் நகர நுழைவாயிலில் சதொச நிறுவனத்துக்குகட்டடம்அமைப்பதற்காக நிலம் கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி தோண்டப்பட்டது. இதன்போது எலும்புக் கூடுகள்அவதானிக்கப்பட்டன. இதன்பின்னர்விடயம்நீதிமன்றத்தின்கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. நீதிமன்றஉத்தரவுக்கு அமைவாக அந்தப் பகுதி தோண்டப்பட்டது. இதுவரை 276 எலும்புகள் மீட்கப்பட்டன. கால்கள் இரண்டும் இரும்புச் சங்கிலியால்பிணைக்கப்பட்ட நிலையில் எலும்புகள் கடந்த வாரம் மீட்கப்பட்டிருந்தன. இதன் பின்னர் மன்னார் புதைகுழி தொடர்பில்பலரதுகவனமும்திரும்பியிருந்தது. இவ்வாறானதொருநிலையில், பொது அமைப்புக்களின்ஏற்பாட்டில்மன்னாரில் கவனவீர்ப்புப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், 'புதைக்கப்பட்டவர்கள்யார்?, புதைத்தவர்கள்யார்?", 'புதைக்கப்பட்டமனிதர்களுக்கு நீதி வேண்டும்", 'இவர்களை யார் இங்கு இரகசியமாகப் புதைத்தது", 'யார் இந்த அநியாயத்துக்குப் பொறுப்பு", 'இனியும் இன அழிப்பு வேண்டாம்", 'சித்திரவதையை உடனே நிறுத்துங்கள்" என்று கோசம்எழுப்பினார்கள்.

'நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பம் காரணமாக, மன்னார்புதைகுழிவிவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும் என்பதில் நம்பிக்கைஇழந்துவிட்டோம். ஐ.நா. இந்த விடயத்தில் தலையிட்டு, மன்னார் புதைகுழி தொடர்பில் முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டு விசாரணைகளை நடத்தவேண்டும்" என்று கோருவதாக போராட்டத்தில்பங்கேற்றகாணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் முடிவில் ஐ.நா. பொதுச் செயலருக்கு அனுப்பப்படவுள்ள மனுவை, ஏற்பாட்டாளர்களில் ஒருவர் வாசித்தார்.

அந்த மனுவில், 30 ஆண்டுகாலப் போர் மற்றும் போருக்குப் பின்னரான காலங்களில் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இன்று வரையில் அவர்களைப் பற்றி எதுவிதத் தகவலும் இல்லை.

எனினும் அண்மைக் காலங்களில் வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில்மனிதப்புதைகுழிகள்கண்டுபிடிக்கப்பட்டன. 2014ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டமனிதப்புதைகுழியில்இருந்து83 மனிதஎலும்புக்கூடுகள்அகழ்ந்தெடுக்கப்பட்டு அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

மன்னார்நகரநுழைவாயிலில்மற்றொரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 276 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 269 எலும்புக்கூடுகள்மன்னார்நீதிமன்றில்களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 6ஆம் திகதி அதிர்ச்சியளிக்கும் வகையில், கால்கள் இரண்டும் இரும்பு வ்ளையத்தினால் பிணைக்கப்பட்டநிலையில்எலும்புக்கூடு மீட்கப்பட்டது. சிறுபான்மைச்சமூகத்தினர் மத்தியில்இதுகவலையைஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் தற்போதைய் அரசியல்சூழலானது, சிறுபான்மையினருக்கு பாதுகாப்பற்ற ஆபத்தான சூழலை உருவாக்கியுள்ளது. இத்தகையசூழலில், மனிதப் புதை குழியில் இருந்து மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டு உரியமுறையில் பாதுகாக்கப்பட்டு மரபியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதற்கு எந்த நம்பிக்கையும் கிடையாது. ஐ.நா. செயலர்நாயகமானதங்களிடம், மனிதப் புதை குழிகளில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புகளைப் பாதுகாத்து மரபியல் பரிசோதனைக்கு உட்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும் எனக்கோருகிறோம் - என்றுள்ளது.

(5,56,60)

# இலங்கையர்கள் மொனோ ரயிலில் 2022 ஆம் ஆண்டு பயணிக்கலாம்

கொழும்பு, டிசெ.13

தூண்கள் மீது பயணிக்கும் இலத்திரனியல் தொடருந்துக்கான (மொனோ) தொடருந்துப் பாதைஅமைக்கும்பணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத்தகவலைதொடருந்துமுகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ வெளியிட்டுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் தொடருந்துப் பாதை கொழும்பு மாவட்டத்தின்கோட்டைதொடருந்துநிலையத்திலிருந்து, கொட்டாவ - மாலபால்ல வரையில் அமைக்கப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. தொடருந்துப் பாதைகள் இரண்டுமுதல்கட்டமாகஅமைக்கப்படவுள்ளன. இந்தப்பாதையில்5நிமிடங்களுக்கு ஒருதடவைதொடருந்துகள்பயணிக்கவுள்ளன. தொடருந்துப்பாதை அமைப்புக்காக அந்தப்பகுதியிலுள்ள ஆயிரம் குடும்பங்கள் வேறு இடத்துக்கு அனுப்பப்படவுள்ளன. இரண்டாம் கட்ட தொடருந்துப் பாதை கொட்டாவவிலிருந்து பாதுக்க வரையும், மூன்றாம் கட்டம் பாதுக்கையிலிருந்து அவிசாளை வரையும் அமைக்கப்படவுள்ளது. தொடருந்துப்பயணிகளில்10சதவீதமானோர்இந்தப்பகுதியில்தற்போதுஇயங்கும் சாதாரணதொடருந்துகளைப்பயன்படுத்துகின்றனர். இலத்திரனியல்தொடருந்துசேவைஆரம்பிக்கப்பட்ட பின்னர் 60 சதவீதமானோர் அதனைப்பயன்படுத்துவார்கள்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 2022ஆம் ஆண்டு தொடருந்துப் பாதை அமைப்புப் பணிகள் நிறைவடைந்து, இலத்திரனியல் தொடருந்துச்சேவை ஆரம்பமாகும் - என்றார். (5)

# பொலிஸாரின்சித்திரவதைகள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு முறைப்பாட்டுப் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் சித்திரவதைகள் தொடர்பில் 31 முறைப்பாடு கள் இந்த ஆண்டு கிடைத்துள்ளன. இது கடந்த ஆண்டைவிட அதிகமாகும். தனி மனித சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளும் கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளன. இவ்வாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் பொலிஸார் அத்துமீறிச் செயற்படுகின்றனர், தடுத்துவைத்திருப்பவர்களை சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றனர்என்றுஅடுக்கடுக்கானகுற்றச்சாட்டுக்கள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் மேற்படிதகவலை வெளியிட்டுள்ளார்.

பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு, கலைத்தூது கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் தினத்தை 70ஆவது ஆண்டாக கடைப்பிடிக்கின்றோம். மனித உரிமைகள் அறிவிப்பு 5 விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. சிவில் உரிமை, அரசியல் உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை, கலாசார உரிமைஆகிய5 விடயங்களையும் முதன்மையாக வெளிப்படுத்திநிற்கின்றன. மனிதஉரிமைகள்அறிவிப்பும் 500 இற்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

மனிதஉரிமைகள்அறிவிப்புஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள எல்லா உரிமைகளையும்மக்கள்அனுபவிக்கின்றார்களாஎன்பதுதான் இப்போது உள்ள கேள்வி. மனித உரிமை மீறல்கள் பலவற்றை நாங்கள் கண்முன்னே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஊடகங்களில் தினமும் இது தொடர்பான செய்திகள் வெளிவருகின்றன. மனித உரிமை மீறல்களை நாம் தொடர்ந்து பார்த்துப் பார்த்து பழக்கப்பட்டு, அது சாதாரண விடயமாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது பணிமனைக்கு கடந்த நவம்பர் மாதம் வரையில் 278 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனாலும், ஆயிரத்து500பேர்வரையில்மனிதஉரிமைகள்ஆணைக்குழுவை நாடிவந்தார்கள். அவர்கள்ஏதோஒருவகையில்மனிதஉரிமைகள்மீறப்பட்டதால்பாதிக்கப்பட்டுள்ளார்கள். சட்டவரைமுறைக்கு உட்பட்ட 278 முறைப்பாடுகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

தனிப்பட்டசுதந்திரத்துக்குஏற்பட்டபாதிப்புத் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பொலிஸாரால்கைதுசெய்யப்படுவர்கள், தடுப்புக் காவல் நிலையங்களில் தாக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பில் மாத்திரம் 31 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சித்திரவதைகள்தொடர்பானமுறைப்பாடுகள்அதிகரித்துள்ளன. இலங்கையில் சித்திரவதை என்பது குற்றமாக உள்ள நிலையிலேயே இவ்வாறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தொந்தரவுசெய்தல்தொடர்பில் 27 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சட்டத்துக்குப் புறம்பாக தடுத்து வைத்தல் தொடர்பில் 13 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அரச நிறுவனங்களிடம் முன்வைத்த கோரிக்கைகள்நிறைவேற்றப்படவில்லை, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்து 71 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றார்.

(5,7)

# இரணைமடுக் குளம் திறப்பு நிகழ்வுக்கு கூட்டமைப்பை ஏன் அழைக்கவில்லை?

## ஆளுநரிடம் விளக்கம் கேட்டார் மைத்திரி

யாழ்ப்பாணம், டிசெ. 13

**இரணைமடுக் குளம் விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் அழைப்புவிடுக்கப்படவில்லை என்று வடக்குமாகாண ஆளுநரிடம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.**



இரணைமடுக் குளம் கடந்த வெள்ளிக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் விவசாயி களிடம் கையளிக்கப்பட்டது. வான் கதவும்அரசதலைவரால்திறந்துவைக்கப்பட்டது. வடக்குமாகாணஆளுநர் அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குஅழைப்புவிடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் மைத்திரியுடனான நேற்றைய சந்திப்பில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியது. உடனடியாக வடக்கு மாகாண ஆளுநருக்கு அலைபேசி அழைப்பு எடுத்து, கூட்டமைப்பை ஏன் அழைக்கவில்லை என்று வினவி யுள்ளார். அதற்கு ஆளுநர் அலைபேசியில் வழங்கிய பதிலை 'சரி, சரி" என்று கேட்டு அழைப்பைத்துண்டித்துள்ளார். (5)

# வவுச்சர்களை வழங்க மைத்திரி பணிப்புரை



கொழும்பு, டிசெ. 13

கூட்டுஅரசின்கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசத்தின்படத்துடன் அச்சிடப்பட்டிருந்த, மாணவர்களுக்கானசீருடைத்துணிஉறுதிச்சீட்டுக்களை(வவுச்சர்களை)விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், மைத்திரிபால சிறிசேனதலைமையிலானஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யும் இணைந்து கூட்டு அரசு அமைத்திருந்தன. கூட்டு அரசில்கல்விஅமைச்சராகஅகில விராஜ்காரியவசம்பதவிவகித்திருந்தார்.

அவரின் படத்துடன், மாணவர்களுக்கான சீருடைத் துணிஉறுதிச்சீட்டுக்கள்அச்சிடப்பட்டு தயார் நிலையில் இருந்த போது, ஒக்ரோபர் 26ஆம் திகதி, கூட்டு அரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியேறியிருந்தது.

இதைஅடுத்து, மகிந்த ராஜபக்ச தலைமைஅமைச்சராகநியமிக்கப்பட்டிருந்தார். அவரது அரசில் கல்வி அமைச்சராகநியமிக்கப்பட்டவிஜயதாசராஜபக்ச, பாடசாலைமாணவர்களுக்குஉறுதிச்சீட்டுக்கள்வழங்கப்படாதுஎன்றும், பழையபடிசீருடைத் துணியே மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார். அமைச்சரவையிலும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

தற்போதுநீதிமன்றஉத்தரவுகளால், மகிந்த ராஜபக்ச அரசு செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களுக்கான சீருடைத் துணிக்கு கேள்விப்பத்திரம் கோரி, அதனை விநியோகிப்பதற்கு போதிய கால அவகாசம் கிடைக்காது என்பதால், ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த, அகிலவிராஜ்காரியவசத்தின்படத்துடன் கூடிய உறுதிச்சீட்டுகளை வழங்க அரசதலைவர்உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி வலயக் கல்விப் பணிமனைகளில் இந்த உறுதிச்சீட்டுக்களைப் பெற்று, முடிந்தால்பாடசாலை விடுமுறைக் காலத்தில் விநியோக நடவடிக்கை எடுக்குமாறும்அதிபர்களுக்குஅறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (5)

# இலங்கை –சிங்கப்பூர் உடன்படிக்கைநிறுத்தம்


கொழும்பு, டிசெ. 13

இலங்கை -சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுஊக்குவிப்புஅமைச்சுதெரிவித்துள்ளது.

'இலங்கை - சிங்கப்பூர் உடன்படிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவால்நியமிக்கப்பட்ட குழுவின் முடிவுகள் கிடைக்கும் வரையும், உடன்படிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை நிறைவுபெறும் வரையும் இந்த உடன்படிக்கை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள்தற்காலிகமாகஇடைநிறுத்தப்பட்டுள்ளன" என்று அமைச்சின் செயலர் டி.கொட்டிக்கார தெரிவித்தார்.

இலங்கை- சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பிலான நிபுணர் குழு அறிக்கை அரச தலைவரிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்தவாரத்துக்குள்அமைச்சிடம்அந்த அறிக்கை கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தஉடன்படிக்கைக்கு எதிராக 9 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டுள்ளன. விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை- சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கடந்த மே மாதம் முதலாம்திகதிமுதல்நடைமுறைப்படுத்தப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)



# தீர்ப்பை உடன் வழங்குமாறு நகர்த்தல் பத்திரம் தாக்கல்

கொழும்பு, டிசெ. 13

நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டஅரசிதழ்அறிவிப்புக்குஎதிராகத்தாக்கல் செய்யப்பட்டஅடிப்படைஉரிமைமீறல்மனுக்கள் மீதான தீர்ப்பை தாமதிக்காமல் வழங்க வேண்டும் என்று கோரி சட்டமா அதிபரால் உயர்நீதிமன்றத்தில்நகர்த்தல் பத்திரம் முன்வைக்கப் பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடி நீடித்துவரும் நிலையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தாமதிக்காமல் வழங்க வேண்டும் என்று முதன்மை நீதியரசரிடம்கோரிக்கைமுன்வைக்கவேண்டும்என்று சட்டமா அதிபருக்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தல்வழங்கியிருந்தார். அதனடிப்படையில்நேற்றுமுன்தினம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

**உயர் வேலை வாய்ப்பிற்கான தொழிற் கல்வியும் வங்கிக்கடனும்**

வங்கி வேலை வாய்ப்புகளின் போது கோரப்பட்டு வரும் (CCNAMCSA) கணினி வலையமைப்பு பொறியியலாளர் கற்கை நெறிக்கான விரிவுரைகள் முற்றிலும் இலவசமாக எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் மைக்ரோசொப்ற் சிஸ்கோ கணினிப்பொறியியலாளர்களினால் நடைபெறவிருக்கின்றது. க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்கு தோற்றிய எத்துறை சார்ந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் பெயர், பிறந்த திகதி என்பவற்றை 772 395 895 என்ற எண்ணிற்கு அனுப்பி வைக்கவும் மேலும் CIMA (UK) கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான மாணி பட்டக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பல்கலைக்கழக தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு 75 வீத புலமைப் பரிசிலும் ஏனையவர்களுக்கு ஏழரை லட்சம் ரூபா பட்டக்கற்கைநெறி பூர்த்திக்கான குறைந்த வட்டியிலான கடனும் வழங்கப் படவுள்ளது. மேலதிக விவரங்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்தில்

(வ. 145384) (13.17)

DLB CAR PLUS
சீட்டிழுப்பு இலக்கம் 88
சீட்டிழுப்பு திகதி 12.12.2018
வெற்றி இலக்கங்கள் 12 14 44 T சனி
01 14
43, 19, 220/=
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.12.2018 | வெற்றி வாரம் 2416 | வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 18 45 47 56
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 25, 00, 896/=
2018.12.14 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3121 திகதி:2018.12.12 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 13 14 47 48 P
போனஸ் இலக்கம் 60
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 54,534,555/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 462
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.12.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,321,895/-
வெற்றி இலக்கங்கள் 14 27 52 58 R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்**

TAMIL VIRTUAL ACADEMY

**தமிழ் இணையக் கல்விக் கழகத்தினூடாக**
**தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்**
**இளங்கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டம் (B.A) பெறும் வாய்ப்பு !**

- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி. (பழைய பாடத்திட்டம் 4 பாடங்கள்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப்படிப்பை தொடரமுடியும்.
- இலங்கை மானியங்கள் ஆணைக்குழுவினால் (Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.
- கல்வி ஆண்டில் 40 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- 2019 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பம்.

***பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித் திகதி 31.12.2018 வரை மட்டும்.***

தொடர்புகளுக்கு,
077 805 1173,
070 305 1173

**தமிழ் இணையக் கல்விக்கழகம்,**
**பாரதி இன்ஸ்ரிரியூட்,**
**மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.**

# காணி அனுமதிப் பத்திரங்கள் இன்றி திருமலையில் 300 குடும்பங்கள் அவதி

மூதூர், டிசெ. 13

**“காணி அனுமதிப்பத்திரம் இன்மையால் திருகோணமலை நகரில் உள்ள நாங்கள் பல்வேறு பாதிப்புகளுக்குள்ளாகி வருகின்றோம். தமக்குக் காணி ஆவணம் வழங்கி தொழில் அபிவிருத்தியிலுள்ள தடையை நீக்குங்கள் என்று கப்பல்துறை விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.**

தமக்கான ஆவணங்கள் இன்மையால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வாழ்வாதாரங்கள், தென்னை அபிவிருத்தி உதவிகள் என்பனவற்றைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தமது பராமரிப்பில் உள்ள காணிகளில் கட்டுமானங்களைச் செய்யமுடியாத நிலையில் உள்ளோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் எதிர்கட்சித்தலைவரின் பிரத்தியேக செயலாளரின் கவனத்துக்குக்கொண்டுவந்துள்ளனர். இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

1978ஆம்ஆண்டுதென்னிலங்கையில் ஏற்பட்ட நிலமைகள்காரணமாக அந்தக் காலத்தில்நாடாளுமன்றஉறுப்பினராக இருந்த இரா. சம்பந்தனின் அறிவுரைக்கமைய கப்பல்துறையில் குடியமர்த்தப்பட்டோம்.

பிற்காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள்காரணமாகசீனக்குடாகிளப்பன்பேக் முகாமில்பலவருடங்களாக அகதிகளாக வாழ்ந்தோம். 1994ஆம் ஆண்டு மீண்டும் கப்பல்துறை, மற்றும் மறுவாழ்வு அமைச்சராக இருந்த எம்.எச்.எம். அஸ்ரப் அரசுடன் பேசி மீளக்குடியமர்த்தப்பட்டோம். அந்தக் காலத்தில் தமிழ் முஸ்லிம், சிங்கள மக்கள் இணைந்து குடியமர்த்தப்பட்டனர். தமிழ் மக்கள் மட்டும் அவர்களது காணி அபிவிருத்தியைச் செய்யமுடியாது, வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது இன்றுவரை திண்டாடுகின்றனர்.

துறைமுக அதிகார சபையினர் தொடர்ந்தும் தடை ஏற்படுத்தி வருகின்றனர். காணி இன்னும் அவர்களது பிடியில் உள்ளதால் இந்த நிலமை நீடிக்கிறது.

இதுதொடர்பாகப்பலமுறைபலஅதிகாரிகளுக்கு முறையிட்டபோதும் பலனளிக்கவில்லை. கூட்டரசின் ஆரம்பத்தில் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சராகஇருந்தஅர்ஜுனரணதுங்கதிருகோணமலை மாவட்டச் செயலகத்துக்குச் சென்றிருந்தபோது தமக்குக் காணி ஆவணங்களை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக உறுதியளித்திருந்தார்.

இன்றுவரை எதுவும் இடம்பெறவில்லை. தற்சமயம் தென்னை அபிவிருத்திச்சபைமற்றும்விவசாயத்திணைக்களங்கள் முலமாகப் பல வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பெறுவதற்குக் காணி ஆவணங்கள் தேவையாகவுள்ளன. முஸ்லிம் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் தமது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் தாம்குடியிருக்கும்காணிகளில்வாழ்வாதார முயற்சிகளைச் செய்கின்றனர். தமிழ் மக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில்சிரமப்படுகின்றனர்.

1978லிருந்து அபிவிருத்தியடையாத சூழலில் நகரப்பகுதியில் சிரமப்படுகின்றோம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தங்களின் பிணக்கைத் தீர்த்து ஏனைய மக்களைப்போன்று அரசின் சகல உதவிகளையும் பெற வாய்ப்பளிக்குமாறுவேண்டுகோள்விடுக்கின்றோம். கப்பல்துறையில் 465 குடும்பங்கள் உள்ளன. சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த மக்களே புறக்கணிக்கப்பட்டுள்ளோம். தமக்குக்காணிஆவணம் வழங்கி தொழில் அபிவிருத்தித் தடையை நீக்குங்கள் - என்றும் அவர்கள்கோரிக்கை விடுக்கின்றனர்.

(4,40)

## 1,390 மில்லியன் ரூபாவில் 4 பிரிவுக்குக் கட்டடங்கள்

### யாழ். பல்கலையில் அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணப்பல்ககலைக்கழகத்தின்கீழ்4பெரும்உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முழுமையடையவுள்ளன. அதற்கென இலங்கை அரசு ஆயிரத்து390 மில்லியன் ரூபாவை உயர்கல்விகள் மற்றும் நெடுஞ்சாலைகள்அமைப்பினூடாச்செலவிட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது.

400மில்லியன்ரூபாசெலவில்முகாமைத்துவக்கல்விமற்றும் வணிக பீடத்துக்கான கட்டட அமைப்பு,

48 மில்லியன் ரூபா செலவில் உயர்மட்ட படிப்புக்கள் பீட கட்டட அமைப்பு, 700 மில்லியன் ரூபா செலவில் மருத்துவ பீடத்துக்கு 8 மாடிக்கட்டடம், 242 மில்லியன் ரூபா செலவில் பல்கலைக்கழகத்துக்கான உடற்பயிற்சிக் கட்டடம் என்பன அமைக்கப்படுகின்றன.

முகாமைத்துவக் கல்வி மற்றும் வணிக பீடத்துக்கான கட்டடத்தொகுதி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடக்கட்டட வேலைகள் முழுமையாகநிறைவுபெற்றன. மருத்துவபீடமற்றும்உடற்பயிற்சிக்கூட கட்டட அமைப்பு வேலைகள் தற்போது இடம் பெறுகின்றன என்றுயாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

(4.50)

## பிரிட்டன் தூதரின் குழுவினருடன் ஜனநாயகப்போராளிகள் சந்திப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கைக்கான பிரிட்டன் தூதரின் முதன்மை செயலாளர் போல் கிறீன் மற்றும் பிரிட்டனின் ஜெனிவாவுக்கான மனித உரிமைகள் குழுவின் பிரதித்தலைவர் பொப் லாஸ்ட் குழுவினரை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

திருகோணமலையில்நேற்றுச்சந்திப்புஇடம்பெற்றதுஎன்று ஜனநாயகப்போராளிகள்கட்சிஅனுப்பியசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் ஆற்றுகின்ற பணிகள்தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக் கூறலில் எதிர்காலத்தில் தாங்கள் செய்யவிருக்கின்ற பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

மறுவாழ்வுபெற்றபோராளிகளின்தற்போதையபாதுகாப்பு, சமூக அந்தஸ்து, வாழ்வாதார நிலை, வேலைவாய்ப்புக்களைப் பெற்றுகொள்கின்றபோது சந்திக்கின்ற இடர்பாடுகள் தொடர்பில்குழுவிடம்எடுத்துரைக்கப்பட்டதுஎன்றுகட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

(4.ரி3)

## எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை சாதாரண விலையில் பெற உதவுங்கள்

### அதிகாரிகளுக்கும் அரசதலைவர் பணிப்பு

கொழும்பு, டிசெ. 13

எதிர்வரும் உற்சவ காலத்தில் அத்தியாவசிய உணவுப்பொருள்களைத்தட்டுப்பாடின்றிச் சாதாரண விலையில் கொள்வனவு செய்வதற்கான வசதிகளைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்துமாறு அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

அரசதலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் போதே மைத்திரிஇவ்வாறுபணித்துள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ளசெய்திக்குறிப்பில்மேலும்உள்ளதாவது;

எதிர்வரும் உற்சவ காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குச் சந்தையில் எந்தவிதத் தட்டுப்பாடுகளும் ஏற்பட இடமளிக்க வேண்டாம். விலை அதிகரிப்பு ஏற்படாது நியாயமான விலையில்நுகர்வோர்உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துமாறும் அரச தலைவர் உரிய துறையினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்இறக்குமதியாளர்கள்சங்கத்தின்பிரதிநிதிகள் அமைச்சுக்களின் செயலாளர்கள், நிதி அமைச்சுமற்றும்வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். சந்தையில் அசாதாரண விலை அதிகரிப்புஏற்படஇடமளிக்காது. விலைக் கட்டுப்பாட்டுமுறையைநடைமுறைப்படுத்தித் தொடர்ச்சியாகச் சந்தை விலை தொடர்பில்கவனம்செலுத்துமாறு நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு இதன்போது மைத்திரிபணிப்புரைவிடுத்தார்.

சந்தை விலைச்சுட்டி தொடர்பில்தொடர்ச்சியாக நுகர்வோரைஅறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார். எதிர்வரும்உற்சவ காலத்தில் சதொச நிலையங்க ளினூ டாகச் சலுகை விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொடுத்துநுகர்வோருக்கு உயர்ந்தபட்சசலுகை வழங்குவதற்கான நடவடிக்கை தொடர்பாவும் அவர் கவனம் செலுத்தினார்.

சந்தையில் பெற்றோலியப்பொருள்களின்விலை குறைவினால்கிடைக்கும் நன்மைகளும் நுகர்வோரைச் சென்றடைவதற்கான நடைமுறைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது என்றுள்ளது.

(4.21)

## எதிர்வரும் சனிக்கிழமைவரை ஆழ்கடலுக்கு மீனவர்கள் செல்லாதீரெனஎச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 13

அம்பாந்தோட்டையிலிருந்துபொத்துவில்மற்றும் மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழம்கூடிய கடற்பரப்புகளில் பலத்த மழைவீழ்ச்சி மற்றும் வேகமான காற்று வீசக் கூடும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில்மற்றும்மட்டக்களப்பு ஊடாகதிருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய கடற்பரப்புகளில் மீனவர்கள் தொழிலில் ஈடுபடவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். டிசெம்பர்15ஆம்திகதி வரை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த பகுதிகளில் அவ்வப்போதுமழைஅல்லது இடியுடன் கூடிய மழைபெய்யக்கூடியசாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு3040கிலோமீற்றர் வரைகாணப்படும்என்று வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

(4)

## தூதரகப் பணியாளரின் வீட்டில் பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 13

பட்டப்பகலில் இந்திய துணைத்தூதரக அதிகாரியின் வீடு உடைத்துபெறுமதியானஇலத்திரனியல்உபகரணங்கள் திருடிச்செல்லப்பட்டுள்ளனஎன்றுயாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியின் குறுக்கு வீதியில் நேற்றுமுன்தினம் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குறித்த பணியாளர் காலை 8.30அளவில் வீட்டிலிருந்து புறப்பட்டு மாலை 6.30அளவில் வீட்டுக்குத் திரும்புவது வழமை. அவர் வீடு திரும்பி வரும்போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. 43அங்குலதொலைக்காட்சிகள் இரண்டு, நவீன அலைபேசிகள் இரண்டு, 5ஆயிரம்ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(4.106)

## தே. அடையாள அட்டைப் படத்தில் மாற்றம் செய்து குதிரையோட்டம்

### மாணவன் கைது

கொழும்பு, டிசெ. 13

தேசிய அடையாள அட்டையின் ஒளிப் படத்தைச் சூட்சுமமாக மாற்றியமைத்துப் பரீட்சை எழுதினார் என்ற குற்றச்சாட்டில் மாணவன் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தென்பகுதியில் தனமல்விலைப் பகுதியின் ரத்மலாகமகனிஸ் வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவனே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


பரீட்சை மண்டபத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதுபரீட்சைநிலையமேற்பார்வையாளர் பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டைகளைப் பரிசீலனை செய்துகொண்டிருந்தார்.

குறிப்பிட்ட மாணவனின்தேசிய அடையாள அட்டையில் சந்தேகம் ஏற்பட்டதால் தனமல்விலைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிக்குத்தகவல்வழங்கினார். அதுபற்றிய விசாரணையில்தேசிய அடையாள அட்டையின்புகைப்படம்மாற்றப்பட்டிருப்பதுதெரியவந்துள்ளதுஎன்றுபொலிஸார் கூறியுள்ளனர். அதனையடுத்து மாணவன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்என்றுபொலிஸார்தெரிவித்தனர். (4)

# கூட்டமைப்பு ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளைநிறைவேற்றுங்கள்

## ஐ.தே.கவிடம் வலியுறுத்துமாறு கோரி கூட்டமைப்புக்கு ரெலோ கடிதம்



**யாழ்ப்பாணம், டிசெ. 13**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளைஐக்கிய தேசியக்கட்சிநடைமுறைப்படுத்தவேண்டும். அதனை அந்தக்கட்சிதமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் எழுத்து மூலமாக உறுதிப்படுத்த வேண்டும். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர்இரா.சம்மந்தனுக்கு ரெலோ கடிதம் அனுப்பியுள்ளது.**

ஐக்கியதேசியமுன்னணி,அரசமைக்க தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் ஆதரவு தெரிவித்துக் கடிதம் ஒன்றை ஏற்கனவே வழங்கியுள்ளனர். ஆதரவின் அடிப்படையில் பின்வரும் விடயங்களைநடைமுறைப்படுத்தவேண்டும். அதற்கு ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த்தேசியகூட்டமைப்புடன்ஓர்உடன்பாட்டுக்குவரவேண்டுமென்று ரெலோ கருதுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்வரும் சில தினங்களில்நடத்தவுள்ளபேச்சுக்களில் குறித்தவிடயங்களைத்தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முன்வைக்கவேண்டும். அவை தொடர்பில் உடன்பாடு ஒன்று எட்டப்படுவதுஅவசியம்என்றும்எமது கட்சி முன்மொழிகிறது. அதன்படி,

அரசமைப்பின்13 ஆவது திருத்தத்தை முழுமையாகவும், விரைவாகவும் நடைமுறைப்படுத்தல் வேண்டும், தமிழ்அரசியற்கைதிகள் அனைவரும் இந்தமாத முடிவுக்குள் விடுவிக்கப்படவேண்டும், வடக்கு கிழக்கில் அரசுப்படைகள் நிலை கொண்டிருக்கும் தனியார்காணிகள் அனைத்தும் இந்தமாத முடிவுக்குள் முற்றாக விடுவிக்கப்படவேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தைநீக்குதல் வேண்டும், தேசிய கேள்வியாக நீடித்து நிற்கும் இனப்பிரச்சினைக்குநிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று உருவாகும் வரையில்வடக்குமாகாணத்தையும்கிழக்கு மாகாணத்தையும்மீண்டும்தற்காலிகமாக இணைத்தல் வேண்டும் என்று கடிதத்தில் கோரியுள்ளோம் - என்றுள்ளது. (4,26)

## காட்டு விலங்கு இறைச்சியை வைத்திருந்தவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, டிசெ. 13
அனுமதியின்றிக்காட்டுவிலங்குஇறைச்சியைவிற்பனை செய்தவியாபாரியை எச்சரித்த சாவகச்சேரிநீதிமன்று, 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
அவர் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றத்தைஏற்றுக்கொண்டார். அதனையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரிபொதுச்சந்தைமரக்கறிவிற்பனைப்பிரிவில் காட்டுவிலங்கின் இறைச்சிவிற்பனை செய்யப்படுவதாக கடந்த திங்கட்கிழமை கிடைத்த தகவலுக்கு அமைய நகரசபையின்பொதுச்சுகாதாரப்பரிசோதகர் பி.தளிர்ராஜ் 3 கிலோகிராம் இறைச்சியை மீட்டிருந்தார்.
அதனை வைத்திருந்தார் என்று ஒருவர் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார்.
இறைச்சியைச் சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பணியகத்தில்பரிசோதனை செய்தபோது மான் அல்லது மரை இறைச்சி என்று கால்நடை மருத்துவரால் உறுதி செய்யப்பட்டது. (4,9)

## போக்குவரத்து விதிமீறல் 20 ஆயிரம் ரூபா தண்டம்

சாவகச்சேரி, டிசெ. 13
ஓட்டுநர் உரிமப் பத்திரம், வா்கன வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவையின்றிமதுபோதையில்உந்துருளிசெலுத்தியநாவற்குளியைச் சேர்ந்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்று 20 ஆயிரம்ரூபா தண்டம் விதித்தது.
அவர்உள்ளிட்ட மேலும்சிலருக்கு எதிராகச் சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்திருந்தனர். அவை நேற்று விசாரணைக்குஎடுக்கப்பட்டன.
ஓட்டுநர் உரிமப் பத்திரமின்றி மதுபோதையில் பயணித்த மற்றொருவருக்கு 11 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.
பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞைசெய்தும்உந்துருளியை நிறுத்தாமல் சென்ற மீசாலை மேற்கைச் சேர்ந்தவருக்கு11ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.
காப்புறுதிப்பத்திரமின்றிஉந்துருளி செலுத்திய இருவருக்கு தலா 7 ஆயிரம் ரூபா தண்டம்விதிக்கப்பட்டது.
டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த மூவருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,9)

### யாழ். திறந்த பல்கலையில்
## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கக்கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 13
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபாரமுகாமைத்துவமும்சான்றிதழ்கற்கைநெறிக்கான (2018/2019 ஆம் கல்வியாண்டு) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் மற்றும் தமிழ் மொழியில் இரு திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்றஇணையத்தளமுகவரிஊடாகஎதிர்வரும்2ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிகவிவரங்களைஇலங்கைத்திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார். (4)

## பேருந்து நடத்துநர் மீது கத்திக்குத்து

யாழ்ப்பாணம், டிசெ. 13
இருதரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாடு கத்தி வெட்டில்நிறைவடைந்தது. காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இருந்து வட்டுக்கோட்டைக்குப் பயணித்த பேருந்தில்மூளாயில்நேற்று முன்தினம் இடம்பெற்றது.
கத்தியால்வெட்டினார்என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
"யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் வசிப்பவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில் நடத்துநராகப் பணிபுரிகிறார். அவர் இரண்டுநாள்கள்விடுமுறையில் நின்றார். அதனால் காரைநகரைச்சேர்ந்தஒருவரைத் தற்காலிகமாக இணைத்துவிட்டுள்ளார்.
இதனால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே காரைநகரைச் சேர்ந்தவர் கத்திக் குத்துக்கு இலக்கானார்" என்று ஆரம்ப விசாரணையில்கூறப்பட்டது. (4,105)

## சங்கங்களின் நிலைப்பாட்டைப் புரிந்து சபையினர் அறிக்கையிடுவதே சிறப்பு

சாவகச்சேரி, டிசெ.13
தமது சங்கங்கள் தொடர்புபடும்செய்திகளைபத்திரிகைகளில் அறிக்கையிடமுன்னர் தங்களுடைய நிலைப்பாடு தொடர்பிலும் கலந்துரையாடுங்கள் என்று நகர சபை உறுப்பினர்களிடம் யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் கோரியுள்ளனர்.
நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து முன்னைய காலங்களைப்போலபுதன்கிழமைகளில் மூடுவதற்குச் சிகை ஒப்பனையாளர்களிடம்கேட்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர்என்றுசபைஉறுப்பினர் ம.நடனதேவன்பத்திரிகைகளில்அறிக்கைவிட்டிருந்தார்.
இந்த நிலையிலேயே, சம்மேளத்தினர் நகர சபைக்கு கடந்த வாரம் சென்று இது குறித்துத் தவிசாளருடன் கலந்துரையாடி தமது கோரிக்கைக்கடிதத்தைஅவரிடம் கையளித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
"சமாசத்தில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. சங்க விதிமுறைகளை மாற்றமுடியாதுஎன்றுஉறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் நகரசபை உறுப்பினர்கள் எந்தவொரு அமைப்புடனும் தொடர்புபடும் விடயங்களை குறித்த அமைப்பினருடன் தொடர்பு கொள்ளாமல் பத்திரிகைகளில் அறிக்கை விடுவதற்கு அனுமதிக்க வேண்டாம் என்றுகோருகிறோம்"என்று கடிதத்தில் கேட்டிருந்தோம் என்றுசமாசத்தினர்தெரிவித்தனர்.
"சமாசப் பிரதிநிதிகள் நேரில் வந்து செய்தி தொடர்பாக ஆதங்கம் தெரிவித்துக் கடிதம் வழங்கிச் சென்றிருந்தனர். அவர்களின்கோரிக்கை தொடர்பில்கடந்தசபைஅமர்வில் பரிசீலிக்கப்பட்டது. அதைச் சபையினர் ஏற்றுக் கொண்டனர்"என்றுசாவகச்சேரி நகரசபையின் தவிசாளர்திருமதிசிவமங்கைஇராமநாதன் தெரிவித்தார். (4,9)

### யாழ். பல்கலைக்கழக
## சிங்கள மாணவர்களிடையே தங்குமிடவிடுதியில் கைகலப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களிடையே மோதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதனால் காயமடைந்த மாணவர்கள் மூவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தத் தாக்குதல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில், இரண்டாம்வருடமாணவர்கள் தங்கியிருந்த வீட்டில் நேற்றுமுன்தினமிரவுஇடம்பெற்றுள்ளது.
விஞ்ஞான பீடத்தில் கற்கும் நான்காம் வருட மாணவர்கள் அதே பீடத்தின் இரண்டாம்வருடமாணவர்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று இரண்டாம் வருட மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
"தமக்கு மரியாதை தருவதில்லை. இனிமேல் மரியாதை தரவேண்டும்" என்றுகூறி 4 ஆம் வருட மாணவர்கள் தாக்கினர் என்று இரண்டாம்வருடமாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
தாக்குதல்தொடர்பில்இரண்டாம் வருட மாணவர்களில் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
விசாரணைஇடம்பெறுகிறது என்று யாழ்ப்பாணப் பொலிஸார்தெரிவித்தனர். (4,106)

## காரைநகரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் இலவசகற்கை

யாழ்ப்பாணம், டிசெ. 13
காரைநகர் தொழில் பயிற்சி நிலையத்தில் முழு நேரக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இளையோர் நாளைமறுதினம்சனிக்கிழமைக்கு முன்பாக தொழிற்பயிற்சிநிலையத்தில் பதிவை மேற்கொள்ளுங்கள் என்று நிலைய முகாமையாளர் வே.ஸ்ரீகுகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை இதனை நடத்துகிறது.
முழு நேரக் கற்கை நெறிகளாக இடம்பெறுகின்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தையல், அறை பராமரிப்பாளர், உணவுமற்றும்குளிர்பானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், உந்துருளி (மோட்டார் சைக்கிள்) திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், குளிரேற்றல் வளிசீராக்கி பொறிவினைஞர் மற்றும் குளிர்சாதன திருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர் ஆகிய இலவச தொழிற் தகைமைச் சான்றிதழ் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று அவர்மேலும் தெரிவித்தார். (4)

# யாழ். மாநகர சபையின் பாதீடு திருத்தங்களுடன் நிறைவேறியது

## அதைத் தோற்கடிக்க ஈ.பி.டி.பியின் முயற்சிகள் பயனளிக்கவில்லை

**யாழ்ப்பாணம், டிசெ.13**

**யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் கொண்டுவந்த வரவு – செலவுத்திட்டத்தில், அபிவிருத்தியை நோக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுசபையின்பெரும்பான்மையானஉறுப்பினர்களின்ஏகோபித்த ஆதரவோடு அது நிறைவேற்றப்பட்டது.**

அதைத்தோற்கடிக்க ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடுமையாக முயற்சித்தும் பயனளிக்கவில்லை.

யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புத் தொடர்பான அமர்வு யாழ்ப்பாண மாநகரசபையில்நேற்றுஇடம்பெற்றது. அதுதிருத்தங்களுடன்ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சிறப்பு அமர்வில் 2019ஆம் ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்டத்தைமாநகர முதல்வர் ஆனோல்ட் சபைக்குக் கொண்டுவந்தார். அவர்கொண்டுவந்த வரவு - செலவுத் திட்டம் தவறானது என்றுதெரிவித்துஈழமக்கள்ஜனநாயக் கட்சியினர் முதலில் எதிர்த்தனர். அந்த வரவு செலவுத் திட்டம் ஆடம்பரமானது என்று தெரிவித்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

"மாநகரமக்களுடையஅபிவிருத்தியை நோக்கியதாக வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படாமல் சுகபோகங்களை அடிப்படையாக்கொண்டுதயாரிக்கப்பட்டுள்ளது. அதில்திருத்தங்கள்செய்யப்பட்டால் அந்த வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம்"என்றுமுன்னணியினர் கூறியிருந்தனர். அதன்படி திருத்தங்கள்மேற்கொள்ளப்பட்டன. "வரவில் பெருமளவுநிதிகுறைக்கப்பட்டுள்ளதால் செலவீனத்தில் திருத்தம் செய்ய வேண்டியேற்பட்டது. அடுத்த அமர்வில் பாதீட்டைச் சமர்ப்பிப்பதாகத் தீர்மானித்து அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

**ஈ.பி.டி.பியின் நிலை**

அதன்படி சபை அமர்வு நேற்று ஆரம்பமானது. திருத்தம் செய்யப்பட்ட செலவீனத்திலும் குறைகள் இருப்பதாக ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர். அது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நீண்டு சென்று ஒரு கட்டத்தில்

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் றெமீடியஸை சொற்களால் வதைத்தனர். இதனால் வரவு - செலவுத் திட்டத்தை முற்றாக எதிர்க்கிறேன் என்று கூறி றெமீடியஸ்கப்சிப்ஆனார். முன்னாள்முதல்வர் யோகேஸ்வரி சற்றேனும் வாய் திறக்கவில்லை.

**முன்னணியின் நிலைப்பாடு**

செலவீனம்தொடர்பில்கருத்துக்களைத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் திருத்தப்பட்ட செலவீனத்திலும்திருத்தங்களைச்செய்யவேண்டும் என்றனர். அவர்கள்கூறியதிருத்தங்கள் சரிசெய்யப்பட்டன.

**திருத்தங்கள்**

சமர்ப்பிக்கப்பட்டசெலவீனத்திலும்திருத்தங்கள்மேற்கொள்ளப்பட்டன. திண்மக் கழிவகற்றலுக்கென 30 மில்லியன் ரூபாவும், வட்டாரங்களின் அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபாவும், ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் தலா 3.5 மில்லியன்ரூபாவும்வழங்குவதென்று மாற்றப்பட்டது.

சமயம் மற்றும் கலை கலாசார விவகாரங்களுக்காக ஒரு மில்லியன், மாநகர ஊழியர் கடன் கொடுப்பனவுக்கு 50 மில்லியன், மருந்துப்பொருள்கள்கொள்வனவுக்கு 3 மில்லியன், காகிதாதிகள் அலுவலகத்தேவைப்பொருள்கள்கொள்வனவுக்கு 5 மில்லியன் ரூபா என்று திருத்தப்பட்டது.

**திருத்தங்களிலும் வாதங்கள்**

திருத்தங்களைமேற்கொள்ளும்போதும் கருத்து மோதல்களுக்குக் குறைவிருக்கவில்லை. அதிகாரிகளுடனும்உறுப்பினர்கள்முரண்பட்டனர். வாகனக்கொள்வனவு, முத்திரைவரி, நல்லூர்த் திருவிழா, நவீன சந்தை திருத்தல், ஊழியர்களுக்கான கடன் திட்டம் போன்ற விடயங்களில் கடும்வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அதிகாரிகளின்விளக்கங்களை அடுத்து அமைதி பேணப்பட்டது.

**பாதீடு ஏற்பு**

திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் சபைஒத்திவைக்கப்பட்டுமீண்டும்ஆரம்பமானது. செலவீனத்தில் செய்யப்பட்ட திருத்தங்களை முதல்வர் அறிவித்தார். உறுப்பினர்நித்தியானந்தன்அந்தவரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து முன்மொழிந்தார். அதை உறுப்பினர் அருள்குமரன் வழிமொழிந்தார். சபையின் ஏகமனதான முடிவின்படிவரவு-செலவுத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று முதல்வர் அறிவித்தார்.

குறுக்கிட்ட ஈ.பி.டி.பி கட்சியினர் தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாக மீண்டும் வலியுறுத்தினர். பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஏகோபித்த ஆதரவுடன் வரவு செலவுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படுகிறதுஎன்றுமுதல்வர்திருத்தத்துடன் கூறினார்.

உறுப்பினர்கள்மேசையில்தட்டிமகிழ்ச்சியைத்தெரிவித்தனர். (4,21)

## கர்ப்பிணிகளின் போசாக்குக்கு 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணமாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்குஉணவுவழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகரசபை2மில்லியன்ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட வரவு-செலவுத்திட்டத்திலேயே இந்த விடயம் உள்வாங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் நேற்று மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்டபகுதிகளிலுள்ள கர்ப்பிணிப்பெண்களுக்குப்போசாக்குஉணவு வழங்கவென்றுசபையின் முதல்வர் ஆனோல்ட் 2 மில்லியன் ரூபா நிதியை வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கியிருந்தார். அந்த விடயத்தைச் சபையின்பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். அது தொடர்பில் எந்த விவாதங்களும் இன்றித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2019ஆம் ஆண்டு தொடக்கம் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்என்றுதெரிவிக்கப்பட்டது. (4,21)

## வல்வெட்டித்துறை நகரசபையின் பாதீடு ஏகமனதாக நிறைவேறியது

யாழ்ப்பாணம், டிசெ. 13

வல்வெட்டிதுறைநகரசபைக்கான வரவு-செலவுத்திட்டம் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைநகரசபை மண்டபத்தில் தவிசாளர் கோ.கருணானந்தராசா தலைமையில் வரவு - செலவுத்திட்டம் தொடர்பான சிறப்பு அமர்வு இடம்பெற்றது.

16உறுப்பினர்கள் கொண்ட சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுயேட்சை, ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன அங்கம் வகிக்கின்றன.

நகர சபையின் அபிவிருத்திக்காக 27 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாரத்துக்கு 3 லட்சம்ரூபா வீதம் 9 வட்டாரங்களுக்கும் 27 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இருப்பின் அவர்களே அது தொடர்பாகக் கலந்துரையாடி அபிவிருத்தி தொடர்பானமுடிவைஎடுக்கவேண்டும்என்றுமுடிவெடுக்கப்பட்டது. இறுதியில் வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. வரவு செலவுத் திட்டத்துக்கான மூலதனச் செலவாக 61 லட்சத்து10ஆயிரத்து780ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிவகற்றல், பிரதேசஅபிவிருத்திக்காக 5 லட்சம் ரூபா, முன்பள்ளி அபிவிருத்திக்காக 3 லட்சம் ரூபா, கர்ப்பிணிப்பெண்களுக்கானபாலுணவுக்காக 3 லட்சம் ரூபா, கர்ப்பிணிப் பெண்களின் போசாக்குணவுக்காக ஒரு லட்சம்ரூபாவும்ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,26)

## ரணிலுக்கான ஆதரவுத் தீர்மானம் எவ்வித பயனும் இல்லாததொன்று

### இப்படிச் சொல்கிறார் ரம்புக்வெல



கொழும்பு, டிசெ.12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்ரணில்விக்கிரமசிங்கவின் பெரும்பான்மையை உறுதிப்படுத்தும் தீர்மானம் பயனற்றதுஎன்று தெரிவித்தார்நாடாளுமன்றஉறுப்பினர்கெஹலியரம்புக்வெல. பெரும்பான்மைமக்களுக்கு பயனற்ற ரணில் விக்கிரமசிங்கவைமேற்குலகநாடுகள்பாதுகாப்பதுஏன்? எனவும்அவர் கேள்வி எழுப்பினார்.

தேசிய கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நிறைவேற்று அதிகாரத்தை நாட்டு மக்களின் நலனுக்காக கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி பயன்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். அவரின் செயற்பாடு தொடர்பில் இன்று பலர்பலவிதமாகக்கருத்துக்களைத்தெரிவித்து வருகின்றனர். ஏன் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது? என்பதை கடந்த மூன்று வருட காலத்தில்இடம்பெற்றஅரசியல்நிலவரங்களைநன்கு அறிந்தவர்கள் புரிந்துக் கொள்வார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ரணில் விக்ரமசிங்கவுக்குத் தலைமை அமைச்சர் பதவியை வழங்குமாறு குறிப்பிட்டாலும். நான் மீண்டும் ஒரு தவறைச் செய்ய மாட்டேன் என்று அரச தலைவர் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்து அனைவருக்கும் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றார்கள். மகிந்தவுக்கும் அரச் தலைமையிலான அமைச்சரவைக்கும் எதிராகப் பல்வேறு தீர்மானங்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் நிறைவேற்றிய போதிலும் அனைத்தையும் அரச தலைவர் நிராகரித்து விட்டார். இன்று (நேற்று) நிறைவேற்றப்பட்ட ரணிலுக்கான ஆதரவுத் தீர்மானத்துக்கும் அதுவே நடக்கும்.

2015ஆம்ஆண்டுபுலம்பெயர்விடுதலைப்புலிகளின்கோரிக்கைகளைநிறைவேற்றும்முகவராகவே ரணில் செயற்பட்டார். ஆகவே அவர் நிச்சயம் மேற்குலகத்தவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதற்கே தற்போது பெரிய தடைகள் ஏற்பட்டுள்ளன. தமது எதிர்பார்ப்பை நிறைவேற்றவே இன்று இராஜதந்திரிகள் ஒரு தலைபட்சமாக செயற்படுகின்றனர். நாட்டைப்பிரிக்கும்சூழ்ச்சிகள் ஒருபோதும் வெற்றிபெறாது என்றார். (ம31)

## புதைக்கப்பட்ட நிலையில் மாட்டின் சடலம் தெல்லிப்பழை மயானத்தில் மீட்கப்பட்டது!



யாழ்ப்பாணம், டிசெ. 13

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள மாயனத்துக்குள் இனம் தெரியாத நபர்கள் சடலம் ஒன்றைப்புதைத்திருக்கலாம்என்றசந்தேகத்தின் அடிப்படையில் குறித்த இடத்தைத் தோண்டிய போது மாட்டின் சடலமொன்று மீட்கப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

தெல்லிப்பழைவைத்தியசாலையைக்கு அண்மையில் உள்ள மாயனத்துக்குள் இனம் தெரியாத நபர்கள் சடலம் ஒன்றைத் தாட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றேன் என்று மயான காவலாளி கிராமஅலுவலர் ஊடாகதெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இந்தநிலையில்சம்பவஇடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் சந்தேகத்துக்கு இடமானபகுதியைதோண்டுவதற்குமல்லாகம்நீதிபதியிடம்அனுமதிகோரினார்கள். அவரும் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார்.

நீதிபதி முன்னிலையில் நேற்று குறித்த பகுதி தோண்டப்பட்ட நிலையில் அங்கு மாட்டின் சடலமொன்று புதைக்கப்பட்டிருந்தது. அதனது காதில் பொருத்தப்பட்ட இலக்கத் தகடை வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிபதியால் தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ம826)

## சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.13
தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் வலய நிலை ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.
"கணினி உலகம்" என்னும் தொனிப் பொருளிலான ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வில் முன்பள்ளி சிறார்கள் மற்றும் ஆசிரியர்களினால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜீதன், சிறப்பு விருந்தினராக வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், மதிப்புறு விருந்தினர்களாக ஆரம்பப் பிரிவு செயற்பட்டு மகிழ்வோம் அலகின் பொறுப்பாசிரியர் திருமதி இ.மயில்வாகனசிங்கம், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ண பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதன்போது சாவகச்சேரி, கொடிகாமம், மட்டுவில், கைதடி, கச்சாய், மீசாலை, வரணி ஆகிய குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-9)

# நீண்டகாலமாக சீரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்து பாதிப்பு

**சாவகச்சேரி, டிசெ. 13**
**மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் கோவில் வீதி நீண்டகாலமாக சீரமைக்கப்படாமை காரணமாக இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மாணவர்கள், அரச அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்தனர்.**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலைவெள்ளைமாவடி பிள்ளையார் கோவில் வீதி மற்றும் பாலையடி விநாயகர் வீதி ஆகியவற்றை இணைக்கும் 100 மீற்றர்ஒழுங்கைநீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் மணல்வீதியாகக்காணப்படுகின்றது.
மழை காலங்களில் வீதியில் வெள்ளம்தேங்கிநிற்பதனால் பயணம்செய்வதில்பொதுமக்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இந்த வீதியை சீரமைத்துத் தருமாறு பல தடவைகள் சாவகச்சேரி நகரசபையினரிடம் முறையிட்டபோதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎன்றுபொதுமக்கள் விசனம்தெரிவித்தனர்.
இது தொடர்பில் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது எதிர்வரும் வாரங்களில் சபை நிதியில் இருந்து 15 லட்சம்ரூபாசெலவில்மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் கோவில் வீதி மற்றும் பாலையடி விநாயகர் வீதி ஆகியவற்றைஇணைக்கும் 100 மீற்றர் ஒழுங்கை சீரமைக்கப்படும்எனத் தெரிவித்தார். (ஐ-9)

# அச்சுவேலி நெசவு நிலையத்தை விடுவிக்க நடவடிக்கை என்ன?

### அரச தலைவர் செயலகம் மாகாணத் திணைக்களத்திடம் அறிக்கை கோருகிறது

அச்சுவேலி, டிசெ.13
"அச்சுவேலி நெசவு நிலையத்தை கிறிஸ்தவ மதப் போதகரின் பயன்பாட்டில் இருந்து விடுவித்து மீண்டும் இளையோர் தொழிற் பயிற்சி மையமாகப் பயன்படுத்தல்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக அரச தலைவர் செயலகம் வடக்குமாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளரிடம் அறிக்கை கோரியுள்ளது.
அச்சுவேலி நெசவு நிலையம் தொடர்பாக அச்சுவேலி தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்து தீர்வு காணு மாறு கோரிக்கை விடுத்தனர்.
இதற்கமைய அரச தலைவர் செயலக மக்கள் தொடர்பாடல் உதவிப்பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அலங்க ஹெட்டி ஆரச்சி வடக்குமாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.
அச்சுவேலி நெசவுத் தொழிற்சாலை போர் காலத்தில் இயங்காமல் இருந்தது. அதன் பின்னர் நெசவு நிலையத்தை கிறிஸ்தவ மதப் போதகரின் தனது பயன்பாட்டில் கொண்டுவந்தார். அதை விடுவிக்குமாறு பிரதேச செயலகத்திடம் பலரும் கோரிக்கை விடுத்திருந்தனர். அது பற்றி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதுவரையில் தீர்வு எட்டப்படவில்லை. (ஐ-11)




## நூலகங்களுநக்கு அங்கத்தவர்கள் இணைப்பு

சாவகச்சேரி, டிசெ. 13
சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தினர் நகரசபை எல்லைக்குட்பட்ட இளைஞர்கழகங்களுடன்இணைந்து நகரசபையின் நூலகங்களுக்கு அங்கத்தவர்களைஇணைக்கும்பணிகளை நாளை தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ளனர்.
இளைஞர் யுவதிகள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் புதிய அங்கத்துவம் வழங்கும் செயற்றிட்டத்தினை மேற்கொள்ளவுள்ளதாகச் சாவகச்சேரி நகர இளைஞர் கழகப் பிரதிநிதி சு.நக்கீரன் தெரிவித்தார். (ஐ-9)

## அன்னதான மண்டபத்திற்கு அடிக்கல் நடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 13
தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் முரளிதரன், தெல்லிபழைப் பிரதேச செயலர் சிவசிறி, உதவிப்பிரதேசசெயலர் திருமதி சங்கீதா. தெல்லிப்பழைப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-422)



## சைவப்புலவர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ. 13
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியால மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.
பொதுக் கூட்டத்திற்கான அழைப்பிதழ்கள் சங்கத்தில் ஆயுள் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

## பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள்

அளவெட்டி, டிசெ. 13
யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் கமநலசேவை நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை மகளிர் கமக்கார அமைப்பு, விவசாய சம்மேளனம் ஆகியவற்றினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு சண்டிலிப்பாய் கமநலசேவை பெரும்போக அலுவலகர் கு.கோகுலன் தலைமையில் இடம்பெற்றது. (ஐ - 63)





கல்வி அமைச்சினால் தேசிய ரீதியில் நடத்தப் பட்ட சமஸ்தலங்கா நாட்டார் பாடல் இசைபோட் டியில் யாழ்பாணம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் அணி தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. குறித்த போட்டியில் 7 மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற் றினர். (ஜ– 70)

# 35 ஆயிரம் குடும்பங்களுக்கு குடாநாட்டில் வறட்சி உதவி

## யாழ். மாவட்டச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.13

**யாழ்பாணமாவட்டத்தில் 35 ஆயிரத்து 7 குடும்பங்களுக்குவறட்சிக்கான உதவிகள் 3 கட்டங்களாக இடர்முகாமைத்துவசேவைகள் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டதாக மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

2018 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளி லும் ஏற்பட்ட வறட்சியின் போது பாதிக்கப்பட்ட மக்களின் விபரங் களுக்கேற்ப பிரதேச செயலக ரீதியில் உதவிகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களில் முதற்கட் டமாக 14 ஆயிரத்து 460 குடும்பங்களில் 7 ஆயிரத்து 300 குடும்பங்க ளுக்கு தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் 7 ஆயிரத்து 160 குடும் பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதி யான பொருள்களும் வழங்கப்பட்டன.

இதேபோன்று இரண்டாம் கட்டமாக வும் வறட்சி நீடித்ததையடுத்து முன்னர் உதவி வழங்கிய 14 ஆயிரத்து 460 குடும்பங்களுக்கும் அதே அளவிலான பொருள்கள் மீண்டும் வழங்கப்பட்டன.

தற்போது 3 ஆம் கட்டமாக முன்னர் வறட்சி உதவி வழங்கிய குடும்பங்க ளைத்தவிர்ந்த ஏனைய 20 ஆயிரத்து 547 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்படி 9 ஆயிரத்து 190 குடும்பங்க ளுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியி லான பொருள்களும் 11 ஆயிரத்து 357 குடும்பங்களிற்கு 5 ஆயிரம் ரூபா பெறு மதியிலான பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ஜ-105)

# ஈழத்து சிதம்பரத்தில் திருவாதிரை நாளை

காரைநகர், டிசெ. 13

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந் துபத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இந்த உற்சவத்துக்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீ னகர்த்தாக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

உற்சவ காலங்களில் தினமும் காலை 7 மணிக்கு மூலமூர்த் திகளுக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகளும் காலை 10 மணிக்கு மாணிக்கவாசகப்பெருமான் நடேசர் சன்னிதா னத்துக்கு எழுந்தருளி திருவெம்பாவை ஓதலும் தொடர்ந்து மாணிக்கவாசகர் உள்வீதி உலா வருதலும் இடம்பெறும்.

தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சிவன் தனது பரிவார மூர்த்திகளுடன் திருவீதி உலாவரும் காட்சி இடம்பெறும்.

17 ஆம் திகதி திங்கட்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆருத்திராதரிசனமும் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களின் நலன் கருதி ஆலயசூழலில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், மலசலகூட வசதி கள், பாதுகாப்பு, என்பன தொடர்பில் காரைநகர் பிரதேசசெயல கம், பிரதேச சபை, சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், போக் குவரத்துச் சபையினர் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து ஏற் பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உற்சவகாலங்களில் தினமும் காலை யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஆலயம் வரை நேரடி பேருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஆலயசூழலில் உள்ள மாணிக்கவாசகர் மடாலயம், ஈழத்துச்சிதம்பர சைவ அறப்பணிநிலையம் என்பவற்றில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (ஜ-250)

# மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாடு

வடமராட்சி, டிசெ.13

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் ராகம அமைப்பின் அனுசரணையுடன் மதுசாரம், புகையிலை, போதைப்பொருள் கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடுகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி நான்கு பாடசாலைகளில் இடம் பெற்றன.

யா/நெல்லியடிமத்தியகல்லூரி, யா/உடுப்பிட்டிமகளிர்கல்லூரி, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யா/புற்றளை மகாவித்யாலயம் ஆகிய பாடசா லைகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்றன.



மாணவர்கள் மத்தியில் விழிப்பு ணர்வினை ஏற்படுத்தும் வகையில் தெரு வீதி நாடகம் இடம்பெற்றது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனமானது கடந்தபத்து வருடங்களுக்கு மேலாக மதுசா ரம், புகையிலை, போதைப்பொருள்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்பாடுகளை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

# ஆசிரியர் செயலமர்வு முன்நகர்வு

கொடிகாமம், டிசெ. 13

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர் களுக்கான உயர்மட்ட கல்விச்செயற்றிட்டத்தின் கீழான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி ல. முகுந்தன் அறிவித்துள் ளார்.

உரிய நேரத்தில் குறித்த செயலமர்வில் பங்கு கொண்டு பயன் பெறு மாறு ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்விடுக்கப் பட்டுள்ளது. (ஜ-159)

# மருத்துவமனைவளாகத்திற்குள் பொலீத்தின் பாவனைக்கு தடை

சாவகச்சேரி, டிசெ.13

சாவகச்சேரி ஆதார மருத்து வமனை வளாகத்திற்குள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை கொண்டு செல்வ தற்கும் பயன்படுத் துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள் ளது.



அண்மையில் மருத்துவமனை யின் அத்தியட்சக ராகப் பொறுப் பேற்ற மருத்துவர் திருமதி தயாளினி மகேந்திரனே இந்த அதிரடி உத்த ரவினை பிறப்பித்துள்ளார்.

மருத்துவமனையின்யின் சுற்றுச்சூழல் நலன் மற்றும் நோயாளர்களின் சுகாதா ரம் கருதியே பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனைகள் மருத்துவமனை வளாகத் திற்குள் தடைசெய்யப்படுவ தாக அத்தியட்சகர் தெரிவித் தார்.

நோயாளர்கள் மற்றும் நோயா ளர்களை பார்வையிட வரு கின்றவர்கள் பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருள்களை கொண்டு வருவதைத் தவிர்க்குமாறும் கேட்டு கொண்டுள்ளார். (ஜ-106)

# குருதிக்கொடை நிகழ்வு

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய இளைஞர் அமைப்பி னரால் நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு குருதிக் கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரிகச்சாய்வீதி புனித லிகோரியார் ஆலய மண்டபத் தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக் கம் மாலை வரை இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடையை வழங்கவிரும்புவோர் மன்றத்தில் பதிவு களை மேற்கொள்ளுமாறும் அல்லது அன்றைய தினம் ஆல யத்திற்கு வருகை தருமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். ஆலய இளைஞர் மன்றத்தினர் வருடாந்தம் இருதட வைகள் இவ்வாறான குருதிக்கொடை நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர். (ஜ-9)

# 400 மரக்கன்றுகள் நல்லூரில் நடுகை

யாழ்ப்பாணம், டிசெ.12

மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இம்முறை 400 இற்கு மேற்பட்ட மரக்கன் றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன என்று சபைத் தவிசாளர் தா. தியாகமூர்த்தி தெரிவித்தார்.

பொது இடங்கள், மயானங்கள், விளையாட்டு மைதானங் கள், ஆலயச்சுற்றாடல்கள், முதன்மைவீதிகள் போன்ற இடங் களில் இந்த மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நடுகை செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை உரிய முறையில் பராமரிக்கவும் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை அரியாலை கிழக்கு முனங்கு பகுதியில் மட்டும் கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்று கள் நடுகை செய்யப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாக அறிவிக்கப்பட்டுள் ளது. (17)

# நினைவு நாள் நிகழ்வு

அளவெட்டி, டிசெ.13

யாழ்ப்பாணம். வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத் திக்கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் நிறுவுனர் மறைந்த சு.நடேசு. பொதுமுகாமையாளர். க.சந்திரராசா ஆகியோரது நினைவுநாள் நிகழ்வு அண்மையில் கொத்தணி யின் தலைவர், செ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.


நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எச்.ஏ.சமியூ. கலந்துகொண்டார்.

தரம் 5 புலமைப்பரிசில், ஜி.சி.ஈ சாதாரணதரம், ஜி.சி.ஈ உயர் தரம் ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களும் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர்.

வலிகாமம் கொத்தணியில் 25 வருட சேவைகாலத்தை நிறைவு செய்த அங்கத்தவர்கள் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்க ளில் 60 வயதை நிறைவுசெய்தவர்களுக்கும் மாதாந்த ஓய்வுக் கால உவுவித்தொகை வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. (ஜ-63)



# கிருஸ்ணர் ஆலயத்தின் சித்திர தேருக்கு அச்சு வைக்கும் நிகழ்வு



கிளிநொச்சி,டிசெ.13

கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலய சித்தரதேரருக்கான அச்சு வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிருஸ்ணர் ஆலயத்தில் புதிதரக பொறுப்பேற்றுள்ள நிர்வாகம் இந்த நிகழ்வினை நிறைவேற்றியுள்ளனர்.

ஆலய வரலாற்றில் முதன் முதலாக 30.6 அடி உயரத்திலும்,12 அடி தள விரிவு கொண்டதும்,14 அடி பந்தல் விரிவுடையதுமான சித்திரத் தேருக்கான அச்சு வைக்கப் பட்டுள்ளது. (214)

# நிலக்கடலை செய்கையில் பாதிப்பு விரைவில் இழப்பீடு வழங்க ஏற்பாடு

## முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.13

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டு 5 ஆயிரத்து 30 ஏக்கரில் நிலக்கடலை செய்கை பண்ண தீர்மானிக்கப்பட்டு, இதுவரையில் 5 ஆயிரம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டது. இதில் ஆயிரத்து 500 ஏக்கர் வரையில் தற்போது அழிவடைந்துள்ளதாக,முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்தார் .**

இந்த வருடத்தில் பெய்த மழை வெள்ளத்தினால் அதிகளவான நிலக்கடலை அழிவடைந்துள்ளது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் ஆயிரத்து 800 ஏக்கர்களில் செய்யப்பட்ட நிலக்கடலையில், 700 ஏக்கர்வரையான நிலக்கடலை பாதிக்கப்பட்டுள்ளது.பகுதியளவிலும் முற்றுமுழுதாகவும் இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. மாந்தைகிழக்கு,துணுக்காய்,கொல்லவிளாங்குளம்,குமுளமுனை ஆகிய இடங்களில் குறைந்தளவிலான ஏக்கர்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இழப்புக்களின் தன்மை பலவாறாகக் காணப்படுகிறது. நடுகை செய்தவுடன் சில நாட்களில் அழிந்த பயிர், 15 நாள்களில் அழிந்த பயிர்,கடும் ஈரம் காரணமாக விதை அழுகல்ப்பாதிப்பு,என நிலக்கடலை அழிந்து பாதிப்பாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டமே சிறந்த நிலக்கடலை விதைகளை உற்பத்திசெய்யும் மாவட்டமாக காணப்படுகிறது.வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும்,கிழக்கு மாகாணம் முழுவதுக்கும் இவ்வருடம் நிலக்கடலை விதைகளை முல்லைத்தீவு மாவட்டமே வழங்கியுள்ளது.

ஆனால் இந்த முறை பாதிப்பின் மூலம் விவசாயி ஒருவருக்கு ஆரம்ப பயிரழிவாக 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் ரூபாவரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

சரியான விளைச்சல் கிடைக்கப்பெறின் ஏக்கருக்கு 1 இலட்சம் ரூபா வரையில் வருமானம் பெறமுடியும்.

வறுமை நிலையில் இருந்த முல்லைத்தீவு மாவட்டத்தை தன்னிறைவடையச் செய்த முதல் வருமான காரணியாக நிலக்கடலையே காணப்படுகிறது.

இந்த பயிர் இழப்பீடுகளை வழங்குவதற்கு கமநல சேவை நிலையங்களூடாகவும்,விவசாயப்போதனாசிரியர்கள் ஊடாகவும் விபரங்கள் திரட்டப்பட்டு நாளைய தினம் இழப்பீட்டு விதைகள் அனுப்பபடவுள்ளன.

நிலக்கடலை 5 ஆயிரம் கிலோவும், 207 ஏக்கருக்கு எள்ளும்,150 ஏக்கருக்கு உழுந்தும்,100 ஏக்கருக்கு கௌபியும்,150 ஏக்கருக்கு பாசிப்பயறும்,50 ஏக்கருக்கு குரக்கனும், 30 ஏக்கருக்கு சோளம் விதைகளும் வழங்கப்படவுள்ளன. ஒட்டுமொத்தமாக அனைத்து விவசாயிகளும் நிலக்கடலையை இழப்பீடாக கோரியபோதும் மத்திய அரசின் கமநல அபிவிருத்தி திணைக்கள நிதி மூலம் இந்த இழப்பீடுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. என முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்தார். (ரி3)

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட சாரதிகள் கைது

முல்லைத்தீவு,டிசெ.13

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் சட்டவிரோத கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்ட 11 டிப்பர் வாகனங்களையும், சாரதிகளையும் பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில், போலி அனுமதிப்பத்திரம் தயாரித்து, அதனை வைத்துக் கிரவல் அகழ்வில் ஈடுபட்ட 8 டிப்பர் வானங்களையும், நேரம் கடந்து கிரவல் ஏற்றி சென்ற 3 டிப்பர் வாகனங்களையும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பெருங்குற்றப்பிரிவு மற்றும் போதைப்பொருள் ஒழிப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட டிப்பர்களும், சாரதிகளும் மாங்குளம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி3)


# வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு பார்வைக்கு

வவுனியா,டிசெ.13

வவுனியா வடக்குப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கானநிகழ்சித்திட்டப்பாதீட்டு வரைபு மக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வரவு-செலவுத்திட்டவரைபை மக்கள் இலகுவாகப் பார்வையிடக்கூடிய வகையில் வவுனியா வடக்குப் பிரதேச சபை தலைமையகம், நெடுங்கேணி பொது நூலகம், கனகராயன்குளம் பொது நூலகம், நைனாமடு பொது நூலகம் என்பவற்றில் 12ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை மக்கள் பார்வையிடலாம் என வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் இ.தணிகாசலம் தெரிவித்தார். (110)

# இருபது அடியாக உயர்ந்தது முத்துஜயன் கட்டுகுளத்து நீர்



முல்லைத்தீவு,டிசெ.13

முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகளவான விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் குளங்களில் ஒன்றான முத்துஜயன் கட்டு குளத்தின் நீர்மட்டம்,20 அடி நீர் வரை உயர்ந்துள்ளது.

இந்தக் குளம் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ள போதும், கடந்த இரண்டு ஆண்டுகளாக குளத்துக்கான நீர்வரத்து குறைவாகவே காணப்பட்டது. வன்னியில் உள்ள மாவட்டங்களில் பெரும்பாலான குளங்களின் நீர்நிலைகள் உயர்ந்த போதும், ஒப்பீட்டளவில் முத்துஜயன் கட்டுக்குளத்தின் நீர் மட்டம் உயரவில்லை.

நீர்வரத்து குறைவாக காணப்பட்ட போதும் 24 அடி வரை நீர்மட்டம் உயருமாக இருந்தால் வான்பாயும் நிலை ஏற்படும். அண்மையில் குளத்தின் வான் கதவுகளைச் சரிசெய்து பார்க்கும் பொருட்டு கதவுகள் திறந்து பூட்டப்பட்டுள்ளன.

இதுவரையில் சரியான அளவு மழை நீர் முத்துஐயன் கட்டு குளத்துக்கு கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைத்தாலும் அடுத்த ஆண்டுக்கான சிறுபோக செய்கை, மேட்டு நிலப் பயிர்செய்கைக்கு போதியளவு நீர் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி 3)

# போதைப்பொருளுடன் அகப்பட்ட பொலிஸார்



வவுனியா, டிசெ.13

பொலிஸார் ஒருவர் போதைப் பொருள் பயன்படுத்துவதை நேற்று முன்தினம் மதியம் அவதானித்த பொதுமகன் ஒருவர், தலைமை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

வவுனியா வைரவப்புளியங்குளம் நெல்களஞ்சிய சாலையில், யாருமற்ற சந்தர்ப்பத்தில் சீருடையுடன் பொலிஸார் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவதை அவதானித்து, அவ்விடத்துக்குச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர்,பொலிஸார் போதைப் பொருள் பயன்படுத்திக்கொண்டிருந்ததை அவதானித்துள்ளார். இதுதொடர்பில் உடனடியாகவவுனியாபொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டதுடன், குறித்தபொலிஸாரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றுள்ளனர்.

அத்துடன், பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய பொதுமகன் தொடர்பிலும் பொலிஸார் தகவல்களைத் திரட்டியிருந்தனர். (110)

# முன்பள்ளி மாணவர்களுக்கு பிரியாவிடை

தரம்1 பாடசாலைக்குச்செல்லும் நெடுங்கேணி தெற்கு இளந்தளிர் முன்பள்ளியின் மாணவர்களுக்குப் பிரியாவிடைநிகழ்வுநேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேச சபையின் உறுப்பினர் சோ. சத்தியேந்திரனின்தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி ரி.லிங்கநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் இ. தணிகாசலம் ,வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இராஜேஸ்வரன் , தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ச.மோர்சிபவான் ,நெடுங் கேணி பொலிஸ் நிலையபொலிஸ்உத்தியோகத்தர்கள், நெடுங்கேணி மகாவித்தியாலயஆசிரியை திருமதி .சரஸ்வதி ,அயல் முன்பள்ளி களின் ஆசிரியர்கள் ,மாணவர்கள் ,பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110,222)



கரைச்சிப் பிரதேச சபையில்

# முச்சக்கரவண்டி தரிப்பிடங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை

## அரசிதழ் வெளியிடுவதற்கும் தீர்மானம்

கிளிநொச்சி,டிசெ.13

**முச்சக்கரவண்டி தரிப்பிடங்களை அடையாளப்படுத்தி, அரசிதழ் வெளியிடுதலுடன், முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் நலன்கள் மட்டுமல்லாது பயனாளிகளான பயணிகளின் நலன்களிலும் கூடுதல் கவனம் செலுத்தவும், நேற்று நடைபெற்ற கரைச்சிப் பிரதேச சபையின் 10 ஆவது சபை அமர்வில் கவனம் செலுத்தப்பட்டது.**

முச்சக்கர வண்டி பயனாளிகளான பயணிகளின் பாதுகாப்பு, கட்டணங்கள் தொடர்பான விடயங்களுடன், போலியான ஆட்டோ தரிப்பிட உரிமை வைத்திருப்போர் மீதும் வாழ்வாதாரத்துக்காக ஏங்கும் ஆட்டோ உரிமையாளர்களுக்கு வாய்ப்பு வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

முச்சக்கரவண்டிதரிப்பிடங்களை அடையாளப்படுத்தி, அரசிதழ் வெளியிடுதல்,கல்லாறு பொதுச் சந்தை வருமானத்தை பெருக்குதல்,பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை பெருக்குதல், தனியார் கல்வி நிலையங்களிடமிருந்து வரி அறவிடுதல் ஆகிய பிரேரணைகளை முன்வைத்து சபை அமர்வு இடம்பெற்றது.

முக்கியமான 4 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டதுடன், சபையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அவற்றுக்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணைகள் நீண்ட விவாதத்தின் பின் நிறைவேற்றப்பட்டன.

கல்லாறு பொதுச் சந்தை வருமானத்தை பெருக்குதல் தொடர்பாகவும் கடல்சார் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் சந்தையாக இருக்கும் இதன் வளத்தை அதிகரித்து வருமானம் ஈட்ட முடியும் என கருத்துக்கள் பகிரப்பட்டு பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் உற்பத்தி பொருள்கள் விற்பனை நிலையங்களை உருவாக்குதல் தொடர்பான பிரேரணை விவாதிக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் வருகைதரும் பிரதான இடங்களை மையப்படுத்தி வர்த்தக நிலையங்களை எதிர்காலத்தில் திறக்கலாம் என்ற ஆலோசனைகளுடன் தீர்மானம் நிறைவேறியது.

சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலையங்களிடமிருந்து வரி வருமானத்தை ஈட்டுவதற்கான வழி வகைகளை ஆராய்தலும் அவற்றின் அடிப்படை வசதிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் முகாமை செய்தலும் தொடர்பான பிரேரணையும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. (222)


## இளையோருக்கான தொழில் பயிற்சி



மாந்தை, டிசெ. 13

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வேலையற்றிருக்கும் இளையோருக்கான தொழில் பயிற்சி வகுப்புகள் கடந்த ஒரு வாரமாக பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன. ஒப்பனைக் கலைகள், கைவினைப் பொருள்கள் தயாரித்தல், அலைபேசி திருத்தம், விளையாட்டுப் பொம்மைகள் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வளவாளர்களால் நடாத்தப்பட்டன என பிரதேச செயலர் றஞ்சனா நவரத்தினம் தெரிவித்தார். (9)

## வீதி சீரமைக்கும் போது மீட்கப்பட்ட வெடிபொருள்



முல்லைத்தீவு ,டிசெ.13

முல்லைத்தீவு குமுழமுனைப்பிரதேசத்தில் உள்ள செங்காட்டுக்கேணி வீதி நேற்று முன்தினம் கிரவல் இட்டு சீரமைக்கும்போது வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டு படையினர் வெடிபொருளை வீதியில் இருந்து அகற்றியுள்ளனர்.

எறிகணை ஒன்றின் பாகமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று குமுழமுனைப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ரி3)

## ஆர்ப்பாட்டத்தால் விசாரணை

வவுனியா, டிசெ.13

வவுனியா, பெரியகோமரசங்குளத்தில் உள்ள யேசுபுரம் எனுமிடத்தில் உள்ள சிறிய மலைக் குன்றில் கல்லுடைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மலைக் குன்றில் கல் உடைக்கப்படுவதால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும், கல் உடைப்பதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது என்று தெரிவித்துமே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கமைத்தனர் என்று தெரிவித்து கோமரசங்குளம் தேவாலயத்தின் அருட்தந்தை, கிராமத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று ஆசிக்குளம் வட்டாரப் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

இன்று காலை 10 மணியளவில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்துக்கு சமூகமளிக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்ப ட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-110)

*மன்னாரில்*

# நத்தார் நிகழ்வுக்கு ஏற்பாடுகள் ஆரம்பம்

மன்னார்,டிசெ.13

வருடந்தோறும் தேசிய ரீதியில் நடைபெறும் அரச நத்தார் தினக் கொண்டாட்டம் இந்த முறை மன்னாரில் நடத்தப்படுவதால் இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும், கிறிஸ்தவ மத அலுவல்கள்திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்யும் அரச நத்தார் கொண்டாட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகர சபை விளையாட்டரங்கில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில்இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நிகழ்வில் வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்துவின் அழைப்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பர்னாந்து, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்தார். (60)

# பாழடைந்த கிணறுகளை மூடுமாறு கள்ளப்பாடு மக்களால் கோரிக்கை

முல்லைத்தீவு.டிசெ.13

முல்லைத்தீவு கள்ளப்பாடு மற்றும் கடற்கரை பகுதிகளில் பத்துக்கும் மேற்பட்ட பாழடைந்த கிணறுகள் மற்றும் மலக்குழிகளை மூடுமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதனால் உயிராபத்து ஒன்றும் ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆம் திகதி சிறுவன் பாழடைந்த கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையினால் பல கிணறுகள், மலக்குழிகள் சேதமாகின. அவை இன்றும் பாழடைந்த நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.. தற்போது பெய்துள்ள மழையினால் ஆங்காங்கே காணப்படும் கிடங்குகள் மற்றும் கிணறுக்ள் சிறுவர்களுக்கு ஆபத்தானவையாகக் காணப்படுகிறன.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கருத்தில் எடுத்து மக்கள் குடியிருப்புக்கு அருகில் இருக்கும் பாழடைந்த கிடங்குகள் மற்றும் கிணறுகளை மூட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி3)

## ஆலய அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு





வவுனியா,டிசெ.13

வவுனியா பத்தினியார்மகிழங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் அபிவிருத்திக்கு நகரசபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் கோரிக்கைக்கு அமைவாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கான காசோலை வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது .

காசோலையினை முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் சார்பாக புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரும் வவுனியா நகர சபையின் உறுப்பினருமான சுந்தரலிங்கம் காண்டீபன் ஆலய நிர்வாகத்திடம் வழங்கிவைத்தார். (110)

# ட்ரம்ப் மீது நாடாளுமன்றில் தீர்மானம் பதவி முடிந்த கையோடு சிறைக்கு வாய்ப்பு



வோஷிங்டன்.டிசெ.13

அமெரிக்க நாடாளுமன்றத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படலாம் எனப் பரபரப்புத் தகவல்கள் வெளியாகி உள்ளன. பெண்கள் பலர் ட்ரம்புக்கு எதிராக பாலியல் முறைப்பாடுகளை முன்வைத்திருந்ததால் ட்ரம்ப் மீது அமெரிக்க நாடாளுமன்றத்தில் 'இம்பீச்மென்ட்' (கண்டனத் தீர்மானம்) கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க முடியும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடந்தது. அந்தத்தேர்தலுக்கானபரப்பரைஉச்சகட்டத்தில் இருந்தபோது, குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட தற்போதைய அதிபர் ட்ரம்ப் மீது பெண்களில் பலர் பாலியல் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தனர்.

ஆபாசப் பட நடிகை ஸ்டார்மி டானியல்ஸ் உள்ளிட்ட 2 பெண்கள், தங்களுடன் டிரம்ப் பாலுறவு வைத்துக்கொண்டதை வெளியே சொல்லி விடப்போவதாக மிரட்டியதாகக் கூறப்பட்டது. இந்த விடயம் வெளியே தெரிந்தால், அது அரச தலைவர்தேர்தலில்ட்ரம்புக்குஎதிராகத்திரும்பி விடும் என்பதால் குறித்த பெண்களுக்கு ட்ரம்பின் சட்டத்தரணியாக இருந்த மைக்கல் கோஹன்பணம்வழங்கிஅவர்களின்வாயை அடைத்தார்என்றும்தகவல்கள்வெளியாகின. இதையடுத்து அமெரிக்க தேர்தல் நிதிச் சட்டத்தை மைக்கல் கோஹன் மீறியதாக நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அந்தவழக்கு, விசாரணைக்கு வந்தபோது, தன்மீது கூறப்பட்டு உள்ள குற்றச் சாட்டுகளைமைக்கல்கோஹன்ஏற்றுக்கொண்டார்.

இந்தவிவகாரத்தில்இப்போதுட்ரம்ப்மீதுஅமெரிக்க அரசசட்டத்தரணிகள்நியூயோர்க்நீதிமன்றில்ஓர்ஆவணத்தைத்தாக்கல்செய்துள்ளனர். அந்த ஆவணத்தில், அவர்கள் ட்ரம்ப் கூறித்தான், மைக்கல் கோஹன் தேர்தல் நிதிச் சட்டத்தைமீறிஉள்ளார்எனக்கூறிஉள்ளனர். இது ட்ரம்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. இந்தவிவகாரத்தில்ட்ரம்ப்மீது அமெரிக்க நாடாளுமன்றத்தில்'இம்பீச்மென்ட்'(கண்டனத் தீர்மானம்)கொண்டுவந்துநடவடிக்கைஎடுக்க முடியும்எனக்கருதப்படுகிறது.

கடந்த மாதம் அமெரிக்காவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று, பிரதிநிதிகள் சபையைக்கைப்பற்றிஉள்ளது. எனவேஅந்தச் சபையில் தன் மீது 'இம்பீச்மென்ட்' கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக ட்ரம்ப் கருதுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனால் அரச தலைவர் பதவியில் இருந்து ட்ரம்ப் வெளியேறிய பின்னர், அவருக்கு இந்த விடயத்தில் சிறைத்தண்டனை கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக ஜனநாயகக் கட்சியினர் கருதுகின்றனர். அதே நேரத்தில் தன்மீது பிரதிநிதிகள் சபையில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும், செனட்சபையில்அது நிறைவேறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று ட்ரம்ப் கருதுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யூத வழிபாட்டு தலம் மீது தாக்குதல் முயற்சி அமெரிக்கர் கைது



வோஷிங்டன்.டிசெ.13

அமெரிக்காவில் ஓஹியோ மாகாணம், டோலிடோநகரத்தில்அமைந்துள்ளயூதவழிபாட்டு தலம் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஐ.எஸ். அமைப்பினர் முயற்சி செய்துள்ளனர். இது தொடர்பாக ஓஹியோ மாகாணத்தைச் சேர்ந்த ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர்எனஅறியப்படுகிறடேமன்ஜோசப்(வயது 21)என்பவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஐ.எஸ். அமைப்பினால் கவரப்பட்டு, அந்த அமைப்புக்காகயூதவழிபாட்டுதலத்தின்மீது தாக்குதல் நடத்துவதற்காக நீண்ட காலம் முயற்சி செய்து வந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் பெருத்த உயிர்ச்சேதம்ஏற்பட்டிருக்கும்எனஅவர்கள்தெரிவித்தனர். சமூக வலைத்தளங்களில் டேமன் ஜோசப் வெளியிட்ட பதிவுகளின் அடிப்படையில் அவரைமத்தியபுலனாய்வுஅமைப்புஉறுப்பினர்கள் பிடித்துள்ளனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் 2 யூத வழிபாட்டு தலங்களில் தான் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக அவர் ஒப்புக்கொண்டு உள்ளார். அவரிடம் இருந்து 2 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஐ.எஸ். அமைப்புக்கு ஆதவளித்த அமெரிக்கர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கனடாவில் கைதான சீனப் பெண் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிப்பு



ஒட்டோவா.டிசெ.13

அமெரிக்காவின் வேண்டுகோளின்பேரில் கனடாவில் கைது செய்யப்பட்ட சீன நிறுவனமொன்றின் நிதித்துறைத் தலைமை அதிகாரி மெங்வான்ஜவ்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சீனாவின் பன்னாட்டு நிறுவனமான ஹுவாய் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி மெங் வான்ஜவ், கனடாவில் வாங்கூவர் நகரத்தில் கடந்த முதலாம் திகதியன்று கைது செய்யப்பட்டார். அமெரிக்கா கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த நடவடிக்கையைக்கனடாஎடுத்தது. அவர்எதற்காகக் கைது செய்யப்பட்டார்? என்பது குறித்துத்திட்டவட்டமாகத்தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும், ஈரான் மற்றும்வடகொரியாமீதுஅமெரிக்கர் விதித்துள்ளபொருளாதாரத்தடையை மீறியதாகக் கூறப்படுகிற விவகாரத்தில்அவர்கைதுசெய்யப்பட்டிருக்கலாம்எனக்கூறப்படுகிறது.

கைதான உடன் உடல்நலக்குறவால் மெங் வான்ஜவ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அமெரிக்கா, -சீனா இடையேயான மோதலை மேலும் அதிகப்படுத்துவதாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. இந்தக் கைது நடவடிக்கை மனித உரிமை மீறல் என சீனா கொந்தளித்ததுடன், மெங்வான்ஜவ்வை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்என்றும்குரல்கொடுத்தது. சீனாவில் வலைத்தள ஆர்வலர்கள் மெங் வான்ஜவ் கைதைக் கடுமையாக விமர்சித்துப் பதிவுகள் வெளியிட்டுவந்தனர்.

இது அரசியல் விளையாட்டு என்ற விமர்சனமும்எழுந்தது. மெங்வான்ஜவ் கைதில் அரசியல் நோக்கம் இல்லை என்று கனடாத் தலைமை அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார். அவரைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் வான்கோவர் நீதிமன்றத்தில்வழக்கு தொடரப்பட்டது கடந்த மூன்று நாள்களாக விசாரணைநடந்துவந்தநிலையில், மெங் வான்ஜவ்ஐ விடுதலை செய்து வான்கோவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒரு கோடிக் கனடா டொலர்கள் பிணைத்தொகை மற்றும் நுழைவிசைவைச் சம்ர்ப்பிக்க வேண்டும். வான்கோவர் நகரில் உள்ள அவரது ஒரு வீட்டில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அவரைப் பிணையில் விடுவிப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டார்.

## பெப்ரவரியில் தேர்தல் பரப்புரைத் தடை நீக்கம்

### தாய்லாந்து அரசு அறிவிப்பு

பாங்கோங்.டிசெ.13

தாய்லாந்தில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதிபொதுத்தேர்தல்நடத்துவதுஉறுதியாகிஉள்ளநிலையில், அதற்கானபரப்புரைகளில்ஈடுபடுவதற்குஇதுவரை



அரசியல்கட்சிகளுக்குவிதிக்கப்பட்டிருந்ததடையைஅந்த நாட்டின் இராணுவ அரசு நேற்று முன்தினம் நீக்கியது. தாய்லாந்துநாட்டில்2014ஆம்ஆண்டு, பெண்தலைமை அமைச்சரான யிங்லக் ஷினவத்ராவை ஆட்சியில் இருந்து அகற்றி விட்டு, இராணுவம் புரட்சி செய்து ஆட்சிக்கு வந்தது. கடந்த ஆண்டு புதிய அரசமைப்பை இராணுவ அரசு இயற்றியது. அதன்மீது பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில்மக்கள்புதியஅரசியல்சாசனத்துக்கு ஒப்புதல் அளித்தனர். இந்த நிலையில் அங்கு பெப்ரவரி மாதத்தில் பொதுத்தேர்தல் நடத்துவது உறுதியாகி உள்ளது. அங்குபரப்பரைசெய்வதற்குஅரசியல்கட்சிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இராணுவ அரசு நேற்று நீக்கி விட்டது. இது தொடர்பாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தேர்தல் மூலம் ஜனநாயகம் மலருமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனென்றால், புதிய அரசமைப்பின்படி தேர்தல் நடைபெற்ற பின்னரும் இராணுவம்செல்வாக்குடன்திகழமுடியும். செனட்சபைநியமனங்களை இராணுவம் செய்ய முடியும். இதன் மூலம் தலைமை அமைச்சர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் இராணுவத்திடம் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



## தேவாலயத்தில் துப்பாக்கிச் சூடு பிறேசிலில் 4 பேர் சாவு

பிறேசிலியா.டிசெ.13
பிறேசிலின் தென் பகுதியிலுள்ள சன் பவ்லோ நகரின் தேவலாயம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர். பலர்காயமடைந்தனர்.பிறேசிலில் தென் பகுதியிலுள்ள சன் பவ்லோ நகரத்தில் நேற்று முன்தினம் அடையாளம்தெரியாதநபர்திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில்வழிபாட்டில்ஈடுபட்டிருந்த4 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்துமருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரும் தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாகவும்அவர்கணினிநிறுவனத்தில் பணிபுரிந்துவந்ததாகவும்அவருக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் எந்தத் தொடர்பும் இலை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை நேரில் கண்ட ஒருவர் கூறும்போது, 'முதலில் அவருக்குமுன்னால்இருந்தவர்களைச் சுட்டார்.

பின்னர் பலமுறை துப்பாக்கியால் சுட்டார். அவர்குறிபார்த்துஎல்லாம் சுடவில்லை' என்றார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் குறித்துவிசாரணைநடந்துவருவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் எவருக்கும் பெரும்பான்மை இல்லை




புதுடெல்லி.டிசெ.13
இந்திய மத்தியப் பிரதேச மாநிலத்தில்நடந்துமுடிந்தசட்டப்பேரவைத் தேர்தலில்எந்தக்கட்சிக்கும்பெரும்பான்மை கிடைக்கவில்லை. காங்கிரஸ்கட்சி114 இடங்களில்வென்று தனிப்பெரும்கட்சியாகஉருவெடுத்துள்ளது. பா.ஜ.க. 109 இடங்களில் வென்றுள்ளது. மத்தியப் பிரதேசத்தில் ஆட்சி அமைக்க 116 உறுப்பினர்கள் ஆதரவு தேவை என்பதால், காங்கிரஸ்கட்சிக்குஇன்னும் 2உறுப்பினர்கள் ஆதரவு இருந்தால் போதுமானது. காங்கிரஸ் கட்சிக்கு பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ் கட்சி ஆதரவு தர முன்வந்துள்ளதால், காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆளுநரிடம் கோரும் எனத் தெரிகிறது.

மத்தியப்பிரதேசம்உள்ளிட்ட5மாநிலங்களுக்கும் சட்டப்பேரவை தேர்தல் நடந்து, நேற்று வாக்கு எண்ணிக்கை நடந்தது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்து ஆளும்பாஜக,காங்கிரஸ்இடையே கடும் போட்டி நிலவியது. இரண்டு கட்சிகளும் சிறிய இடைவெளியில் மட்டுமே சென்றதால், யாருக்குப் பெரும்பான்மைகிடைக்கும்என்று கூற முடியாத நிலை இருந்தது. இந் நிலையில்,இரவுமுழுவதும்வாக்கு எண்ணிக்கை நடந்து அதிகாலையில்முடிந்தது. இதையடுத்து, எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பதைத் தேர்தல் ஆணையம் இன்று காலைஅறிவித்தது. மத்தியபிரதேச தலைமைத் தேர்தல் அதிகாரி வி. எல்.காந்தாராவ்நிருபர்களிடம்கூறுகையில், ' மத்திய பிரதேச மாநிலத்தில் 230 தொகுதிகளுக்கும் நடந்த தேர்தலில் வாக்கு எண்ணிக்கை நடந்துமுடிந்துள்ளது. இதில் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து 114 இடங்கள் பெற்றுள்ளது. பாஜக 109 இடங்களைப் பெற்றுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சி 2 இடங்களிலும், சமாஜ்வாதிக் கட்சி ஒரு இடத்திலும், சுயேச்சை உறுப்பினர்கள் 3 இடங்களிலும் வென்றுள்ளனர்' எனத் தெரிவித்தார்.

பாஜக, காங்கிரஸ்இடையேபெரும்பான்மை பெறுவதற்குக் குறைந்த அளவே வித்தியாசம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு 2 உறுப்பினர்கள் ஆதரவும், பாஜகவுக்கு 7 இடங்களும்பற்றாக்குறையாகஇருக்கின்றன. இதற்கிடையேபகுஜன்சமாஜ், சமாஜ்வாதிக்கட்சி ஆகியவை காங்கிரஸ்கட்சிக்கு ஆதரவுதர முன்வந்துள்ளதால் காங்கிரஸ் ஆட்சி அமைக்கக்கோரும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.




## மனச்சிதைவு, வெறி நோய்க்கு மருந்து

### ரஷ்யா சாதனை

மொஸ்கோ.டிசெ.13
எண்ணமும்செயலும்மாறுபட்டுச் செயல்படும்மூளைப்பாதிப்புக்களில் ஒன்றானமனச்சிதைவுநோயைக் குணப்படுத்துவதற்கானமருந்தை ரஷ்ய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மனக்கோளாறுகளில் ஒன்றான மனச்சிதைவுநோயால்உலகம்முழுவதும் சுமார்2கோடிப்பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்தநோயைமுற்றிலுமாகக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிலையில், ரஷ்யாவில் உள்ள பாவ்லோன் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்பெல்ட்மேன் ஆய்வுகூடத்தைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த முயற்சியில் இப்போது வெற்றி பெற்றுள்ளனர்.

ரி.ஏ.ஏ.ஆர்.ஐ எனக் குறியீட்டுப் பெயர் மட்டும் சூட்டப்பட்டுள்ள இந்தப்புதியமருந்தைஆய்வுகூடத்தில் உள்ளஎலிகளின்நரம்புமண்டலத்தில்ஊசிமூலம்செலுத்திப்பரிசோதித்தனர். இதன் எதிர்வினையாக எலிகளின் மூளைப்பகுதியில் உள்ள நரம்பியல் பகுதியில் சில மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

இந்த மருந்தால் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற மனச்சிதைவு, வெறிநோய்உள்ளிட்டவற்றைக்குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதாக இந்த ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.




## ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தாக்குதலில் 12 பேர் உயிரிழப்பு



காபூல்.டிசெ.13
ஆப்கானிஸ்தான்நாட்டின்தலைநகரானகாபூல்புறநகர்பகுதியில்நேற்று முன்தினம் தலிபான்கள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 4 இராணுவச் சிப்பாய்கள் உள்பட 12 பேர் சாவடைந்தனர். ஆப்கானிஸ்தான் நாட்டில் சுமார் 45 சதவீதம் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவருகின்றனர் தலிபான்கள். அவர்களுக்கு எதிராக ஆப்கான் இராணுவமும், விமானப்படையும் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில், ஆப்கானிஸ்தான்நாட்டின்தலைநகரானகாபூல் புறநகர் பகுதி வழியாகப் பயணித்த இராணுவ வாகனங்கள்மீதுதலிபான்ஆயுததாரிகள்நடத்தியதற்கொலைப்படை தாக்குதலில் 4 இராணுவச் சிப்பாய்கள் உள்பட 12 பேர் சாவடைந்தனர் என அந்த நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் நஸ்ரத் ரஹிமி தெரிவித்துள்ளார்.

இதில் காயமடைந்த மேலும் சிலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகஉள்ளூர்ஊடகங்கள்செய்திவெளியிட்டுவருகின்றன.

## விஜய் மல்லையாவை நாடு கடத்துவதற்கு உள்துறை அமைச்சுக்கு உத்தரவு



லண்டன்.டிசெ.13
விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு எவ்வித தடைகளும் இல்லை என்ற பிரிட்டன் வெஸ்ட்மினிஸ்டர்ஸ் நீதிமன்றத்தின் உத்தரவு பிரிட்டனின் உள்துறைஅமைச்சகத்தைவந்தடைந்துள்ளது. இதுகுறித்து விரைவில் பிரிட்டனின் உள்துறை அமைச்சகம் முடிவெடுக்கும் எனத் தெரிகிறது.

இந்திய வங்கிகளில் ரூ. 9ஆயிரம் கோடி (இந்திய மதிப்பில்) அளவில் கடன் வாங்கி விட்டுத் திருப்பிச் செலுத்தாமல் லண்டனில் தலைமறைவாகியுள்ள விஜய் மல்லையா மீது நீதிமன்றில் பாதிக்கப்பட்ட வங்கிகள் முறைப்பாடு அளித்தன. வழக்குப் பதிவு செய்து அவரது சொத்துகளையும் பரிவர்த்தனைகளையும் முடக்கியது இந்திய அரசு. தப்பியோடிய குற்றவாளி மற்றும் பன்னாட்டு அளவில் தேடப்படும் குற்றவாளியாக மல்லையா அறிவிக்கப்பட்டார். பின்னர் மல்லையாவை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்காக பிரிட்டனுடன்இந்தியஅரசுபேச்சுக்களை நடத்தியது. அதன்பேரில் லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில்விஜய்மல்லையாமீதான வழக்கு விசாரணை நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி விஜய் மல்லையாவை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கு எந்தத் தடையுமில்லை, இந்தத்தீர்ப்புபிரிட்டன்அயலுறவுத்துறை அமைச்சகத்திடம்அளிக்கப்படும்என்றும் தெரிவித்தார். இதன்படி நீதிமன்ற உத்தரவு இங்கிலாந்து உள்துறை அமைச்சக்துக்குஅனுப்பப்பட்டது. விஜய்மல்லையா தொடர்பாகநீதிமன்றஉத்தரவுவந்துள்ளதாக பிரிட்டனின் உள்துறை அமைச்சகமும் உறுதி செய்துள்ளது.

இந்த விடயத்தில் அதிகபட்சமாக 2மாதங்களுக்குள் உள்துறை அமைச்சு தன்னுடைய முடிவை அறிவிக்கும். விஜய் மல்லையா இரண்டு வாரங்களுக்குள் மேல்முறையீடுசெய்யவாய்ப்பு இருக்கிறது என்பதால் அதன் பிறகே இங்கிலாந்து உள்துறை அமைச்சகம் முடிவெடுக்கும் எனத் தெரிகிறது.

# தொண்டா மீது திரும்பிய சீற்றத்துடன் தொழிலாளர் போராட்டம் தொடர்கிறது





நுவரேலியா.டிசெ.13

**ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக்கோரித் தோட்டத் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக் குரல் கொடுத்துவருகின்றனர். அவர்களின் குரலுக்கு இது வரை எந்தத் தரப்பினரும் செவி சாய்க்கவில்லை. தற்போது அவர்கள் தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.**

மலையகத்தின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதிலும் கொட்டகலை - டிரேட்டன் தோட்டத்தொழிலாளர்கள்நேற்றுடன் தொடர்ந்து ஒன்பதாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நிலமை இவ்வாறிருக்க, தொழிலாளர்களின் பணிப்புறக்கணிப்பானது நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவுடன் கைவிடப்பட்டுள்ளதாகவும், போராட்டத்தில்ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்புமாறும்,தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பாக இனிமேல் தொழிற்சங்கங்களோடு பேச்சுக்களில்ஈடுபடமாட்டோம்என வெளிவந்திருந்த தகவல்கள் உண்மையற்றவை எனவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நுவரேலியா மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

எதிர்வரும் 19ஆம் திகதியன்று அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் நடக்கவிருக்கின்ற கலந்துரையாடலின்போது நல்ல தீர்வை அரச தலைவர் வழங்குவார் போராட்டத்தைக் கைவிடுங்கள் என்றுபணித்தார். இதனால், கோபமடைந்த தொழிலாளர்கள் தங்களுடைய போராட்டங்களை ஆறுமுகன் தொண்டமானுக்கு எதிராகத் திசை திருப்பினார். பணிப்புறக்கணிப்பில் ஈடுப்பட்டிருந்த எமக்கு நியாயமான தீர்வுகிடைக்கவில்லை. பொருளாதாரத்தில்எம்மைக்கடந்த 9நாள்களாகப் பாதிப்படையச் செய்துள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறும் பேச்சு நல்லதீர்வைத்தராது என்றஅச்சமும் நிலவுவதாகக்கூறித்தொழிலாளர்கள் தொண்டமானுக்கு எதிராகப்போராட்டங்களில் ஈடுபட்டனர். நுவரெலியா மாவட்டத்தில்பல பகுதிகளில் தொண்டமானுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தலவாக்கலை-மடக்கும்புரதோட்டத்தில் தொழிற்சாலைக்கு முன்பாக நேற்றுநடந்தஆர்ப்பாட்டத்தில்'தொழிலாளர்களின் குருதியை உறிஞ்சும் இராட்சச அட்டை' என ஆறுமுகன் தொண்டமானை வர்ணித்துத் தொண்டமானின் உருவப் பொம்மைக்குத் தீ மூட்டினர். ஹற்றனில் செனன் மற்றும் எபோட்சிலி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இணைந்து ஆறுமுகன் தொண்டமானுக்கு எதிராகவும், அவருடைய கட்சிக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். பொகவந்தலாவ பிரதேசத்தில் லட்சுமி தோட்டம், பொகவந்தலாவ ஆகிய தோட்டத்திலும், டிக்கோயா சாஞ்சிமலைதோட்டத்திலும், மஸ்கெலியாவில்சிலதோட்டப்பகுதிகளிலும், டயமகபிரதேச நகரங்களிலும்,தோட்டப்பகுதிகளிலும்இவ்வாறானஎதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன.



## 9 ஆவது நாளாகவும் நீடித்தது தொழிலாளர்களின் புறக்கணிப்பு

ஹற்றன். டிசெ.13

ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி மலையகத் தொழிலாளர்கள் ஒன்பதாவது நாளாகவும் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை காலைடிக்கோயா - புளியாவத்த பகுதியில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்க ப் பட்டது. டிக்கோயா - சாஞ்சிமலைப் பகுதி, நோவூட், மஸ்கெலியா , கொட்டகலை, கலபட ஆகிய பகுதிகளிலும்போராட்டங்கள்பரவலாகமுன்னெடுக்கப்பட்டன. இதன் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா பெறுந்தோட்டநிறுவனங்களால்வழங்கப்படவேண்டும் என வலியுறுத்திப் போராடி வருகிறார்கள் தொழிலாளர்கள். "தொழிலாளர்களாகிய நாங்கள் இன்று கட்சி பேதங்கள் இன்றி வீதியில் இறங்கிப் போராடுகிறோம்.

எனவே எங்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச்சம்பளம்வழங்கும்வரைநாம்தொழிலுக்குச்செல்லப்போவதில்லை" எனப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கோசமெழுப்பினர். சாஞ்சிமலை - ஹட்டன் முதன்மைவீதியை மறித்து சுமார் இரண்டுமணித்தியாலங்கள் போராட்டம் மேற்கொள்ளபட்டமை குறிப்பிடத்தக்கது.

## மணலுடன் வேகமெடுத்த டிப்பர் மோதி ஒருவர் சாவு

### தப்பியோடிய வாகனச் சாரதி கைது

திருகோணமலை.டிசெ.13

மட்டக்களப்பு - மூதூர் வீதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த வாகன விபத்து ஒன்றில் ஒருவர்சாவடைந்துள்ளார். திருகோணமலை-மூதூர் பெரிய பாலம் பகுதியைச் சேர்ந்த இரண்டுபிள்ளைகளின்தந்தையானமஹ்ரூப் மௌசூன் (வயது-29) என்பவரே இந்த விபத்தில் சாவடைந்துள்ளார்.

மட்டக்களப்பு- மூதூர் வீதியூடாக மூதூரை நோக்கிச்சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனமானது பெரியபாலம்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்த பகுதியில் வேறொரு வாகனத்தை முந்திச் சென்றபோது எதிர்த்திசையில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த நபருடன் மோதியுள்ளது.

மோதியபின்புவாகனத்தைநிறுத்தாமல்டிப்பர் சாரதி அந்த இடத்தைவிட்டு அகன்றுள்ளார். இதனால், கோபமடைந்த அந்தப்பகுதி மக்கள் விபத்து இடம்பெற்ற பகுதியை அண்மித்த திரிசீடிச் சந்தியிலிருக்கின்ற பொலிஸாரின் சோதனைச் சாவடியை உடைத்ததோடு வீதியை மறித்து ரயர்களைப் போட்டும் எரித்தனர். மட்டக்களப்பு- மூதூர் வீதியில் சில மணித்தியாலங்கள் வரை வாகனப் போக்குவரத்துத் தடைப்பட்டு இருந்தது. பின்னர் டிப்பர்வாகனச் சாரதியை மூதூர்ப் பொலிஸார் கைது செய்ததுடன் சம்பவம்தொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதிவழியாகத் தூரப் பிரதேசங்களுக்கு மணலை எடுத்துச் செல்லும் டிப்பர் வாகனங்கள் ஏனையவாகனங்களைமுந்திக்கொண்டு வேகமாகப் பயணிப்பதால் இதற்கு முன்பும் இத்தகைய விபத்துக்கள் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ளன.

மூதூர்மற்றும்சேருவிலைப்பிரதேசங்களுக்கு மேற்குப்புறமாக உள்ள கங்கை ஆற்றுப்பகுதியிலும், அதன் அயல்பகுதியிலுள்ளவிவசாயக் காணிகளிலும் முறைகேடாக இடம்பெற்று வரும் மணல் அகழ்வால் நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கானடிப்பர்கள்மணல்எடுத்துச் செல்லும் செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முறைகேடாக இடம்பெற்றுவரும் மணல் அகழ்வை நிறுத்துமாறு மூதூர் மற்றும் சேருவிலைப் பிரதேசங்களைச் சேர்ந்த சமூக நல அமைப்புக்கள் தொடர்ந்தும் கோரிக்கைகள் விடுத்து வரும் நிலையில் சில அரச அதிகாரிகளின் ஒத்துழைப்போடு முறைகேடான வகையில் இந்த மணல் அகழ்வு தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (40)

# 2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நாவிதன்வெளிப் பிரதேச சபையில் நிறைவேறியது





அம்பாறை.டிசெ.13

அம்பாறைமாவட்டநாவிதன்வெளிப்பிரதேசசபையின்2019ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நடந்த அந்தச் சபையின் 2018ஆம் ஆண்டுக்கான இறுதிக் கூட்டத் தொடரில் சபை உறுப்பினர்களால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளிப் பிரதேசசபையின்10 ஆவதுகூட்டத்தொடர்அமர்வின்போது இதற்கானபிரேரணைகள், மனுக்கள் என்பனவிவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்பட்டு,காரசாரமானவிவாதங்களும் இடம்பெற்றன. வருமானம் குறைந்த பிரதேசசபைகளுள் ஒன்றாக அம்பாறைமாவட்டத்தில்நாவிதன்வெளிப் பிரதேச சபை விளங்கினாலும் இந்தப் பிரதேசத்தில்மூவினமக்கள்வாழ்கின்றனர்.

பிரதேசத்தின்பிரதிநிதிகளாகியபிரதேச சபை உறுப்பினர்கள் கட்சி, இன, மத பேதங்களைக் கடந்து, நாட்டின் அரசியல்குழப்பகரமானநிலையிலும்வரவு செலவைஆதரித்துஅங்கிகரித்ததாகத் தவிசாளர் த.கலையரசன் தெரிவித்தார். இலங்கைத் தீவில் நாவிதன்வெளிப் பிரதேச சபை போல ஒற்றுமையான ஓர் அரசைக் காணமுடியாது. இதுபோன்ற ஒற்றுமை நாட்டின் அரசியல் தலைமைகளிடமும் காணப்பட வேண்டும். அபிவிருத்தியாக இருந்தாலும்சரி,ஏனையவிடயங்களாக இருந்தாலும்ஒற்றுமையுடன்கூடிநெகிழ்வுத் தன்மையுடன் முடிவெடுப்பதே ஒற்றுமைக்குக்காரணமென்றும்கூறினார்.

இதன்போது 2019ஆம் ஆண்டில் பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளும் சக உறுப்பினர்களால் முன்மொழி யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## பரீட்சையில் ஆள்மாறாட்டம் 5 பேர் வகையாகச் சிக்கினர்

2018ஆம் ஆண்டுக்கரன கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை நடைபெற்று வருகிறது. இதன்போது பரீட்சை எழுதுவதில் ஆள் மாறாட்டம் செய்த 5பேர் கைது செய்யப்பட்டனர்.

மாத்தறை மாவட்டத்தின் திஹகொட - புஹூல்வெல்ல பகுதியிலுள்ள பாடசாலையில் பரீட்சை எழுதுவதில் ஆள் மாறாட்டம் செய்த ஒருவர் கைது செய்யப்பட்டார். 24 வயதான பரீட்சார்த்திக்குப் பதிலாக 25வயதுடைய வேறொரு நபர் பரீட்சை எழுதியிருப்பது இதன்போது தெரியவந்தது. இதனுடன் தொடர்புடைய பரீட்சார்த்தியும் கைது செய்யப்பட்டார். மாத்தறை - கரதொட்டப் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

தணமல்வில - போதாகம பகுதியிலுள்ள பாடசாலையொன்றிலும் பரீட்சை எழுதுவதில் ஆள் மாறாட்டம் செய்த ஒருவர் கைது செய்யப்பட்டார். உரிய பரீட்சார்த்தியும் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் 40 மற்றும் 45 வயதுடையவர்கள்.

இதேவேளை, கல்முனை - சாய்ந்தமருதுப் பகுதியிலும் அதே பகுதியைச் சேர்ந்த 19வயதான ஒருவர் பரீட்சை எழுதுவதில் ஆள் மாறாட்டம் செய்ததால் கைது செய்யப்பட்டார். (222)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் ஏமாற்றப்பட்ட தமிழர் தரப்பு

நீண்ட இழுபறிகளுக்குப்பின்னர், ஒன்றரைமாதங்கள்கடந்த நிலையில் நாடாளுமன்றத்தில் தனக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்கின்றது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியோடு நிரூபித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இதனால்நாட்டில்ஏற்பட்டுள்ளஅரசியல்நெருக்கடி தீர்ந்துவிடுமா, என்று கேட்டால் இல்லை அதற்கு உடனடி வாய்ப்பு ஏதுமில்லை என்பதுதான் பதில். ஏனெனில் தான் சொன்னதையேவிடாப்பிடியாகப்பிடித்துக்கொண்டு, ரணிலை மீண்டும்தலைமைஅமைச்சராக்கமாட்டேன்என்றுகங்கணம் கட்டி நிற்கிறார் அரச தலைவர். நேற்றைய வாக்கெடுப்புக்கு முன்பாகவும் ரணிலுக்கு ஆதரவு வழங்காமல் நடுநிலை வகியுங்கள் என்று அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேட்டுள்ளார். எனவே நாடாளுமன்றத்தின் நேற்றைய முடிவால் அரச தலைவர் உடனடியாக மனம்மாறி ரணிலைத் தலைமை அமைச்சராக நியமிப்பார் என்பதற்கு வாய்ப்புகள் வெகு குறைவே!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்14நாடாளுமன்றஉறுப்பினர்களது ஆதரவோடும்நேற்றையவாக்கெடுப்பில்ரணில்வெற்றி பெற்றாலும்கூட தமிழர்களுக்கு, தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குத்தான்வழங்கியவாக்குறுதியைநிறைவேற்றாமல்ஏமாற்றியே அவரது இந்தப் பயணம் தொடங்கியுள்ளமை கண்கூடு. இந்த வாக்கெடுப்புக்கு முன்பாக நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களும் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தியது. புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அதிக நேரம் வலியுறுத்தினார். அரசியல்கைதிகளின்விடுவிப்பு, படையினரால்கையகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் வனவள, வன ஜீவராசிகள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விடுவிப்பு, காணாமற்போனோர்தொடர்பானவிசாரணைகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, போர்க்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பிலான கொழும்பின் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவது, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறைவேற்றுவது ஆகிய விடயங்கள் தொடர்பிலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ரணில் அவற்றை ஏற்றுக்கொண்டார், அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கப்படும் என்றார், கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பான எழுத்துமூல உடன்பாட்டைத் தான் மறுநாள் அதாவது நேற்றுக் காலையில் வழங்குவார் என்றும் உறுதியளித்தார். ஆனால் அப்படி எந்தவொரு ஆவணத்தையும்அவர்கூட்டமைப்புத்தலைவர்களிடம்கையளித்தார் என்று தகவல் இல்லை.

இதற்கு முன்னதாக, அப்படிப்பட்ட ஒரு கையெழுத்து ஆவணத்தை ரணிலிடம் இருந்து பெறுவது நடைமுறைச் சாத்தியமானது அல்லஎன்றுகூறியிருந்தவர்கூட்டமைப்பின்தலைவர், ஆனால் நேற்றுமுன்தினம், ரணிலின் கூட்டத்திற்கு முன்பாக நடந்ததமதுகட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள்கூட்டத்தில் அத்தகைய ஆவணத்தை ரணிலிடம் இருந்து தான் கேட்டுப் பெறுவார்என்றுதனதுநாடாளுமன்றஉறுப்பினர்களிடம்அவர் தெரிவித்திருந்தார். அதன்படியே தொடர்ந்து நடந்த ரணிலுடனானசந்திப்பிலும்அந்தக்கோரிக்கைமுன்வைக்கப்பட்டுஅது ரணிலால் ஏற்றுக்கொள்ளப்பட்டுமிருந்தது.

ஆனால்இறுதியில்அத்தகைய ஆவணம்எதுவும்கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குக்காண்பிக்கப்படவில்லை. இருப்பினும் அவர்களும் ரணிலுக்கு ஆதரவாகவே வாக்களித்தார்கள். ரணிலோ தனது பேச்சில்கூட புதிய அரசமைப்பைக் கொண்டுவருவேன்என்று சொன்னரேதவிர, கூட்டமைப்பின் ஏனைய கோரிக்கைகள் குறித்து மூச்சுக்கூடக் காட்டவில்லை.

இப்படி ஏமாற்றத்துடனேயே தொடங்கியிருக்கும் இந்த புதிய ஆட்சியின்மூலம்தமிழர்களும்கூட்டமைப்பும்எதைப்பெறப் போகிறார்கள் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும். ஆனால் காலம் இந்த அரசியல்வாதிகளைப் போன்று ஒருபோதும் தடுமாறாது.

---

**கடந்துபோன தோல்வி நிலைகளையும், கடமைக்கூறுகளில் உள்ள தேக்க நிலைகளையும் கடந்துவந்து உழைப்பைப் பெருக்கி, இனி வருகின்ற முயற்சிகள் அனைத்திலும் தமிழர்களுக்குச் சாதகமான அடைவுகளைப் பெற முயற்சிக்க வேண்டும். சொல்லுவது எல்லோருக்கும் எளிது. சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம்.**

# வினைத்திட்பம் பலமாக வேண்டும்!


செ.உமாசுதன்

எப்போதும் தோல்வி என்பது மீண்டும் ஒரு முயற்சியை இன்னும் திறமையுடன் தொடங்குவதற்கு வழங்கப்படும் வாய்ப்பாகும். எனவே, தோல்விக்கான காரணத்தை அறிந்து கொண்டு, அதைத் திருத்திக் கொண்டு அடுத்த முயற்சியை மேற்கொள்ள என்றுமே கற்றுக் கொள்ள வேண்டும். இது வாழ்க்கை தருகின்ற அனுபவப் பாடம். தமிழர்களைப் பொறுத்தவரையிலே இந்த அனுபவப் பாடம் கடந்த காலங்களில் பல வித கோணங்களில் பட்டறிவுகளைத் தந்துள்ளது.

குறிப்பாக அகிம்சை, ஆயுதம் என தமிழர்களின் உரிமை குறித்து பயணம் கொண்ட உன்னத இலட்சியங்கள் இவ்விதமே உருக்கொண்டன. முயற்சியின் வழி மகத்துநிலையை அடைந்தன. இலங்கையின் அரச அதிகாரத் தரப்புகள் மேற்கொண்ட அடக்குமுறையையும், ஆதிக்க வெறித்தனத்தையும் எதிர்கொண்டு போரடின. அழிந்தாலும் உரிமை என்ற உயரிய இலட்சிய அடைவை கண்டுகொள்வதற்கான மன பலத்தைத் தந்துள்ளன.

### தமிழர்களின் தற்போதைய பலம்!

இந்தநிலையிலே தற்போது தமிழ்மக்கள் கொண்டுள்ள பலம் என்பது தனித்து 'ஜனநாயகம்' என்பதாகவே நிலைபெற்றுள்ளது. அதில் அங்கத்துவம் பெறுகின்ற பிரதிநிதித்துவங்களை நம்பியே கட்டமைப்புப் பெற்றுள்ளது. அதன்வழிப்பட்டு



மக்கள் தமக்குரித்தான நியாயங்களையும், உரித்துக்களையும், தீர்வுகளையும் பெற்றுக் கொள்வதற்குப் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர். பிரதிநிதித்து வங்கள் மேற்கொள்கின்ற ஒவ்வோர் முயற்சிகள் குறித்தும், பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவர்களால் வெளிக்காட்டப்படுகின்ற எதிர்வினையாற்றல் குறித்தும், எதிர்வினையாற்றலுக்கு அதிகாரத் தரப்பிடம் இருந்து கிடைக்கின்ற பின்னூட்டம் குறித்தும், கிடைக்கப் பெறுகின்ற பின்னூட்டத்தின் பெறுமானம் குறித்தும், அது கொண்டுள்ள செயலாற்றல் குறித்தும் சிந்திக்கின் றனர்.

உண்மையில் இந்த ஜனநாயகச் சுற்றோட்டம் குறித்த அதீத நம்பிக்கைகளை தமிழ்மக்கள் 2009 களின் பின்பான காலத்தில் இருந்து மாறுதலின்றி வலுப்பெறச் செய்துள்ளனர். இது யாவரும் அறிந்த விடயம். ஆனாலும் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழமைவுகள் ஜனநாயகத்தின் உறுதிப்பாடு எந்தளவுக்கு பயன் தரும் என்பதை கேள்விநிலைக்கு உட்படுத்தியுள்ளன. அதிகாரப் போட்டியில் ஜனநாயகம் சிதைவடைந்துள்ளது. மக்கள் நலன் குறித்த செயற்பாடுகள் தேக்கமடைந்துள்ளன. யார் ஆட்சி பீடத்தில் அமர்வது என்பதில் பேச்சுவார்த்தைகளும், ஒன்றுகூடல்களும் முடிவின்றி இடம்பெற்று வருகின்றன.

### இணக்கப்பாடுகள் சாதகமாக வேண்டும்!

இந்தசந்தர்ப்பத்திலே தமிழர் பிரதிநிதித்துவங்கள் தமிழர்களுக்குரித்தான விடயங்கள் குறித்து பேசுவதற்கான சந்தர்ப்பங்கள் கிட்டியுள்ளன. நவம்பர் மாதம் 29 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவோடு இடம்பெற்ற சந்திப்பின் போது கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்று அதைச் செயற்படுத்துவது குறித்த உறுதிப்பாட்டு ஆவணம் வழங்கப்படவில்லை. ஆனால் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது, கூட்டமைப்பு விதித்த நிபந்தனைகளை செயற்படுத்துவது குறித்த எழுத்துமூல ஆவணத்தை வழங்குவதற்கு அவர் இணங்கியுள்ளார்.

குறிப்பாக, "புதிய அரசமைப்பு உருவாக்கம், அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவாகாரம், ஐ.நா மனித உரிமைகள் 'சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தல், பொறுப்புக்கூறல் பொறிமுறை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குதல், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்குதல்" போன்ற கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்கவே ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிகிறது.

### செயலாற்றும் உறுதி பலம் பெற வேண்டும்!

இங்கு, தமிழர்களுக்கான தீர்வு குறித்து சிந்திக்க வேண்டிய தற்போதுள்ள அதிகாரத் தரப்பாக, 2015 இல் மலர்ந்த நல்லாட்சியின் பங்குதாரராக ரணில் விக்கிரமசிங்க உறுதிப்பாட்டு ஆவணத்தையும், உறுதிமொழிகளையும் வெளிப்படுத்தினாலும், அவற்றின் செயல்வலு என்பது எதிர்காலத்தில் எவ்விதமாக அமையும் என்பது தொடர்பில் தமிழர் பிரதிநிதித்துவங்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ் தரப்போடு ஆதரவுக்கரம் நீட்டி கைச்சாத்திடப்பட்ட ஆவணங்கள் கிழித்தெறியப்பட்ட வரலாற்றுப் படிமங்கள் உள்ளதை மறந்துவிட முடியாது.

தற்போது ரணிலை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டில் மனம் தெளிந்து செய்யத் துணிந்த செயலைத் தடுமாறாமல், தாமதிக்காமல் செய்ய முற்பட்டது போலவே எதிர்காலத்தில் மேற்போந்த அடைவுகளை சீரிய முறையில் முழுமையான பயனுறுதியாகப் பெறுவதிலும் வினைத்திட்பத்தோடு செயலாற்ற முன்வர வேண்டும்! கடந்துபோன தோல்வி நிலைகளையும், கடமைக்கூறுகளில் உள்ள தேக்க நிலைகளையும் கடந்துவந்து உழைப்பைப் பெருக்கி, இனி வருகின்ற முயற்சிகள் அனைத்திலும் தமிழர்களுக்குச் சாதகமான அடைவுகளைப் பெற முயற்சிக்க வேண்டும். சொல்லுவது எல்லோருக்கும் எளிது. சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம் என்பதை உணர்ந்துகொண்டு செயலாற்றுங்கள்.

# அரசியல் குழப்பங்கள் நீடிப்பது சிறுபான்மையினருக்கு நல்ல சகுனமல்ல!

சேரலாதன்



கூட்டமைப்பைப் பகடைக் காயாகப் பயன்படுத்துகின்ற முயற்சிகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. அரசியலில் எதிரும் புதிருமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு தரப்புக்கும் கூட்டமைப்பின் ஆதரவு தற்போது அவசியமாகத் தேவைப்படுவதால், அதைத் தம்பக்கம் இழுத்துப் போடுகின்ற முயற்சிகளில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

**தமிழர்களை ஏமாற்றிவரும் சிங்களத் தலைமைகள்!**

தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு தரப்பினருமே 'துரோகம்' செய்தவர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்கள் தமிழர்களுக்கு உதவுவார்களென நம்பிக் கொண்டிருக்கவும் முடியாது. இந்த நிலையில் அரசியல் சாணக்கியத்துடன் செயற்பட வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. இதில் தவறுகள் ஏற்படுமானால் மக்களின் வெறுப்பை சந்திக்க வேண்டிய நிலை உருவாகிவிடும். சிங்களத் தலைமைகள் காலத்துக் காலம் தமிழர்களை ஏமாற்றி வந்துள்ளமை ஒன்றுமே புதிய விடயமல்ல.

தமிழர்களின் வாக்குகளால் பதவியில் அமர்ந்த தற்போதைய அரச தலைவர் கூட நன்றி மறந்து செயற்படுவதையே காண முடிகின்றது. இதனால் இவர் போன்றவர்கள் வழங்குகின்ற வாக்குறுதிகளை நம்புவதில் பயனில்லை.

தற்போது இந்த நாட்டில் உருப்பெற்றுள்ள அரசியல் குழப்பநிலை மிகப் பாதகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிடுமென்பதில் ஐயமில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையே நிலைகுலைந்து போகுமளவுக்கு நிலமை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக அரச ஊழியர்களுக்கான வேதனத்தை வழங்குவதில் கூட சிக்கல் நிலை தோன்றுமெனக் கூறப்படுகின்றது. அதுமட்டுமல்லாது அரச இயந்திரம் முற்று முழுதாகச் செயலிழந்து விடக் கூடுமென்ற அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது.

**பதவி ஆசையில் சிக்குண்டு தவிக்கும் மகிந்த ராஜபக்ச**

ஆனால் குழப்பநிலைக்குக் காரணமானவர்கள் ஒருவரையொருவர் குறைகூறிக் கொண்டிருக்கின்றனர். தலைமை அமைச்சர் பதவியில் தமக்கு நாட்டமில்லையெனவும், அரச தலைவரே தம்மை வலுக்கட்டாயமாக அழைத்துச் சிக்கலில் மாட்டிவிட்டதாகவும் மகிந்த புதுக்கதையொன்றைக் கூறுகின்றார்.

அவர் நேர்மையான ஒருவராக இருந்திருப்பாராயின் நாடாளுமன்றத்தில் தமது அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதே பதவியைத் துறந்திருக்க வேண்டும். ஆனால் அவரால் அவ்வாறு நடந்து கொள்ள முடியவில்லை. சுமார் 10 ஆண்டுகள் அரச தலைவராக இருந்த ஒருவர் இவ்வாறு நடந்து கொள்வதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

**காரியங்களைச் சாதிப்பதில் பன்னாட்டுச் சமூகம் தோல்விகண்டுள்ளது!**

இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துக் காரியங்களைச் சாதிப்பதில் பன்னாட்டுச் சமூகம் தோற்றுப் போயுள்ளதை யாரும் மறுத்துரைப்பதற்கில்லை. அதை ஏற்றுக் கொண்டேயாகவேண்டும். இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுவதை இலங்கை தவிர்த்து வருவதை வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமே அவற்றால் முடிந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆண்டுதோறும் இடம்பெறும் போது அங்கு சமூகமளித்து போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கான உபாயங்களில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. பன்னாட்டுச் சமூகம் ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலும் இலங்கையின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் அக்கறை காட்டுவதில்லை என்பதுடன், குற்றவாளிகளைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். பன்னாட்டுச் சமூகமாக இருக்கட்டும் அல்லது ஐக்கிய நாடுகள் சபையாக இருக்கட்டும் இலங்கையைக் கட்டுப்படுத்துவதற்கு இயலாத நிலையில் இருப்பது, அந்த நாட்டின் இறைமைக்குத் தீங்கையே விளைவிக்கும் என்பதை மறுத்துவிட முடியாது.

**ஜனநாயகம் பலம்பெற வேண்டும்!**

தற்போது மிகப் பெரிய ஜனநாயகப் படுகொலை இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அரச தலைவரே அதை முன்னின்று நடத்திக் கொண்டிருப்பதைத் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் அரசியல் குழப்பங்கள் தொடர்வது அங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஆபத்தானதாகவே போய்முடிந்துவிடும். இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவரான சமந்தாபவர் அம்மையார் இதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒட்டுமொத்தமாக இவற்றையெல்லாம் எடுத்துநோக்குகின்ற போது, இலங்கையைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் தோற்றுப்போனால் இந்த நாட்டின் தலைவிதி மோசமானதாகவே அமைந்துவிடப் போகிறது. இதனால் பாதிக்கப்படப் போவது சிறுபான்மை இனத்தவர்களே.

தற்போது மிகப் பெரிய ஜனநாயகப் படுகொலை இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அரச தலைவரே அதை முன்னின்று நடத்திக் கொண்டிருப்பதைத் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் அரசியல் குழப்பங்கள் தொடர்வது அங்கு வாழ்கின்ற மக்களுக்கு ஆபத்தானதாகவே போய்முடிந்துவிடும்.



## ஆசிரியருக்கான கடிதம்

# மருத்துவச் சமூகம் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்!

அண்மைக் காலமாக எவருமே எதிர்பார்க்காத வகையில் இறப்புக்கள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. தெல்லிப்பழை ஆதார மருத்துவம்னையில் பொது மருத்துவ நிபுணராகப் பணிபுரிந்த மருத்துவர் அ.ரகுபதியும் இதில் அடங்குகின்றார். இந்த நிலை நீடிப்பது நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

இன்று நீரிழிவு நோயும், உயர் குருதியமுக்கமும் சாதாரண வியாதிகளாகிவிட்டன. உயிர்க் கொல்லி நோய்களாகவும் இவை மாறிவிட்டன. மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களே இந்த நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இங்கு, தொற்று நோய்கள் குறித்தும், தொற்றா நோய்கள் குறித்தும் மக்கள் விழிப்புணர்வு பெற வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளதோடு, இவற்றின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டிய பெரும் பொறுப்பு மருத்துவச் சமூகத்திடம் உள்ளதை மறுத்துக் கூறிவிட முடியாது.

ஏனெனில் மக்கள் இந்தச் சமூகத்தையே நம்பியுள்ளனர். மக்கள் கொடிய நோய்களிலிருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அவ்வப்போது மேற்கொள்ளாது, பொருத்தமான நடைமுறைகளின் கீழ் சுழற்சி முறையில் மக்கள் விழிப்புணர்வையும், நோய்க் காரணிகள் குறித்த தெளிவையும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். தவிர உரிய மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுவதைப் தவிர்ப்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இத்தகு கடமைவெளியில் இருந்து பொதுச் சேவைத் துறையினர் குறிப்பாக, மருத்துவர்கள், சுகாதாரத் துறையினர் விலகி நிற்கும் பட்சத்தில் திடீர் சாவுகளின் எண்ணிக்கையைத் தடுத்து நிறுத்துவது முடியாத காரியமாகிவிடும்.

**பா.தனபாலசிங்கம், சுன்னாகம்.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## ஜோர்ஜ் வாசிங்டன்

அமெரிக்காவில் முதல் அரச தலைவராக ஜோர்ஜ் வாசிங்டன் 18ஆவது நூற்றாண்டில் அமெரிக்க குடியரசை நிறுவியவர்களில் முக்கியமானவர்.
ஒரு சமயம் நேரம் கழித்து அலுவலகம் வந்த தமது செயலாளரை அழைத்து "தாமதத்து, என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்கு அந்தச் செயலாளர், "காலதாமதம் ஆனதற்கு தன்னிடம் இருக்கும் கடிகாரம்தான் காரணம் என்றும் தன்னை மன்னிக்கும் படியும்" வேண்டினார்.
அதற்கு வாசிங்டன் "அப்படியா இந்தத் தவறு நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் இரண்டில் ஒரு காரியம் உடனேயே நடந்தாக வேண்டும். ஒன்று நீர் வேறு கடிகாரம் வாங்கிக் கொள்ள வேண்டும். அல்லது நான் வேறு செயலாளரை அமர்த்திக் கொள்ள வேண்டும்" என்று சாந்தமாகக் கூறினார். அன்று முதல் அந்தச் செயலாளர் தினமும் சரியான நேரத்துக்கு அலுவலகத்துக்கு வரத் தொடங்கிவிட்டார்.

## வர்ணம் தீட்டுவோம்




## கிறிஸ்மஸ் தாத்தா



பொசுபொசுவென பருத்திப் பஞ்சு மாதிரிப் பளீரென்ற வெள்ளைத் தாடி, சிவப்பும் வெள்ளையும் கலந்த அங்கி, தலையில் அழகான தொப்பி, பரிசுகள் நிறைந்த ஒரு பெரிய கோணிப் பை, அதோடு 'ஹோ... ஹோ... ஹோ...' என்று தொப்பை குலுங்கும் அவரது சிரிப்பு ஆகியவைதான் கிறிஸ்மஸ் தாத்தாவின் அடையாளங்கள். இவரைப் பார்த்தாலே குழந்தைகள், "ஹய், கிறிஸ்மஸ் தாத்தா" என்று கத்திக் குரல் எழுப்பிக் குதிப்பார்கள்.
அப்படிக் குழந்தைகள் விரும்பும் தாத்தாவான 'சாண்டா கிளாஸ்' பெங்குயின்கள் வாழும் வட துருவத்தில் வசிப்பதாகவும், எட்டுக் கலைமான்களால் இழுத்துச் செல்லப்படும் பனிச் சறுக்கு வண்டியை ஓட்டியபடி வானில் பறந்து வருபவர் என்றும் நம்பப்படுகிறது. இவரது வண்டியில சின்னஞ்சிறு கிங்கிணி மணிகள் கட்டப்பட்டிருக்கும். அந்த மணியின் ஓசைக்கு ஏற்ப 'ஜிங்கிள் பெல்ஸ் ஜிங்கிள் பெல்ஸ் ஜிங்கிள் ஆல் த வே" என்ற குழந்தை பாடல் கேட்கவே இதமாக இருக்கும். இந்தப் பாடல் உருவாகிச் சுமார் 500 வருடங்கள் ஆகிவிட்டன என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.
பல சிறப்புகளுக்குரிய இந்தத் தொப்பைத் தாத்தா வாழ்ந்த நாடு துருக்கி. அந்த நாட்டில் உள்ள மைரா என்ற ஊரில் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் ஒரு பணக்கார வீட்டில் பிறந்தவர். அவருடைய உண்மையான பெயர் நிக்கோலஸ். இயேசுவின் மீது அளவு கடந்த அன்பைக் கொண்டிருந்தார். அவர் வளர்ந்து பெரியவர் ஆனதும் கிறிஸ்தவப் பாதிரியாராக மாறினார். இரக்கக் குணம் உள்ளவர்.
உங்களைப் போன்ற குழந்தைகள் என்றால் அவருக்கு உயிர். நிக்கோலஸைச் சுற்றி எப்போதும் குழந்தைகள் கூட்டமாக இருப்பார்கள். ஏன் தெரியுமா? குழந்தைகளுக்கு விதவிதமாகத் தீனி, பொம்மைகளை அவர் பரிசாகக் கொடுத்துக் கொண்டே இருப்பார். இதற்காக அவருடைய அப்பா, அம்மா விட்டுப்போன சொத்துகளைக் கூட விற்றுச் செலவழித்திருக்கிறார். வீடு வீடாகப் போய்க் குழந்தைகளைப் பார்த்து அவர்களுக்குப் பரிசு கொடுப்பது அவருக்கு ரொம்ப பிடிக்கும். பரிசு கொடுப்பது மட்டுமல்ல, அவர்களுடன் சேர்ந்து ஆடிப் பாடவும் செய்வார்.
எப்போதும் கிறிஸ்துமஸ் விழாவைக் குழந்தைகளோடுதான் ப்கொண்டாடுவார். அதனால் அவரை எல்லோரும் 'ஃபாதர் கிறிஸ்மஸ்'என்று அப்போது அழைத்தார்களாம். அவருடைய பிறந்த நாளைச் சிறப்பிக்கும் விதமாக கிறிஸ்மஸ் தாத்தா போல வேஷம் போடும் பழக்கம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு உருவானது. கிறிஸ்துமஸ் முதல்நாள் இரவு, குழந்தைகள் உறங்கிய பிற்பாடு கிறிஸ்மஸ் தாத்தா வந்து, அவர்களுக்குப் பிடித்த பரிசை வீட்டில் வைத்துவிட்டுப் போவார் என்று இப்போதும் நம்பப்படுகிறது. நீங்களும் கிறிஸ்மஸ் தாத்தாவை ஒரு தடவை வீட்டுக்குக் கூப்பிட்டுப் பாருங்களேன்.

1823ஆம் வருடம் கிளெ மெண்ட் கிளார்க் மூர், என்பவர் தன் குழந்தைகளுக்காக எழுதிய ஒரு பாடலில் நிக்கோலஸ் பரிசுகளுடன் வந்துசெல்லும் கிறிஸ்துமஸ் இரவை வர்ணித்து எழுதியிருந்தார். இந்தப் பாட்டில் விவரித்து அவர் எழுதியது போலவும் வாசிங்டன் நகரில் வாழ்ந்து மறைந்த இர்விங் என்பவர் எழுதிய 'செயிண்ட் நிக்கோலஸ்' என்ற புத்தகத்தின் அடிப்படையிலும் 1863ம் ஆண்டு தாமஸ் நஸ்ட் என்ற ஓவியர் சாண்டா கிளாசின் உருவங்களைப் பலவிதமாக வரைந்தார்.
இப்போது நாம் பார்க்கின்ற சாண்டா கிளாஸ் உருவத்துக்கு இந்த ஓவியங்கள்தான் அடிப்படை. அதுமட்டுமல்ல, 'சாண்டா கிளாஸ்' என்ற பெயரைப் பிரபலப்படுத்தியது அமெரிக்காதான். இப்போது கிறிஸ்துமஸ் தாத்தா என்றாலே சாண்டா கிளாஸ் பெயரும் சேர்ந்தே வந்துவிடுகிறது.

## சிகிரியா



சிகிரியா (Sigiriya / Lion Rock) இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.
ஆயிரத்து 144அடி உயரமான இந்தக் குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இந்தக் கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477-495) அமைத்தான்.
கோட்டையைச் சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது. சிகிரியாக் குன்றானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) பாதுகாக்கப்படவேண்டிய உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## சின்னத்தம்பி

சின்னத்தம்பி சின்னத்தம்பி வா வா வா
சிவன்கோயில் போய் வரலாம் வா வா வா
மின்னும் நல்ல சப்பரமாம் வா வா வா
மேளமொடு நாதஸ்வரம் வா வா வா

பூங்காவனம் பார்ப்போம் வா வா வா
புதுமையான சோடினையாம் வா வா வா
ஆங்காங்கு கடைகளுண்டு வா வா வா
அழகுப் பொம்மை வாங்கிடலாம் வா வா வா


காசு கொண்டு நான் வருவேன் வா வா வா
கடலை மிட்டாய் வாங்கிடுவோம் வா வா வா
ஈசனை நாம் கும்பிடுவோம் வா வா வா
இன்பம் மிகப் போற்றிடுவோம் வா வா வா




## விலங்குகளின் ரகசியங்கள்!

- தன் உடலின் நீளத்தைப் போல இரண்டு மடங்கு பெரிய நாக்கு உள்ள விலங்கு பச்சோந்தி.
- முன்னால், பின்னால், பக்கவாட்டில் என எல்லாப் பக்கமும் பறக்கும் திறன் கொண்ட பறவை தேன்சிட்டு.
- நாக்கை வெளியில் நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
- மணிக்குச் சுமார் 140 மைல் தூரத்தைத் தாவலின் மூலம் கடக்கும் விலங்கு கங்காரு.
- உலகின் பெரிய உயிரினமாகக் கருதப்படும் நீலத் திமிங்கிலத்தின் நீளம் சுமார் 30 மீற்றர் வரை இருக்கும்.
- பாம்பு முட்டை இடப்பட்ட பிறகு பெரிதாகும் திறன் கொண்டது.
- ஒரு கிலோ தேன் எடுக்க ஒரு தேனீ செல்லும் தூரம், பூமியை 4 முறை சுற்றி வருவதற்குச் சமமானது.
- திமிங்கிலத்தின் இதயம் நிமிடத்துக்கு 540 முறை துடிக்கும்.
- உயிரினங்களில் நீண்ட காலம் வாழும் பிராணி ஆமை.
- அடிபட்டால் மனிதரைப் போல அழும் பண்புடையது கரடி.

## வழிகாட்டிடுவோம்



## வில்லனாக மாறிய ஸ்ரீகாந்த்



ரோஜா கூட்டம் படம் மூலம் அறிமுகமான ஸ்ரீகாந்த் தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில், பார்த்திபன் கனவு என்ற வெற்றி படங்களில் நடித்தார். தற்போது தமிழ், மலையாளம் என இரண்டு மொழிகளில் உருவாகும் 'உன் காதல் இருந்தால்' படத்தில் வில்லனாக நடிக்கிறார். மலையாளத்தில் 10க்கும் மேற்பட்ட படங்களைத் தயாரித்துள்ள ஹாசிம் மரிக்கர் இந்தப் படத்தை இயக்கி உள்ளார். படம் பற்றி அவர் கூறும்போது, "படத்தில் ஸ்ரீகாந்துடன் லெனா, மக்பூல் சல்மான், சந்திரிகா, காயத்ரி உட்பட பலர் நடித்துள்ளனர். ஒரு படம் நன்றாக ஓடுவதற்கு கதை தான் தேவை. இந்தப் படத்தில் அது உண்டு. படத்தின் பெயர் தான் காதலோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது. ஆனால் படத்தில் காதல் பற்றி ஒன்றும் இருக்காது" என்றார்.

படித்ததில் பிடித்தது



## பழைமையை மறக்ககூடாது

ஒரு முறை பில்கேட்ஸ் ஒரு நட்சத்திர உணவகத்துக்குச்சென்று உணவு உண்டுபின் அனைத்துப் பணியாளர்களுக்கும் 5டொலர் டிப்ஸ் கொடுத்தார்.

அனைவரும் அதிர்ந்து போய் நின்றனர். உடனே அவர்கள் பில்கேட்ஸிடம் கேட்டனர் "உங்கள் மகன் இங்கு வந்து உணவு உண்டு பின் 500டொலர் டிப்ஸ் கொடுத்தார், ஆனால் நீங்கள் 5டொலர் மட்டும் கொடுக்கிறீர்களே?"

அதற்கு பில்கேட்ஸ் "அவன் உலகிலேயே மிக பெரிய பணக்காரரின் மகன் அதனால் அவன் கொடுக்கிறான். ஆனால் நான் ஒரு விறகு வெட்டியின் மகன்" என்று கூறினார்.

என்றுமே பழைமையை மறக்க கூடாது!



உங்களை
எங்கேயோ பார்த்த
மாதிரி இருக்கே?
முகப்புத்தகத்தில்
இருக்கிறீர்களா?
இல்லை!
வாட்ஸ் அப் ல? இல்லை!
ருவீற்றர் ல? இல்லை!
ஸ்கைப் ல? இல்லவே இல்லை!
அப்புறம்? உங்க வீட்டு மாடியில் தான்
2 வருசமா வாடகைக்கு இருக்கேன்...!!!




சின்ன வயசுல இதுதான்
எங்களுக்கு ஐபோன்...😊

நடக்கும் கால்களில்
எவ்வளவு வித்தியாசம்
ஒன்று **முன்னால்**
என்றால்,
மற்றொன்று **பின்னால்**
பயணிக்கின்றது

ஆனால் முன்னால்
இருக்கும் கால்
**கர்வப்படவும்** இல்லை,
பின்னால் இருக்கும் கால்
**அவமானப்படவும்**
இல்லை

அவைகளுக்குத் தெரியும்
**நிமிடத்தில்**
**நிலமை மாறும்**
**என்று...**




எந்த ஒரு நாட்டில் உணவு, கல்வி, மருத்துவம் என
அனைத்தும் வியாபாரம் ஆக்கப்படுகின்றதோ..




அந்த நாடு தன்னுடைய வளர்ச்சியை
இழந்து வருவதாக அர்த்தம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பரிடம் சொந்த விடயங்களை பேசுவீர்கள். நல்ல தீர்வுக்கான ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும்.

**இடபம்:** மனதில் அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். அன்றாடப் பணிகளை அதிக பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம்.

**கடகம்:** செயல்களில் நியாயம் நிறைந்திருக்கும். பலரும், உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி சீரான முன்னேற்றம் தரும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த காரியம் வெற்றிச் செய்தி தரும். நண்பரிடம் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும்.

**கன்னி:** சிறு செயலும் கடினமாகத் தோன்றலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரத்தில் அனுகூலத்தை பாதுகாக்கவும்.

**துலாம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம். மனஅமைதியை பாதுகாப்பதால், செயல்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**தனுசு:** கடந்த கால பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். அதிக உழைப்பால் பணி இலக்கு நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** நட்பின் பெருமையை உணருவீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். சிக்கனச்செலவு கடன் பெறுவதை தவிர்க்கும்.

**மீனம்:** சமூகத்தில் நல்ல மதிப்பீடு உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். தாராள பணவரவில் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள்.

## சுடோக்கு


எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | 2 | | 9 | 7 |
| 6 | | | | 9 | 5 | 4 | 1 | |
| | | 8 | | | | | | 5 |
| | | | 2 | | | 3 | | |
| | 6 | 3 | | 5 | | | | |
| 4 | | | | | 3 | | 7 | 9 |
| | 5 | | 9 | | | | | |
| 3 | 2 | | | | 8 | | | |
| 8 | | 6 | | | 7 | | | 1 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 9 | 7 | 6 | 1 | 2 | 8 | 5 |
| 5 | 1 | 7 | 8 | 3 | 2 | 4 | 9 | 6 |
| 8 | 6 | 2 | 5 | 4 | 9 | 1 | 7 | 3 |
| 9 | 7 | 5 | 1 | 8 | 3 | 6 | 2 | 4 |
| 1 | 8 | 4 | 2 | 5 | 6 | 7 | 3 | 9 |
| 6 | 2 | 3 | 9 | 7 | 4 | 8 | 5 | 1 |
| 3 | 9 | 1 | 6 | 2 | 7 | 5 | 4 | 8 |
| 7 | 5 | 6 | 4 | 9 | 8 | 3 | 1 | 2 |
| 2 | 4 | 8 | 3 | 1 | 5 | 9 | 6 | 7 |

ஏய்...! ரஜினிகாந்த்




உனக்கு 69 வயசாமே!



இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினமணி யோகவனம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி நவரத்தினமணி யோகவனம் 10.12.2018 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் அழகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகவனத்தின் அன்பு மனைவியும் யோகநாதன், யோகநாயகி, யோகரட்ணா, யோகராணி, யோகேந்திரா, யோகச்சந்திரிக்கா, யோகச்சந்திரன், யோகரஞ்சன், யோகானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21754) (14,17)

## மரண அறிவித்தல்



### Dr. அம்பலவாணர் ரகுபதி

*(MBBS (SL), MD (COL), MRCP (UK), MRCPE)*

*(பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)*

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ரகுபதி (பொது வைத்திய நிபுணர்) 11.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அம்பலவாணர் மற்றும் சந்திரவதனி தம்பதியரின் அன்பு மகனும் வேலும்மயிலும் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வதனியின் (ஆசிரியர், யா/ இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் கோவர்த்தன் (மாணவன், யாழ். இந்துக்கல்லூரி), திருவகன், ஜதுகுலன் (மாணவர்கள், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr. பிறேமா சிவசண்முகராசா (பணிப்பாளர், சித்த ஆயுள்வேத வைத்தியசாலை கைதடி), அ.ஜெகதீஸ் (உயிரியல்பாதுகாப்பு உத்தியோகத்தர் - சிட்னி, ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் துவாரகன் (மருத்துவபீட மாணவன் சிட்னி பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா), சாருஜா (மருத்துவபீட மாணவி - வடதென்மேல் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், அபிராமி (A/L 2018 மாணவி, யாழ் வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை), அனுபாமா (A\L 2020 மாணவி, யாழ் வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் Dr. சிவசண்முகராசா (சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத் துறை, யாழ். பல்கலைக்கழகம்), சுமதி (ஆஸ்திரேலியா), லோகேஸ்வரன் (தொழில் அதிபர்), லதாவாணி (ஆசிரியர், யா / இராமநாதன் கல்லூரி), சிவாஜினி (ஆசிரியர், யா/ மைலிட்டி கலைமகள் வித்தியாசாலை), சிவலோஜினி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம்) ஆகியோரின் மைத்துனரும் ஜீவசியாமினி (முகாமைத்துவ உதவியாளர் - மாநகர சபை, யாழ்ப்பாணம்), இளங்கோ (அதிபர் - யா/ சோமாஸ்கந்த கல்லூரி), ஶ்ரீஸ்கந்தராசா (லண்டன்), கமலராஜன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், மாகாண கல்வித்திணைக்களம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கோவில் வாசல், இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21757) (14,17)

**0212241507 / 0771155248**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தேவாலய வீதி, ஓட்டுமடத்தைச் சேர்ந்த

### அமரர் இளையதம்பி நடராசா

(ஐக்கிய வியாபாரச்சங்க முன்னை நாள் முகாமையாளர்)

**தோற்றம்** 11.12.1939 — **மறைவு** 24.11.2017

ஓராண்டென்ன! ஓராயிரம்
- ஆண்டுகள் ஆனாலும்
உங்களின் பசுமையான நினைவுகள்
எங்கள் மனங்களை விட்டு மறையாது.

*என்றும் நீங்கா நினைவுகளுடன்*

**குடும்பத்தினர்**

**15/7, தேவாலய வீதி, ஓட்டுமடம்.**

(ஜ.2133) (13,17)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபை வேலைத்திட்டம் - 2018

01. சபை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(1) இலக்க 16.03.2016 ம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப் போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பட்டவாறு இல்லாத விடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 13.12.2018ம் திகதியிலிருந்து 26.12.2018 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (1ம், 2ம் வேலைகளுக்கு) மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (3ம் வேலைக்கு) (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 27.12.2018ம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று – 28.02.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02/CF/16/2018 | தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் | 3.199 Mn | 03 மாதங்கள் | C8 கட்டடம் | 32,000.00 | 28.03.2019 |
| 02 | NP/14/41(17)/02/CF/27/2018 | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வீதிகளுக்கு பெயர்ப்பலகை செய்து பொருத்துதல் | 2.838 Mn | 03 மாதங்கள் | C8 வீதி / கட்டடம் | 28,500.00 | 28.03.2019 |
| 03 | NP/14/41(17)/02/CF/17/2018 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (50 watt Single Eye high power COB- LED Street Light) | 1.216 Mn | 01 மாதம் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 12,200.00 | 28.03.2019 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 20.12.2018 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**13.12.2018.**

(IN 8680)(14.17)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 . 04 . 1993

உதிர்வு 07 . 12 . 2013

## செல்வன் சண்முகானந்தன் யதுஷன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(உயிரியல் பிரிவு - 2012)

**கண்ணிமைத்து விழிக்கவில்லை**
**ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டதையா**
**ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை**
**உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு**

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(CS 21761) (14.17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சிதமலர் சுப்பிரமணியம்



கன்னாதிட்டி, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் சுப்பிரமணியம் நேற்று (12.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடேசு - தையலம்பாள் தம்பதிகளின் மூத்த புத்திரியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் சந்திரமோகன், நாகலோஜினி (சுகாதார பாதுகாவலர் - சு. வை. அ. பணிமனை, மாநகரசபை, யாழ்ப்பாணம்), ராஜமோகன், மீனலோஜினி (பிரான்ஸ்), அமுதலோஜினி (காமாட்சி முன்பள்ளி ஆசிரியை), கமலலோஜினி (ஆசிரியை - கிளி/கனகபுரம் ம. வித்தியாலயம்), காலஞ்சென்ற பிறேமலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுரேஸ்குமார் (யாழ். மாநகரசபை), உதயகுமாரி, உதயகுமார் (பிரான்ஸ்), கில்டா, முகுந்தன், சசிகுமார், பிரபாகரன் ஆகியோரின் மாமியாரும் கஜானன், சஜித், கஜனிகா, கார்த்திகன், விசால், கர்ஸ்மினா, ஹரீசன், ஹருணிகா, ஜேஹரீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பத்மநாதன், பத்மராணி, காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் பேபி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**103/23, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை. 0774661045**

(CS 21771/13/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி லில்லிமேரி பிரான்சிஸ்பிள்ளை



பிறப்பு 19.04.1930 இறப்பு 11.12.2018


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி நாவலர் பாடசாலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி மேரி பிரான்சிஸ்பிள்ளை கடந்த 11.12.2018 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் பிரான்சிஸ் சிஸ்பிள்ளையின் அன்பு மனைவியும் அன்ரனி றெஜினோல்ட், பிறிம்றோஸ் (லண்டன்), காலஞ்சென்ற நந்தினி மற்றும் மேரி காமினீற்றா, காலஞ்சென்ற அன்ரனி சில்வெஸ்டர் மற்றும் வினிபிறீடர், டெக்னா வினோதினி, காலஞ்சென்ற பெனிக்னா றஜனி மற்றும் அன்ரனி வொஷிங்டன் (லண்டன்), பெனிற்றா வெலானி ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற திரேஸ்கமலா மற்றும் குணரட்ணம் (லண்டன்), காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் மற்றும் அன்ரன், சந்திரகலா, காலஞ்சென்ற பாலதாசன் மற்றும் சாமினி (லண்டன்), செந்தில் ஆகியோரின் அன்பு மாமியாரும் றொஷான், சிரோன், ஜெனிபர் சரண்யா, றொட்னி பிரஷாந்த், கிளிங்ரன் மெலான், செரின் சிறோமி, றெமோசிகான், ரெரன்சி தாமரா, பிராயன் பெனட், கேபேட் றுமேஸ், கியூபேட் தினேஸ், றொபேட் றங்கேஸ், னோபேட் நரேஸ், ஜோன் எட்ரியன், ஈத்தன் டேவிட், பிருந்தா, ஆகாஷ் மற்றும் லோறா, ஹரிவதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற அன்னமேரி மற்றும் ரூபி அக்னஸ், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (13.12.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 021 223 0924**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் விஸ்வநாதர் தியாகராசா


எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்து
கடந்த 13.11.2018 செவ்வாய்க்கிழமை எம்மை விட்டு பிரிந்த
எமது குடும்பத்தின் குலதெய்வத்தின்

அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரணமும் இன்று (13.12.2018) வியாழக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**573A, வளநகர் யோகபுரம் மேற்கு,**
**(மல்லாவி மத்திய கல்லூரி அருகில்)**
**மல்லாவி. 077 808 4195** (cs 21652) 13.17)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## இராசையா திருநாவுக்கரசு

வெள்ளாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் ஜெயபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வட்டக்கச்சி சில்வா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா திருநாவுக்கரசு நேற்று முன்தினம் 11.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், (மண்டைதீவு), காலஞ்சென்ற சாயாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யசிந்திரனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாயனூர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் :**
**மருமகன்**
**கிரிதாசன் (கிரி)**

**இல. 232, சில்வாறோட்,**
**வட்டக்கச்சி (கறாச்)**

**021 206 0586**

(akn.792) (13.17)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.02.1948 | 24.11.2017 |

திதி: 13.12.2018

## அமரர். கந்தப்பிள்ளை முத்துலிங்கம்

(ஓய்வுபெற்ற மண் பரிசோதகர் - நீர்ப்பாசன திணைக்களம்)

ஆண்டதாம் ஏவிளம்பி கார்த்திகை மாதத்திற்
பூண்டதாம் பூர்வபக்க சஷ்டியே - காண்க
எவரும் புகழ் கந்தப்பிள்ளை முத்துலிங்கம்
சிவனடி சேர்ந்த தினம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.


வீடு வாடகைக்குண்டு
ஒட்டுமடச்சந்தி அராலி வீதியில் சகல வசதியுடன் வீடு வாடகைக்குண்டு.
077 618 0450







# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.03.1953 | 12.12.2018 |

## திருமதி யோகலட்சுமி சின்னத்துரை

பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகலட்சுமி சின்னத்துரை 12.12.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும் சிதம்பரப்பிள்ளை - பத்தினம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும் குகநாதன் (ஜேர்மனி ), கலைமகள் (லண்டன்), ஜெகநாதன் (லண்டன்), கலையரசி (இலங்கை), பரமநாதன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சவுந்தரராஜன் (லண்டன்), சிவனேசன், ஜெயமாலினி ஆகியோரின் மாமியாரும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயானி (லண்டன்), சிவகஜன், கதுஜன், சுவிதா, நிகிதன், பிரியங்கா, அபிநயன், கானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் இலக்கணாவத்தை சமரபாகு உடுப்பிட்டியில் உள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இலக்கணாவத்தை,**
**சமரபாகு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.**
**0777 574360, 0771312975**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## சபாரத்தினம் ஆறுமுகம்பிள்ளை

ஓய்வு பெற்ற விற்பனையாளர்
(காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)



தோற்றம்
24.12.1954

மறைவு
24.11.2017

திதி : கார்த்திகை பூர்பபக்ஷ ஷஷ்டி
(13.12.2018)

ஆண்டிகேணி ஐயனாரின் பாதமதை சென்றடைந்து
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை உம் நினைவு
மீண்டு நீங்கள் வரமாட்டியளோ - என
விழி பிதுங்கும் துணையவளும்
உதவி ஒத்தாசையாக இருந்த உன்னத பிறப்பை
இழந்து தவிக்கும் உடன் பிறப்புக்களும்
மரணம் விரைவாக வந்து எங்கள் மாமாவை
கொன்றதுவே என மனம் நெகிழும் மருமக்களும்
மச்சினன் ஆறுமுகம் மறைந்து விட்டாரென
பரிதவிக்கும் மைத்துனன் மைத்துனியும்
ஏங்கி ஏங்கி "ஆறுத்தாத்தா" என அழைக்கும்
இளம் பிஞ்சுப் பேரப்பிள்ளைகளும்
நித்தம் நித்தம் உங்கள் நினைவுதனை சுமந்தபடி
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
அனுதினம் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**புதுவீதி, காரைநகர்.**

**குடும்பத்தினர்.**

(CS 21767) (14.17)

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கிவரும் SK அறிவுச்சோலை சிறுவர் இல்லத்திற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. **இல்ல மேற்பார்வையாளர்** (பெண் 35-50 வயது) கல்வித்தகைமை க.பொ.த. உயர்தரம்
2. **இல்ல பராமரிப்பாளர்** (பெண் 28-50 வயது) கல்வித் தகைமை க.பொ.த. சாதாரணதரம் தோற்றியிருத்தல் வேண்டும்.
3. **சமையலாளர்** (பெண் 35-50) நன்றாக சமைக்க தெரிந்தவரும் தேக ஆரோக்கியம் கொண்டவரும்.
4. **காவலாளி** (ஆண் 45-60) உடல் ஆரோக்கியம் உள்ளவர்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

15.12.2018 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு SK அறிவுச்சோலை சிறுவர் இல்லம், 2ஆம் பகுதி, திருவையாறு, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாக சமுகம் தரவும்.

**தொடர்புகளுக்கு - 021 228 3313, 077 289 2520**

## கண்ணீர் அஞ்சலி



**Dr.A.ரகுபதி**

*(MBBS(SL), MD(COL), MRCP(UK), MRCPE)*

(பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பளை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS 21762) (14,17)

**யாழ் மாவட்ட மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.**

கொக்குவில் இந்து ஆரம்ப அன்னையின்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உறுதுணையாக இருந்தவரும் உலகப் புகழ்பெற்ற இருதய நிபுணருமாகிய

**ரவிப்பெருமாள்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருற்றி ருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வது டன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலைச் சமூகத்தினர்**

**யா/ கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை, கொக்குவில்.**

## மரணஅறிவித்தல்

### விசுவநாதர் ஜெகநாதன்

*(முன்னைநாள் முகாமையாளர் - துனுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)*



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யோகபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் ஜெகநாதன் 11.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும் இராமலிங்கம் காலஞ்சென்ற வள்ளியம்மை ஆகியோரின் மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் குகநாதன் (ஸ்கந்தபுரம்), சுதாநாதன் (பிரதேச செயலகம் - துனுக்காய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தினி, கலைச்செல்வி (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனலட்சுமி, பத்மநாதன், தில்லைநாதன், இராசலட்சுமி, சீதாலட்சுமி காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசலிங்கம் அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(AKN 791) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 735 9726 / 077 902 3170**

## வேலைவாய்ப்பு

IDEAL FIRST CHOICE

**Auto A/C Technician, Auto Electrician, Auto Mobile Mechanic, Lubricant Technicians**

- 45 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.
- NITA, German Tech, VTA அல்லது அதற்கு சமமான அங்கீகாரம் உள்ள நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள்.
- தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியமும், மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- உங்கள் **CV** ஐ **careers@idealgroup.lk** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

(இ32185)(10)

**No.63, நெடும்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**
**Tel: 070 297 2252**

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் வெற்றிடம் : வாகனச் சாரதி (Driver)

**தகைமைகள் :**

- க.பொ.த. சா/தரம் அல்லது க.பொ.த. உ/தரத்தில் சித்தியடைந்திருத்தல்
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், தீய பழக்கவழக்கங்கள் அற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும் (ஆட்டோ, ஹயஸ்)
- வயதெல்லை : 30 - 60 வயதிற்குள்
- அனுபவம் 3 வருடங்கள்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்களை 26.12.2018 அன்று பி.ப. 3.00 மணிக்கு உரிய சான்றிதழ்களோடும் சுயவிவரத்தோடும் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**தி.செல்வமனோகரன் செயலாளர்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்

**திருமதி ஏமி ஜெயதாஸ்** அவர்களின் தந்தையார்

**ஜோன் செல்லையா றொபேட்**

நேற்று (12.12.2018) புதன்கிழமை காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம்.**

(CS 21760) (14,17)

## துயருடன்...



**விசுவநாதர் ஜெகநாதன்**

**(முன்னைநாள் முகாமையாளர் துனுக்காய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

உங்கள் ஆத்மா அமைதியுறப் பிரார்த்திக்கின்றோம்.

**காசிலிங்கம் குடும்பத்தினர்.**
**244, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 - 08 - 1931

மறைவு 24 - 12 - 2017

அமரர்

**அருளானந்தன் நீலகண்டன்**

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத்திட்ட முகாமையாளர் - கிளிநொச்சி)**

திதி : விநாயகசஷ்டி

**உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி என்றும் மறவாத அன்புடன் நினைவு கூர்ந்து நிற்கும் ......**

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

175, கண்டி வீதி, சாவகச்சேரி. (CS 00520)(04,17) **குடும்பத்தினர்.**


நாம்...


தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை ரணில் விக்ரமசிங்கவுக்கு நம்பிக்கை தெரிவித்து கொண்டுவரப்பட்ட தீர்மான வரைவுக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசில் எம்மால் பல தவறுகள் இடம் பெற்றிருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாகும். அதனால் நாங்கள் அமைக்கவிருக்கும் புதிய அரசில் அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்து கொண்டு நாட்டை முன்னுக்கு கொண்டு செல்வோம். அதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவையும் கோருகின்றோம். அரசியலில் தவறுகள் இடம்பெறும். அவ்வாறு தவறு செய்பவர்களை தொடர்ந்து விமர்சித்து இருளுக்குள் தள்ளிவிடாமல் அவர்களை அதில் இருந்து வெளிச்சத்துக்கு கொண்டுவர சந்தர்ப்பம் வழங்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் நாங்கள் ஒரு நிலைப்பாட்டில் இருப்பதாக தெரிவித்துக்கொண்டு தொடர்ந்து அதில் நிலைத்தி ருப்பதால் நாடு சீரழிவுக்கே செல்லும்.

சிலர் பொதுத் தேர்தலுக்கு செல்லவேண்டும் எனக் கேட்கின்றனர். தேர்தலுக்கு செல்ல நாங்களும் தயார். ஆனால் மக்கள் 5 வருடத்துக்கு இந்த ஆணையை எங்களுக்கு வழங்கியுள்ளனர். இன்னும் ஒன்றரை வருடங்கள் எங்களுக்கு இருக்கின்றன. இவ்வாறிருக்கையில் பொதுத் தேர்தலுக்கு என்ன நியாயம் இருக்கின்றது? - என்றார். (ம-61)



## செல்வ முத்து மாரியம்மன் ஆலய இராஜகோபுரத்துக்கு நேற்று நடப்பட்டது அடிக்கல்

மன்னார், டிசெ. 14

மன்னார் மாவட்டத்தில் உள்ள மிகப் பழைமையான கோவிலான நானாட்டான் சிறிசெல்வ முத்து மாரியம்மன் ஆலய இராஜ கோபுரத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. காலை 10.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், நானாட்டான் பிரதேச சபை தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், நானாட்டான், முசலி பிரதேச கடற்படை அதிகாரிகள், முருங்கன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த ஆலயத்தின் இராஜகோபுரமானது சுமார் 2 கோடியே 80 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-56)


## சிறுநீரகம் தேவை

59 வயதுடைய ஆண் ஒருவருக்கு O குறூப் சிறுநீரகம் அவசரமாக தேவை. **தொடர்பு - 077 6013616**

## தேவை

கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு முன்னால் உள்ள நிதி நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் உடன் தேவை. தகுதி O/L

(CS 21764) (14,17)

**075 909 5021**

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் 4¼ பரப்பில் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய வீடு. (7 அறைகள் உள்ள பெரிய வீடு) வீட்டின் புதிய விலை

**1 கோடியே 65 லட்சம்.**

**076 884 3551**

(IN 21651) (11,17)

உதயன் தொடர்புகளுக்கு 0214931111

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின்
மனைப் பொருளியல் பாட ஆசிரியை
**திருமதி வி.பாலதாசன்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி லில்லிமேரி பிரான்சிஸ்பிள்ளை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**நலன்புரிக் கழகம் - யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

## மரண அறிவித்தல்



### கிருஸ்ணபிள்ளை செந்தில்நாதன்

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 115, மாயவனூர், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை செந்தில்நாதன் (முன்னாள் கிளை முகாமையாளர் - ப.நோ.கூட்டுறவுச் சங்கம்) நேற்று (12.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் சங்கரப்பிள்ளை - விமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் பரஞ்சோதிமலரின் அன்புக் கணவரும் சிந்துஜா, மதுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் டிலக்சனின் பாசமிகு மாமனாரும் நகுலாம்பிகை, ஞானசக்தி, காலஞ்சென்ற அருணகிரிநாதன், ஜெயகௌரி கணநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.12.2018) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**077 299 5413** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஜோண் செல்லையா றொபேட்



மலர்வு 04.04.1941 உதிர்வு 12.12.2018

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் செல்லையா றொபேட் நேற்று (12.12.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் செல்லையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் மேரி நிர்மலாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான எட்வேட்ராஜா, விக்டர், சாலற் மற்றும் லோறன்ஸ், ஆதர், தங்கராணி, டொறத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராஜா (பிரான்ஸ்), ஜோண் ஸ் ரீபன் (லண்டன்), தயாபரி (லண்டன்), ஜெயகௌரி (கனடா), துவாரகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடமாகாணம்), ஏமி (ஆசிரியர் - யாழ். மத்தி கல்லூரி), றொணி (வேல்ட்விசன்), சீவ்டான் (வ.பி.போ.ச.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சியாமளா (பிரான்ஸ்), றோஸ்மாலா (லண்டன்), அருள்சீலன் (லண்டன்), பொன்வீலியஸ் (கனடா), தேவராசா, ஜெயதாஸ் (தபாலக ஊழியர் - வேலணை), ஜெயபாரதி, பியாட்றிஸ் (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் நிறோசன், அனுசன், மெலனி, சாலற் றெபேக்கா, டெபோறா, எல்ரன், ஒறிற்றா, எறிக்கா, அஜின் லௌட்றிசன், சஜின் ஜோபேட், ஜெட்றிக் ஜெய்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (13.12.2018) வியாழக்கிழமை பி. ப. 3.00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய். 077 066 1110**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் நிரஞ்சன்

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரைதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நிரஞ்சன் கடந்த (11.12.2018) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கண்ணம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் மதனசறோஜினி (கனடா), மஞ்சளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரன் (கனடா), நகுலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், யோகமுத்து, சதாசிவம், மீனாட்சி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5/1, புகையிரத வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**077 468 5770, 077 923 7751**

தகவல்:
**திருமதி த.கண்ணம்மா (தாய்)**
**த.இலம்போதரன் (மைத்துனர்)**

## கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 11 . 07 . 1926



ஆண்டவன் அடியில் 10 . 12 . 2018

### கனகரத்தினம் இராசம்மா

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த
துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**சிறுதுளி நற்பணி மன்றம், வவுனியா.**
**சீரணி, சண்டிலிப்பாய்.**

O/L பரீட்சையின் பின்னர்
Diploma in Spoken English
Full / Part time
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Next exam date on 19.01.2019

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS A1
LIFE SKILLS
கடந்த 3 வருடத்தில் 640 மாணவ, மாணவிகளை சித்தியடையவைத்த ஒரே ஒரு நிறுவனம்

COMPUTER COURSES
MS - Office
Web Designing
Computer Studies
Multi Media
Hardware
Graphic Designing

BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Station Rd, Mannar. Tel : 023 492 4124

## Tribute to Dr. Ambalavanar Ragupathy

MBBS (SL), MD (COL), MRCP (UK), MRCPE
Consultant Physician,
Base Hospital, Tellippalai



The ALUMNI, Faculty of Medicine, Jaffna is deeply sadden by the demise of Dr. A. Ragupathy who is beloved by our ALUMNI and friends. We grieve with our entire ALUMNI family over the passing away of the man who has contributed to the community more than any others.

You will always be remembered by the people to whom you devoted your precious life. We extend our deepest sympathies to the bereaved family members.

**The ALUMNI, Faculty of Medicine, Jaffna.**

## மரண அறிவித்தல்

### பூதத்தம்பி புஸ்பதேவி (கமலா)



யாக்கரு. கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாலாவி தெற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்டபூதத்தம்பிபுஸ்பதேவி (கமலா) நேற்று (12.12.2018) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி கந்தையா மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் பூதத்தம்பியின் (சின்ராசா) அன்பு மனைவியும் சிவாஜினி, பத்மாஜினி (பிரதேச செயலகம், பூநகரி), நந்தினி (ஆவரங்கால்), பார்த்தீபன், தர்சிகா, நிரோஜன், தர்சன் (யா / கச்சாய் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவராசா (கரவெட்டி), மல்லிகா தேவி (பிரான்ஸ்), சிங்கராசா (கரவெட்டி), சுதாதேவி (வவுனியா), சந்திராதேவி (கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நெல்சன் (ஆசிரியர் - யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை), காண்டீபன் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நடராசா (பிரான்ஸ்), பவானி (கரவெட்டி), நாகராசா (வவுனியா), சின்னையா (கரவெட்டி), காலஞ்சென்ற இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி பெரியசாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாலாவி தெற்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 790 5771, 077 492 2395**

## மரண அறிவித்தல்

### தில்லைநாதர் சுப்பிரமணியம்




சந்திரபுரம் மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதர் சுப்பிரமணியம் நேற்று (12.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர் சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான் சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் வேதநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, சிவஞானம் மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோகரன் காந்திமதி, காலஞ்சென்றவர்களான பத்மாவதி, கந்தர், பார்வதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சந்திரவதனி, பரம்தில்லைராஜன் (ஆசிரியர் - கோண்டாவில் இந்துக் கல்லூரி), சாந்தினி, சடாச்சரம் (பிரான்ஸ்), மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா (ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி), மாணிக்கவாசகம், சாம்பசிவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலினி, தமிழினி, தமிழந்தி, அரண்யா, ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல. 01, வெங்கடேசன் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 01, வெங்கடேசன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# ஆளுங்கட்சி இல்லாமல் நாடாளுமன்று கூடுவதா?

## எஸ்.பி.திஸாநாயக்க கொதிப்பு



கொழும்பு, டிசெ. 13

அமைச்சரவைக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போது, ஆளுங்கட்சி இன்றி சபாநாயகர் கருஜயசூரிய நாடாளுமன்றத்தைக் கூட்டியமை சட்டவிரோதம். இதனால்தான் நாம் சபையின் இன்றைய (நேற்றைய) அமர்வைப் புறக்கணித்தோம். எவ்வாறாயினும் மக்கள் எதிர்பார்க்கும் தீர்ப்பு விரைவில் கிடைக்கும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க.

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் இல்லத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாளை (இன்று) அல்லது நாளைமறுதினம் (நாளை) உயர் நீதிமன்றத்தினரல் சிறந்த தொரு தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். இன்றும் (நேற்று) சபாநாயகர் கருஜயசூரிய சட்டவிரோதமாகவே நாடாளுமன்றத்தைக் கூட்டியுள்ளார். தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவை என்பவற்றுக்கு இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் அமைச்சரவையே அரசாகக் கருதப்படும். அவ்வாறிருக்கையில் ஆளுங்கட்சி இன்றி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு இல்லை. அதனாலேயே நாம் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்து வருகின்றோம். நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் சட்ட ரீதியானதாகும்.

2015ஆம் ஆண்டு கூட்டு அரசு அமைக்கப்பட்டதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நிர்வாகக் குழுவொன்றை அமைத்து அதன் மூலம் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் தம்வசப்படுத்திக்கொள்ள ஆரம்பித்த போது பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினுடைய எதிர்ப்பையும் மீறி சிங்கப்பூர் பிரஜையான அர்ஜூன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டார். இலங்கையிலேயே மிகப்பாரிய ஊழல் மோசடியாகக் கருதப்படும் மத்திய வங்கி கொள்ளையின் முக்கிய சூத்திரதாரி ரணில் விக்ரமசிங்க சிங்கவே. அர்ஜூன் மகேந்திரன் அவருக்குத்துணையாகச் செயற்பட்டார்.

ரணில் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஊழ்ல் மோசடி வெளிக்கொண்டுவரப்பட்டது. எனினும் சிறிகொத்தாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு அவ்வாறு ஒரு சம்பவமே இடம்பெறவில்லை என்றவாறு தீர்ப்பு வழங்கியது. அத்தோடு விசாரணைகள் இடம்பெற்று சிலர் கைதுசெய்யப்படவிருந்த சந்தர்ப்பத்திலும் ரணில் விக்ரமசிங்க பொலிஸாரின் நடவடிக்கைகளில் தலையிட்டு அவற்றைத் தடுத்தார். எதாவதொரு வழியிலேனும் மத்திய வங்கி விசாரணைகளை முடக்கும் முயற்சிகளை ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றார்.

அவருடைய இவ்வாறான செயற்பாடுகளையும் தலைமைத்துவத்தையும் விரும்பாத நூற்றுக்கு இருபது வீதமானவர்கள் இன்றும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ளனர். இதன் காரணமாகவே கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சுமார் 3 இலட்சம் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளித்திருந்தனர் - என்றார்.

(ம31)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் (திருமதி)
**பிறேமா சிவசண்முகராசாவின்**
அன்புச் சகோதரர்

**டாக்டர் அம்பலவாணர் ரகுபதி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் **நடேசலிங்கம் தனுஷன்** அவர்களின் அன்புத் தந்தையார்.

**பொன்னுத்துரை நடேசலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**உதவிப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்**
**மாவட்ட அலுவலகம்,**
**கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

## ஓராண்டு நினைவுதினம்




**Grace Premalatha Senthinathan**

**கிறேஸ் பிறேமலதா செந்திநாதன்**

**நிச்சயமாகவே முடிவு உண்டு**
**உன் நம்பிக்கை வீண்போகாது.**

நீதி மொழிகள் 23:18

**குடும்பத்தினர்.**

## என்றும் நீங்கா நினைவுகளுடன் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் தியாகர் அருணாசலம் (நயினாதீவு)**

திதி:- பூர்வபக்க ஷஷ்ட (24.12.2018)

**"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"**

உள்ளக் கமலத்தில் அன்னையைத் தினமும்
நினைந்துருகி நிர்மலமாய் அவன் தாள் அடைந்து
ஆண்டுகள் ஏழாகி கடந்தாலும் எம் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள்

**இல.117/4, அரசடி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS21739)(1117)

## ஒற்றையாட்சிக்குள்....

ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கைத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட பின்னர் சபையில் நன்றி தெரிவித்து சிங்களத்தில் உரையாற்றினார் அவர். இதன் போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தீர்மானம் நிறைவேற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள். ஒக்டோபர் 26ஆம் திகதி சூழ்ச்சியை வெற்றி கொண்ட நகர்வாகவே இதனைப் பார்க்கின்றேன். நண்பர் அனுரகுமாரவின் (ஜே.வி.பி. தலைவர்) வார்த்தையில் கூறுவதென்றால் ஒக்டோபர் சூழ்ச்சி என்றே கூறவேண்டும்.

அரசமைப்புக்கு அமைவாகவே நாம் செயற்பட வேண்டும். எமக்கு எவ்வாறான அரசியல் கொள்கை இருந்தாலும் கூட அரசமைப்புக்கு அனைவரும் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும். தாமரை மொட்டுக்கு வாக்களித்தவர்களாக இருக்கலாம் அல்லது மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தவர்களாக இருக்கலாம், ஆனால் அனைவரும் கூறுவது அரசமைப்பை மீறாது செயற்பட வேண்டும் என்பது மட்டுமேயாகும். 122 உறுப்பினர்கள் சபையைப் பாதுகாக்க முன்வந்தனர். சபாநாயகர் முன்னெடுத்த நடவடிக்கைகளை, தலைமைத்துவத்தை நாம் எப்போதும் மதிக்கின்றோம்.

2015ஆம் ஆண்டு நாம் ஆட்சியமைத்தபோது ஜனநாயகம் பலவீனமடைந்திருந்தது. 19ஆம் திருத்தத்தை நிறைவேற்றி நாடாளுமன்ற அதிகாரத்தைப் பலப்படுத்தி, அரச தலைவரின் அதிகாரங்களை குறைத்து, நீதிமன்ற சுயாதீனத்தை உருவாக்கி, சுயாதீன ஆணைக்குழு அமைத்தோம். நாம் உருவாக்கிய வரைவு மூலம் இன்று ஜனநாயகத்தைக் காப்பாற்ற மக்களே முன்வந்து போராடக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

எமக்குள் குறைகள் இருந்தது. சரி செய்ய முடிந்த, செய்ய முடியாத பல செயற்பாடுகள் இருந்தன. எம்மால் வேகமாக பயணிக்க முடியாது இருந்தது. முதன்மையான இரண்டு கட்சிகள் இணைந்து செயற்பட்ட காரணத்தால், மாற்றுக் கொள்கைகள் இருந்ததால் எம்மால் வேகமாக இலக்கை அடைய முடியாது போனது. நாம் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்க விரும்பவில்லை. நாம் ஆட்சிக்கு வந்து விலைக் குறைப்பை செய்வோம் என்று கூறிக் கொண்டு ஒரு மாதத்தில் மீண்டும் விலை உயர்வை அதிகரிக்கும் நபர்கள் அல்ல. வரியைக் குறைக்கின்றோம் என கூறி ஒரு மாதத்தில் மீண்டும் வரியை அதிகரிக்கும் நபர்கள் அல்ல. எம்மால் முறையான சலுகைகளைப் பெற்றுகொடுக்க முடியும் என வாக்குறுதி வழங்க முடியும்.

இன்று மாவை சேனாதிராசாவின் உரையை நான் செவிமடுத்தேன். வடக்கில் தமிழ் மக்கள் படும் துயரம் என்னவென்பது எமக்கு நன்றாகத் தெரியும். எமது அபிவிருத்திச் செயற்பாடுகளில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நாம் தயாராக உள்ளோம். சட்ட ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவும் நாம் தயாராக உள்ளோம்.

நாம் முன்னெடுக்கும் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஏக்கிய ராஜ்ஜிய (ஒற்றையாட்சி) பிளவுபடாத, பிளவுபடுத்த முடியாத இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுகொள்ளக்கூடிய அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தயாராக உள்ளோம். அதில் மாகாண சபைகளை பலப்படுத்தும் வேலைத்திட்டமும் உள்ளது. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கும் நகர்வுக்கும் நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். இன்று நாம் அனைவரும் சிங்கள தமிழ் முஸ்லிம் என்ற பாகுபாட்டில் செயற்படவில்லை. மாறாக இலங்கையர் என்ற உணர்வுடன் ஜனநாயகத்தை, உரிமைகளை பாதுகாக்க நாம் செயற்பட்டு வருகின்றோம். போரின் பின்னர் இன்று நாம் தமிழ் மக்களுடன் கலந்துரையாடி சகல இனத்தவருக்கும், சகல மதத்தவருக்கும் ஏற்றுகொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை அரசியல் அமைப்பின் மூலமாக பெற்றுக்கொடுக்க நாம் தயாராக உள்ளோம். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறமாட்டோம் -என்றார்.

ஏக்கிய ராஜ்ஜிய என்ற சிங்களச் சொல்லுக்கு இதுவரையில் ஒற்றையாட்சி என்றே மொழிபெயர்க்கப்படுகின்றது. ஆனால், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர், உருவாக்கப்படும் புதிய அரசமைப்பில் ஏக்கிய ராஜ்ஜிய என்ற சொல்லுக்கு ஒருமித்த நாடு என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க சிங்கள மொழியில் ஏக்கிய ராஜ்ஜிய என்ற சொல்லையே பயன்படுத்தினார். (ம-5,61)

## காலியில்...

மைத்திரிபால சிறிசேனவுக்கு புரியும் மொழில் பேசி தீர்வுகளை பெற்றுகொள்ள எதிர்வரும் 17ஆம் திகதி காலிமுகத்திடலுக்கு வருகைத்தருமாறும் ஐக்கிய தேசிய கட்சி அழைக்கிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## மகிந்த...

போவதில்லை என்று தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியால் நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மான வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவின் போது மக்கள் விடுதலை முன்னணி வகித்த அதே நிலைப்பாட்டில் தான் நாம் தற்போதும் உள்ளோம். அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. ரணில் விக்கிரமசிங்க கடந்த மூன்று வருடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்த போதிலும், மக்களின் நம்பிக்கையை அவர் பெறவில்லை. 2015ஆம் ஆண்டு முக்கியத்துவம் வாய்ந்த ஆணையை மக்கள் வழங்கினார்கள். அது ஒரு கட்சிக்காக வழங்கிய ஆணை அல்ல. சனநாயகத்திற்கும், நல்லாட்சிக்கும், ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் வழங்கப்பட்ட மக்கள் ஆணையாகும். ஆனால், அந்த ஆணை ஒருசில கட்சிகளின் தேவைக்காகவே பயன்படுத்தப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறித்த சதித் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான பின்புலம் எங்கிருந்துஉருவானது. ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராக மக்கள் சக்தியொன்று உருவானதே முதன்மைக் காரணமாகும். ஓர் அரசால் அனைத்து விடயங்களையும் செய்ய முடியாது என்பது உண்மைதான். ஆனால், ஓர் அரசால் செய்யக்கூடாத, செய்யத்தகாத விடயங்களைத் தவிர்க்க வேண்டும். அதனை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு செய்திருக்கவில்லை. அரச தலைவர் செய்த சதித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அன்று மக்கள் மத்தியில் இருந்தது. அதனை நாங்கள் ஒன்றிணைந்து தோற்கடித்தமை வேறுவிடயம்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சர் கதிரையில் அமர்த்துவதற்கு நாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை. மீண்டும் மீண்டும் அரச தலைவரால் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப் படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அன்று அவ்வாறு செயற்பட்டோம். அதற்காக ரணிலுக்கு ஆதரவாக செயற்பட்டோம் என்று எவரும் கருதிவிடக் கூடாது. இன்று அரசியல் வியாபாரமாக மாறியுள்ளதுடன், இலாபமீட்டும் முதன்மைத் துறையாகவும் மாறியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சர் கதிரையில் அமர்வதால் எதிர்வரும் ஒரு வருடத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. மகிந்த ராஜபக்சவும் அந்தக் கதிரைக்குப் பொருத்தமற்றவர் -என்றார். (ம)

## புதிய...

களை விதித்திருந்தது. அரசமைப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் ரணில் விக்கிரமசிங்க எழுத்துமூல உத்தரவாதம் வழங்கவேண்டும் என்று கூட்டமைப்பு கோரியிருந்தது. அதனை வழங்குவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியபோதும் வழங்கவில்லை.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது கூட, கூட்டமைப்பின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கவில்லை. கூட்டமைப்பு முன்வைத்த ஏனைய நிபந்தனைகள் தொடர்பிலும் எதுவும் பேசவில்லை. (ம-5)

## பாடசாலைகளின்...

வடக்கில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அதிக பட்சமாக 176 புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டது. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு 167 புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது அதிகபட்சமாக உள்ளது.

இதேநேரம் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு 164 புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (ம-105)

## ரணில்....

னவுக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய கடிதம் அனுப்பியுள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் இன்று கூடியபோது, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச ரணில் மீதான நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இந்தத் தீர்மான வரைவு 117 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் அடிப்படையில் இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும் அந்தக் கடிதத்தில் சபாநாயகர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

## ரணில் ஏமாற்றிய...

பில் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக நேற்று வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது, ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்குவதற்கு கூட்டமைப்பு சில நிபந்தனைகளை விதித்திருந்தது. புதிய அரசமைப்பு முயற்சி, அரசியல் கைதிகள் விடுதலை, காணி விவகாரம், வடக்கு கிழக்கு அபிவிருத்தி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களைச் செயற்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பு கோரியிருந்தது. இந்தக் கோரிக்கைகளைச் செயற்படுத்துவதற்கான உத்தரவாதத்தை எழுத்துமூலம் ரணில் விக்கிரமசிங்க வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்த நிலையில், நாளை (நேற்று) வழங்குவேன் என்று அவர் உறுதியளித்திருந்தார். இருப்பினும் ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு ஆவணத்தையும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கவில்லை. இது தொடர்பில் நேற்று மதியம் இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. ரணிலிடம் எழுத்துமூல ஆவணம் வாங்கவேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர்.

ரெலோ கட்சி, ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்கு 5 நிபந்தனைகளை விதித்திருந்தது. அதற்கு ரணில் எழுத்துமூலம் பதில் வழங்கினால் மாத்திரமே தமது இரண்டு உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள் என்றும் கூறியிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், எந்தவொரு எழுத்துமூல உறுதிப்பாட்டையும் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பெற்றுக் கொள்ளாதபோதும், கூட்டமைப்பு அவருக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் நேற்று வாக்களித்தது. (ம-5,26)

## அரசின்...

தில்லை. இதனை அரச தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெளிவாக விளக்கப்படுத்தியுள்ளோம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியால் நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை கொண்டுவரப்பட்ட தீர்மான வரைவுக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த அரசு தொடர வேண்டுமென அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்த கருத்தையே தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றும். அந்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவதற்கான நம்பிக்கைத் தீர்மான வரைவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்துள்ள போதிலும் நாம் அரசின் பங்காளியாக ஒருபோதும் செயற்படப் போவதில்லை. எதிர்க்கட்சியிலேயே செயற்படுவோம் - என்றார். (ம)

## அரசின் பங்...

வரைவுக்கு ஆதரவாக வாக்களித்தோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகச் செயற்படுவதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையுள்ளது என்ற தீர்மான வரைவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் ஆதரவளித்தென நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

ஒக்டோபர் 26ஆம் திகதி முதல் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சட்டத்துக்கு முரணானவை என்ற நிலைப்பாட்டை நாம் ஆரம்பத்திலிருந்து கொண்டிருக்கின்றோம். நாட்டிலே அரசொன்று இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பில் நாம் ஏற்கனவே அரச தலைவருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தோம். அதில்ஐக்கியதேசிய முன்னணி முன்மொழியும் நபரை ஆதரவளிப்போம் என்பதைத் திட்டவட்டமாகக் கூறியிருந்தோம். தற்பொழுது ஐக்கிய தேசிய முன்னணியினர் தங்களுடைய தெரிவு ரணில் விக்கிரமசிங்க என அறிவித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் இன்று நாட்டில் உடனடியாக ஓர் அரசொன்று உருவாக்கப்பட வேண்டும். அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கை இருப்பவரின் தலைமையில் அமைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஆதரவாக வாக்களித்திருக்கின்றோம்.

எங்களுடைய விளக்கத்திலே மிகத் தெளிவாக அரசின் அங்கத்தவராகச் சேர மாட்டோம் என்பதையும் தொடர்ந்து எதிர்க்கட்சியாகவே இருந்து வருவோம் என்பதையும் சொல்லியிருக்கிறோம். எந்தவொரு முன்நிபந்தனையையும் நாம் முன்வைக்கவில்லை. நாட்டின் உறுதித்தன்மையை யோசித்தே இந்த முடிவை எடுத்துள்ளோம். இருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சகல தரப்பினரிடமும் கலந்துரையாடியிருந்தோம். ஐக்கிய தேசிய முன்னணியிடமும் இது பற்றிக் கலந்துரையாடினோம். இன்று (நேற்று) ரணில் விக்கிரமசிங்கவின் உரையில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவேன் என்றும் பிரிக்கப்படாத பிளவுபடுத்த முடியாத நாட்டுக்குள் அரசியல் தீர்வொன்றை முன்வைப்பேன் எனத் தெளிவாகக் கூறியிருந்தார் - என்றார். (ம)

## தீர்ப்பு...

அரச தலைவரின் முடிவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 13 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் மீதான விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நிறைவு பெற்றது. தீர்ப்புக்கான திகதி அறிவிக்கப்படாமல் வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டன. நாளை வெள்ளிக் கிழமையுடன் நீதிமன்ற விடுமுறை ஆரம்பமாகின்றது.

மனுதாரர் தரப்புக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முதல் நாள் அறிவித்தல் விடுக்கும். இந்த வழக்கின் மனுதாரர்களுக்கு உயர் நீதிமன்ற அறிவிப்பு கிடைக்காததால், இன்றைய தினம் தீர்ப்பு வழங்கப்படாது என்று தெரியவருகின்றது. நாளை வெள்ளிக்கிழமையே நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும்.

உயர் நீதிமன்றம் அரச தலைவரின் முடிவு சரியானது என்று தீர்ப்பு வழங்கினால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அரச தலைவரின் முடிவு தவறானது என்று தீர்ப்பு வழங்கினால், உடனடியாக பொதுமக்கள் கருத்தறியும் பொதுவாக்கெடுப்புக்குச் செல்வதற்கு அரச தலைவர் முடிவு செய்துள்ளார்.

அரச தலைவரின் முடிவு தவறானது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், அரச தலைவர் அரசமைப்பை மீறிச் செயற்பட்டுள்ளார் என்பதால், அவர் பொதுவாக்கெடுப்பைக் கோருவதற்கு முடியாது என்று சில சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும், மக்களின் ஆணையே எல்லாவற்றுக்கும் மேலானது என்ற அடிப்படையில் அரச தலைவர் பொதுவாக்கெடுப்புக்குச் செல்வார் என்று அரச தலைவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்னவின் கருத்தும் அமைந்துள்ளது. (5)

see more news in NEWUTHAYAN.COM

# பன்னாட்டுக் கராத்தே தொடரில் சாதித்த வடக்கு மாகாண வீரர்கள்



யாழ்ப்பாணம், டிசெ. 13
ஜப்பான் சோட்டோக்கான் கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட 8ஆவது வருடாந்த பன்னாட்டுக் கராத்தே தொடரில், சக்குறா சோட்டோக்கான் கராத்தேச் சங்கத்தின் சார்பில் பங்குபற்றி வடக்கு வீரர்கள் 16 பதக்கங்களைச் சுவீகரித்துள்ளார்கள்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்க ஆகிய நான்கு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றிய கராத்தே தொடர் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

சக்குறா சோட்டோக்கான் சங்கத்தின் சார்பில் பங்குபற்றிய வீரர்கள் 12 தங்கப் பதக்கங்களையும், ஓர் வெள்ளிப் பதக்கத்தையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் கைப்பறினார்கள்.

6 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் எஸ்.இலக்கியன் முதலாம் இடத்தையும், 7 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எல்.கவின் முதலாம் இடத்தையும், 10 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எல்.டெய்சன் முதலாம் இடத்தையும், 11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வி.தமிழ்நிலவன் முதலாம் இடத்தையும், 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவன் ஜ.ஜெனிங்ஸ் முதலாம் இடத்தையும், 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜே.யூட்டிசான் இரண்டாம் இடத்தையும், 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜே.மிதுலன் முதலாம் இடத்தையும், ஜி.அனோஜன் மூன்றாம் இடத்தையும், 13 வயதுப் பிரிவு குமித்தே போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜே.மிதுலன் மூன்றாம் இடத்தையும், 17, 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே 50 கிலோ எடைப் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் வி.விதுசன் முதலாம் இடத்தையும்,

8 வயதுப் பிரிவு பெண்களுக்கான காட்டாப் போட்டியில் பூநகரி மத்திய கல்லூரி மாணவி ஜெனிஸ்ரலா முதலாம் இடத்தையும், குமித்தே போட்டியில் மூன்றாம் இடத்தையும், கறுப்புப் பட்டி ஆண்களுக்கான குமித்தே 50 கிலோ எடைப் பிரிவில் ஜ.அன்ரனி அமலதாஸ் முதலாம் இடத்தையும், கராத்தே பயிற்சியாளர்களுக்கான காட்டாப் போட்டியில் எஸ். விஜயராஜ் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (5,23)

## கால்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 13
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் பி மற்றும் சி பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்படும் கால்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளன.

பி பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்திலும், சி பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைத்தானத்திலும் இடம்பெறவுள்ளன. (5,23)

## மெய்வன்மை பயிற்சியில் சித்தி

யாழ்ப்பாணம், டிசெ. 13
பன்னாட்டு மெய்வன்மைச் சம்மேளனத்தினால் சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மெய்வன்மை பயிற்றுனர்களுக்கான தரம் 2 இற்கான கற்கை நெறியில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.ஜெகனேந்திரன் திறமைச்சித்தியைப் பெற்றுள்ளார்.



அத்துடன் தரம் 3 பயிற்றுனர் கற்கை நெறிக்கும் தெரிவாகியுள்ளார். இவர் தற்போது நியூசிலாந்தில் கன்பரி பல்கலைக்கழத்தில் விளையாட்டு விஞ்ஞானத் துறையில் கலாநிதி பட்டப்படிப்பை முன்னெடுத்துள்ளார். கன்பரி பிராந்திய மெய்வன்மைச் சங்க இளநிலைப் பிரிவுக்கு தலைமைப் பயிற்றுனராகக் கடமையாற்றி வருகின்றார். (5,23)

## மைதானம் மறுசீரமைப்பு

கிளிநொச்சி, டிசெ. 13
தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மருதநகர் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் மைதான மறுசீரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. மைதானத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணிகள் முதல் கட்டமாக தொடங்கப்பட்டுள்ளன. சுற்று மதில் அமைக்கும் பணிகள் முடிவடைந்ததும் மைதானத்தை சமப்படுத்தும் பணிகள் இடம்பெறும். இந்தப் பணிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு பெறும் என்று கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ம.சிவராசா தெரிவித்தார். (23)

## தேசிய கூடைப்பந்தாட்ட குழாமுக்கு வீரர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 13
கிரீடாசக்தி தேசிய கூடைப்பந்தாட்ட குழாமுக்கு, வடக்கு மாகாணத்திலிருந்து 12 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆண்கள் அணியில் 6பேரும், பெண்கள் அணியில் 6 பேருமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆண்கள் அணியில் வை.சீம்ரேன், ஜே. அஜய், பி. சாயிராம், எஸ் துசாந்தன், எஸ். துவாகரன், எஸ். விபுஷ்ணன் ஆகியோரும், பெண்கள் அணியில் கே.தமிழரசி, பி.பானு, பி.கீர்த்தனா, எ.சுபாஜினி, டயிள்.யு. எஸ்.சீபா, எ.தர்சிகா ஆகியோரே தேசிய கூடைப்பந்தாட்ட குழாமுக்குத் தெரிவாகியுள்ளனர். (5,23)

## வலி.மேற்கில் விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13
வலிகாம் மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 4 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

காட்டுப்புலம் இளந்தளிர் விளையாட்டுக் கழகம், குஞ்சன்கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம், அராலி வடக்கு வானவில் விளையாட்டுக் கழகம், அராலி கிழக்கு கலைவாணி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கே, விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில், விளையாட்டு உபகரணங்கள் பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்டு, பிரதேசசெயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (5)



## மேசைப்பந்தாட்ட பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், டிசெ. 13
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகினால், யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு நடத்தப்படும் மேசைப்பந்தாட்டப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (23)



## மனோகரா பிறீமியர் லீக்: மனோ அவன்சஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 13
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திய மனோகரா பீறிமியர் லீக் பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் மனோ அவன்சஸ் அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மனோ அவன்சஸ் அணியை எதிர்த்து மனோ சன்றைசஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மனோ வன்சஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்கு இழப்பின்றி 89 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் தரணிகா 44 ஓட்டங்களையும், றஜீக்கா 40 ஓட்டங்களையும் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மனோசன்றைசஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சந்தியா 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மனோ அவன்சஸ் அணி சார்பில் தரணிகா 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (5,23)

## யுவராஜுக்கு 37

யுவராஜ் சிங் நேற்று தனது 37ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். இதையடுத்து அவருக்கு கீச்சகத்தில் பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.
ரோகித் சர்மாவின் கீச்சு பலரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது. யுவராஜ் ரோகித்தின் கழுத்தைப் பிடிப்பது போன்ற படத்தை வெளியிட்டு ரோகித் வாழ்த்துத் தெரிவித்தார்.
அவருக்குப் பதில் வழங்கிய யுவராஜ் அடுத்த தடவை 37 ஓட்டங்களில் வெளியேறினால், மீண்டும் இதேபோல் உன்னுடைய கழுத்தைப் பிடிப்பேன் எனப் பதிவிட்டார்.
சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் ரோகித் சர்மா 37 ஓட்டங்களில் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## சிந்து வெற்றி

உலகின் முன்னணி 8 வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வரும் உலக பூப்பந்தாட்டத் தொடரில் இந்தியாவைச் சேர்ந்த சிந்து முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.
'டாப் 8' வீராங்கனைகள் மட்டும் கலந்து கொள்ளும் உலக பூப்பந்தாட்ட இறுதித் தொடர் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான உலக பூப்பந்தாட்ட இறுதித் தொடர் சீனாவில் உள்ள குவாங் சோவ் நகரில் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இந்தத் தொடர் இடம்பெறும்.
பி.வி. சிந்து 'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ளார். இதே பிரிவில் நடப்புச் சம்பியன் அகானே யமாகுச்சி (ஜப்பான்), முதல் நிலை வீராங்கனை தாய் ஜு யிங் (சீன தைபே), தரவரிசையில் 8ஆவது இடத்தில் இருக்கும் ஷாங் பீவென் (அமெரிக்கா) ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.
நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் பிவி சிந்து, அகேனா யமாகுச்சியை 24:22, 21:15 என வீழ்த்தி வெற்றி பெற்றார்.







ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பேர்த் ஆடுகளத்தில் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுத் தனது பயிற்சி முகாமை ஆரம்பித்தது இந்திய அணி. முன்னதாக முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

அடிலெய்ட் தோல்வியின் எதிரொலி


# ஆசியின் முகாமுக்கு வந்தார் பொண்டிங்!

## பின்ஞ், கவாயாவுக்கு ஆலோசனை

ஆஸ்திரேலிய அணியின் நேற்றைய பயிற்சி முகாமில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங் இணைந்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பின்ஞ், மூன்றாம் நிலை வீரர் கவாயா ஆகியோருடன் அவர் நீண்ட நேரத்தைச் செலவிட்டார்.
அடிலெய்ட் தோல்வியை அடுத்து ஆஸ்திரேலியா பல்வேறு நெருக்கடிகளில் சிக்கியுள்ளது. ஆஸ்திரேலிய அணிக்கு பல்வேறு தரப்பிடம் இருந்து விமர்சனங்களும் குவிந்து வருகின்றன. இவ்வாறிருக்க வெளியில் இருந்து விமர்சிக்காமல் அணி வீரர்களுக்கு பல்வேறு ஆலாசனைகளை வழங்கியுள்ளார் பொண்டிங்.
முதலாவது ஆட்டத்தில் பின்ஞ் ஆட்டமிழந்த முறைகளுக்குக் கடும் காட்டமாக சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார் பொண்டிங். அத்துடன் கவாயாவுக்கு சில நுட்பங்கள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதையடுத்து அவர் பின்ஞ், கவாயாவுடன் நேரடியாகவும் சில மணிநேரங்களைச் செலவிட்டார்.
ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் பதவிக்கு பொண்டிங்கின் பெயர் நீண்டகாலமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## பேர்த் ஆடுகளத்தில் ஓர் இன்ஞ் புற்கள்?



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெறவுள்ள பேர்த் ஆடுகளத்தில் அண்ணளவாக ஓர் இன்ஞ் அளவுக்குப் புற்கள் விடப்பட்டுள் ளன என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன.
உலகிலுள்ள அதிவேகப் பந்து வீச்சு ஆடுகளங்களில் பேர்த் ஆடுகளமும் ஒன்று. அந்த ஆடுகளத்தில் புற்கள் விடப்படுவது இயல்பு. ஆனால் இம்முறை வழக்கத்தையும் விட சற்று அதிகமான புற்கள் விடப்பட்டுள்ளன. இதனால் ஆட்டத்தின் முதல் மூன்று நாள்களிலும் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கும் திரும்பல் தன்மைக்கும் முழுமையாக ஒத்துழைக்கும் என்று ஆடுகள அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. பந்துகளை திரும்பல் பெறச் செய்வதில் புவனேஸ்வர்குமார் வல்லவர். இதனால் அவர் பேர்த் ஆட்டத்தில் இடம்பெறவாய்ப்புண்டு. சமி அணியில் இருந்து நீக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. நாளை ஆரம்பமாகும் ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்றால் அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவதைக் கிட்டத்தட்ட உறுதிசெய்யும். இதனால் நாளை ஆரம்பமாகும் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி ஆஸ்திரேலியாவுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## உள்ளூர்த் தொடர்களிலும் டோனி களமிறங்க வேண்டும்

### அமர்நாத் தெரிவித்தார்

இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி உள்ளூர் ஆட்டங்களிலும் கட்டாயம் விளையாட வேண்டும் என்று முன்னாள் சகலதுறை வீரரும், தற்போதைய தேர்வாளருமான அமர்நாத் தெரிவித்தார்.
இந்திய அணியின் சாதனைத் தலைவராகத் திகழ்ந்த டோனி டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற பின் ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடி வருகிறார். தற்போது ரி-20க்கான இந்திய அணியிலும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.
ஏற்கனவே, பயிற்சிகள் இன்றி தவித்துவரும் டோனி, ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாடினால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடக்கும் உலகக்கோப்பை தொடரில் அவர் இடம்பிடிக்க வேண்டுமென்றால், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.
மேலும், டோனி உள்ளூர் தொடர்களில் விளையாடினால்தான் உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் இடம்கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவி வருகிறது. இந்த நிலையில் அமர்நாத், டோனி கட்டாயம் உள்ளூர் தொடரில் விளையாடவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அமர்நாத் கூறுகையில்; "ஒவ்வொரு தனிநபர்களும் வித்தியாசமானவர்கள். ஆனால், இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்று விரும்பினால், அவர்களின் மாநில அணிக்காக விளையாடவேண்டும். இது தொடர்பான கொள்கைகளை பிசிசிஐ முற்றிலும் மாற்ற வேண்டும். ஏராளமான மூத்த வீரர்கள் உள்ளூர் தொடர்களில் விளையாடுவதில்லை"- என்றார்.

## ஸ்ராக்கில் நம்பிக்கை இழந்தார் ஆஸ்திரேலிய தலைவர் பெய்ன்

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக்கின் பந்துவீச்சில் நான் எதிர்பார்த்ததைப் போன்று 'அனல் பறக்கவில்லை' என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் ரிம் பெய்ன்.
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.
'முதலாவது ஆட்டத்தில் ஏன் தோற்றோம் என்பதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. இந்திய அணியை முதல் நாள் ஆட்டத்தில் 200-210 ஓட்டங்களில் மட்டுப்படுத்தி விடலாம் என்று எண்ணினோம். அதிலிருந்து கொஞ்சம் நழுவியது. மேலும் முதல் இன்னிங்சில் நாங்கள் 230க்கும் அதிகமாக ஓட்டங்களை எடுத்திருக்க வேண்டும். இது போன்ற சில விடயங்களை இன்னும் கொஞ்சம் இறுக்க வேண்டியுள்ளது. மிட்செல் ஸ்ராக்கின் பந்துவீச்சில் தீப்பொறியெல்லாம் பறக்கவில்லை. முதலாவது ஆட்டத்தில் நான் பார்த்த வரையில், அவர் உண்மையில் சிறந்த திறனில்தான் (போர்ம்) இருக்கிறாரா என்ற எண்ணம் என் மனதில் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது' என்று பெய்ன் மேலும் தெரிவித்தார்.
முதலாவது ஆட்டத்தில் ஸ்ராக் ஒட்டுமொத்தமாக 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அதில் இரு இலக்குகள் மட்டுமே முக்கியமானவை. ஏனைய 3 இலக்குகளும் பந்துவீச்சாளர்களே. (ம)



NEW SCIENCE WORLD
VICTORY MUST

# NEW SCIENCE WORLD

Navalar Road, Brown Road Junction, Jaffna.
Telephone:- 077 3364055 / 021 221 6690

## G.C.E. (A/L) 2021 SCIENCE STREAM

| தமிழ்மொழி மூலம் | |
|---|---|
| பௌதிகவியல் | : திரு. R.குமரன் |
| | திரு. R.குகன் |
| இரசாயனவியல் | : திரு. டயஸ் |
| | திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | : திரு.N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் | : திரு.S.S. செந்தில்றாஜ் |

| English Medium | |
|---|---|
| Physics | : Mr.R.Kumaran |
| Chemistry | : Mr.Dias |
| Biology | : Mr.N.T.Gajenthiran |
| Com.Maths | : Mr.S.Krishna |

(IN/8681)(10)

**ஆரம்பம் :- 14.12.2018 வெள்ளி காலை 7.00 மணி**

அனுமதிகளை காலை 6.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்

NEW SCIENCE HALL

# NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA

## 2021 A/L

## கணித, உயிரியல் பிரிவு

### தமிழ்மொழிமூலம்

**PHYSICS**

திரு. S. சோதிலிங்கம் - திரு. N. கபிலன்
திரு. G. பிரபா - திரு. K. செல்வன்

**CHEMISTRY**

திரு. K. சிவத்திரன் - திரு. N. மகேஸ்வரன்
திரு. G. BENO - திரு. T. சுசாந்தன்

**BIOLOGY**

எமது வழமையான ஆசிரியருடன்
திரு. T. கெங்காதரன் - திரு. K. இராகவன்

**COM.MATHS**

திரு. P. செந்தில்நாதன் - திரு. S. சிவகரன்

### ENGLISH MEDIUM

**PHYSICS**

MR. S.SOTHILINGAM
MR. M. KUGANESWARAN

**CHEMISTRY**

MR. G.BENO
MR. N.MAHESWARAN

**BIOLOGY**

OUR USUAL TEACHER
MR. S.P.NAGANATHAN

**COM.MATHS**

MR. P.SENTHILNATHAN
MR. S.SIVAKARAN

**ஆரம்பம் : 14.12.2018 FRIDAY - 7.00 A.M**

https://facebook.com/new science.hall jaffna- 077 791 7611

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.